477

T.N.L.A. Debates

Official Report

6 MARCH

Vol. 33 No. 2

1987

D
V211,31'N87
N87.33.2
98795

வெளியீடு 21-11-1987 Issued 21-11-1987

529/AL/88

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு

477

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை மார்ச் 6, 1987—தொகுதி 33 எண் 2

Friday the 6th March 1987—Volume 33 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

D
V211,31 N87
N87.33-2
98795

## உள்ளடக்கம்.

6—3—1987

பக்கங்கள்.

1. **வினாக்கள்— விடைகள்—**
உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 195—227

தகவல் கோரல்—

2. வறட்சி நிலை பற்றி மைய அரசுக்கு அறிக்கை அளிப்பது குறித்து .. .. .. .. 227—230

3. அவை உரிமை மீறல் பிரச்சினை—
'அசைடு' பத்திரிகை மீது .. .. .. 231—233

4. கவன ஈர்ப்பு—
(அ) விளவங்கோடு வட்டத்தின் சில கிராமப் பகுதிகள் சித்தபேதி நோயினால் பாதிப்பு. 233—236
(ஆ) கோவை மாவட்டத்தில் சில நூற்பாலைகள் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பாதிப்பு 236—242

5. அறிக்கைகள் அளித்தல்—
பொது நிறுவனங்கள் குழு .. .. .. 242, 248

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—
விவாதம்—தொடர்ச்சி. 243—310
*டாக்டர் அ. பொன்னுசாமி .. .. 245—250
டாக்டர் கே. சௌரிராஜன் .. .. .. 250—260
*திரு வி. பி. சிந்தன் .. . .. .. 260—269
*திரு எம். இராசரத்தினம் . . .. 269—274
*திரு எ. ஏஸ். ஏ. ஆறுமுகம் .. .. .. 274—284
திரு அ. மலர்மன்னன் .. . .. 284—298
*திரு கே. எஸ். எம். இராமச்சந்திரன் .. 298—304
திரு கு. தமிழரசன் .. .. .. .. 304—306
திரு கே. பாலாஜி .. .. .. .. 306—308
*திரு கா. சொர்ணலிங்கம் .. .. .. 308—310

7. அரசினர் தீர்மானம்—
விதி 32-ஐத் தளர்த்தல் .. .. .. 310

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 310—311

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

19[illegible], மார்ச் 6, வெள்ளிக்கிழமை

மாசி 22, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

> ''நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
> ஒல்லும்வாய் ஊன்றும் நிலை''.

நட்புக்குச் சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும்போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மார்க்கெட்டிங் சங்கம்**

*81—(*வினா எண். 10332)* **திரு. மா. சுந்தரதாஸ் :** *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில் இயங்குகின்ற மார்க்கெட்டிங் சங்கத்தில் உற்பத்தி செய்கின்ற தானியங்கள் சென்னை போன்ற தலைநகரங்களில் விற்பனைக்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் கல்குளம் விளவங்கோடு தாலுக்கா கூட்டுறவு விற்பனைச் சங்கம் இயங்கி வருகின்றது. இச்சங்க விவகார எல்லையில் விளையும் நல்ல மிளகு, கிராம்பு ஆகியவை சென்னையிலும் அன்னாசி பழரச ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் கேரளம், கர்நாடகா ஆந்திராவிலும் சென்னையில் பார்க் டவுன் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மூலம் விற்பனைச் செய்யப்படுகின்றது. இவை தவிர சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, மயிலாடுதுறை ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு பேரங்காடிகள் மூலமும் விற்பனை செய்யப்

பட்டு வருகிறது. மரச்சீனி மாவு தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு தீப்பெட்டி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், கூட்டுறவு அச்சகங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொருட்களை மற்ற மாநிலங்களுக்கும் அதாவது, டெல்லி, பம்பாய் போன்ற மாநிலங்களுக்கும் அனுப்பினால் அதிகமான பிசினஸ் கிடைத்து அதிலிருந்து அதிகமான லாபம் ஈட்ட முடியும், ஆகவே, அதுபோல் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிற திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களில் இப்படிப்பட்ட பண்டங்களுக்கு தேவை இருக்குமானால் அங்கே அனுப்பி வைப்பதில் நமக்கு ஒன்றும் இடர்பாடு இல்லை. ஆக இந்த பண்டங்கள் எல்லாம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக விற்பனை ஆகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு இந்த மாநிலத்தினுடைய பொருட்கள் வெளியே போகின்றன என்பதில் நமக்கு மகிழ்ச்சி தான். அதுவும் கூட்டுறவு முறையில் வாணிகம் பெருக வேண்டும் என்பது தான் நம்முடைய குறிக்கோள். 1985–86-ம் ஆண்டு மட்டும் விற்பனையானது மொத்தம் தரமான மிளகு 17.6 டன்கள், கிராம்பு 1.5 டன்கள், அன்னாசி பழரசம் 43.5 டன்கள், மரச்சீனி அதாவது மரவள்ளி கிழங்கிலிருந்து எடுக்கப்பட்டது 46 டன்கள் ஆக மொத்தம் 1 8.6 டன்கள் ஆகும். இதன் மூலம் கிடைத்த விற்பனையின் மதிப்பு 15 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் ஆகும். இந்த விற்பனை மேலோங்கவேண்டும் என்பது தான். பிற மாநிலங்களுடைய தேவையை கணக்கிட்டு நாம் விற்பனை செய்ய வேண்டியிருக்கிறது.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் வேலை செய்யும் ஊழியர்கள் எத்தனை பேர்? கடந்த ஆண்டு லாபம் எவ்வளவு? இதை மேலும் விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாணபுமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத தலைவா அவாகளே, இந்த கூட்டுறவு சங்கத்தில் லாப நட்ட கணக்கு தெரியவில்லை. ஆனால் பல்வேறு இடங்களுக்கு தேவைப்படுகின்ற இடங்களுக்கு மட்டும் இந்த விற்பனைப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. தேவைகள் மிக மிக, இங்கிருந்து உற்பத்தி செய்கின்ற அளவும் மிகுமானால், அதை அனுப்பி வைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.





**திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில் இயங்கி வருகின்ற கல்குளம் விளவங்கோடு தாலுக்கா கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உற்பத்தி ஆகின்ற பழரசம் அதாவது கன்னியாகுக் என்ற அந்த பழரசம் அதனுடைய தரம் நம்முடைய தனியார் தயாரிக்கின்ற பழரசத்தை விட தரமாகவும், சிறப்பாகவும், சுவையாகவும் இருப்பதால் தமிழகம் முழுவதும் சென்னை மாநகர் போன்ற மிகப் பெரிய பகுதிகளில் அதை விற்பனை செய்கின்ற அளவுக்கு திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் ஏதாவது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி அவை சென்னையிலும் மற்ற மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை, பார்க்டவுன் மொத்த கூட்டுறவு பண்டகசாலையிலும் விற்பனைசெய்யப்படுகிறது; கேரளம், கர்நாடகம், ஆந்திராவிலும் விற்பனை செய்யப்படுகின்றன. கேரளம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, மயிலாடுதுறையில் இருக்கின்ற பேரங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் தரம் மற்றவை உயர்ந்திருந்தால் மக்களும் விரும்பி வாங்குவார்கள். தேவை அதிகப்படும்போது, உற்பத்தியை அதிகப்படுத்த வாய்ப்பு ஏற்படும்.

477

## மதுரை வடக்கு தாலுக்காவில் வரி வஜா

82—(*வினா எண். 10840)—**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு தாலுக்கா வரிச்சியூர், பறையங்குளம், வெள்ளாங்குளம் ஆகிய கிராமங்களில் வரி வஜா செய்யக்கோரி அந்தப் பகுதி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோரிக்கை ஏதும் வரவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் கடுமையான வறட்சியால் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் வரி கட்டுவதற்கு வலுவற்ற நிலையில் இருக்கிறார்கள். அத்தகைய பகுதிகளை யெல்லாம் ஆய்வு செய்து கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் வரி வஜா செய்ய வேண்டியுள்ளதை இனிமேலாவது அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே இருக்கின்ற வறட்சி நிலைமைகள் எல்லாம் ஆராயப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டும் இப்படிப்பட்ட நிலைமைகள், பல்வேறு மாவட்டங்களின் வறட்சி நிலைமைகள் ஆராயப்பட்டு, ஆங்காங்கே வறட்சி நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற நிலையில் 25—7—1986-ல் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர் ஆய்வு செய்யப்பட்டு, விளைச்சல் 37 பைசாவுக்கும் குறைவாக இருந்தால், அப்படிப்பட்ட இடங்களில் வரி வஜா செய்து, கூடுதல் வரி, நில வரி, உள்ளூர் வரி, உள்ளூர் செஸ் மேல் வரி, கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர் வரி, சிறப்புத் தண்ணீர் வரி, அரசுக் கடன்கள் வசூலிப்பதை அடுத்த பசலிஆண்டுக்கு தள்ளிப்போடவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் சென்ற ஆண்டு முடிவுகள் எடுக்கப்பட்டன. அதே தன்மையின் அடிப்படையில் சில நார்ம்ஸ் இருக்கின்றன. அந்த நார்ம்ஸ் அடிப்படையில் கணக்கிடும்போது எந்தெந்த இடங்களில் எந்த அளவிற்கு தள்ளுபடி செய்ய வேண்டுமோ, அவ்வாறு தள்ளுபடி செய்வதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

**திரு. ஆ. சிவக்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதமே இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களிடம் எங்களுடைய தொகுதியின் ஒரு பகுதி கடுமையான வறட்சிக்கு உள்ளாகி இருக்கிறதென்பதை மனு மூலமாக நான் தந்திருக்கிறேன். இங்கே கவன ஈர்ப்பு வினாவாகவும் தந்திருக்கிறேன். ஆகவே என்னுடைய தொகுதியின் வடக்கு தாலுக்காக்களில், முழுவதுமாக வரி வஜா செய்கின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, எந்தெந்த பிர்க்காக்களை வரி வஜா செய்ய அரசு முடிவு செய்துள்ளது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதி மட்டுமல்ல, இந்த அவையில் வீற்றிருக்கின்ற பல்வேறு உறுப்பினர்களுடைய தொகுதிகளும் ஆராயப்பட்டு வருகின்றன.





சென்ற ஆண்டு கூட மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர் ஆய்வு செய்து உசிலம்பட்டி, திருமங்கலம் மற்றும் பெரியகுளம் வட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மேற்படி வட்டங்களில் நிலவரி போன்றவைகளை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டார். அதன் அடிப்படையில் அந்த வட்டங்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆகவே ஆய்வு அறிக்கைகள் வந்து சேர்ந்த பிறகு, அரசு ஆய்வு செய்து அவற்றை தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நான்காவது ஆண்டாக இந்த ஆண்டும் பருவ மழைபொய்த்து விட்டதன் காரணமாக, மதுரை மாவட்டம் உள்ளிட்ட தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களும் வறட்சியின் கோரப் பிடியில் சிக்கியிருக்கின்ற சூழ்நிலையில் பஞ்சநிலை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்ச உணர்வு ஏற்படும் நிலையிருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது சென்ற ஆண்டு வறட்சிப் பகுதிகளில் வரி வஜா செய்யப்பட்டது என்று அதே பதிலைத்தான் சொன்னார்கள். ஆகவே ஜூலை மாதம் என்று சொல்கின்ற நேரத்திலே வரி வசூல், கூட்டுறவுக் கடன் எல்லாம் முடிந்துவிடும். ஆகவே காலாகாலத்திலே நாம் அறிவித்தால்தான் மக்கள் அதிலிருந்து தப்பிக்க முடியும். ஜூலை மாதம் நாம் அறிவிப்பதற்குள்ளாகவே அத்தனை வசூலும் முடிந்து விடுகின்ற காரணத்தினால், உடனடியாக போர்க்கால அடிப்படையிலே, இருக்கின்ற பிரத்யட்ச நிலைமைகளை உத்தேசித்து உடனடியாக இந்தக் கூட்டத் தொடருக்குள்ளாகவே வறட்சிப் பிரதேசம் என்று அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற சூழ்நிலைகளை நாளை மறுநாள் என்னுடைய உரையிலே எடுத்துச்சொல்வேன். அப்பொழுது நிலைமைகளை அறிவிப்பேன். அதற்குபிறகு என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதையும் எடுத்துச் சொல்வேன்.

**திரு. க. நரசிம்மபல்லவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உத்திரமேரூர் தொகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட வயல் வெளிகள் சாவியாகிவிட்டது. இதனை அரசு அதிகாரிகள் பதிவு செய்து இருக்கிறார்கள். இருந்தாலும் வரிவசூல் செய்வதை இன்னும் நிறுத்தவில்லை. ஆகவே இதை பரிசீலித்து உடனடியாக வரி வசூல் செய்வதை நிறுத்துவதற்குண்டான வாய்ப்பினை அளிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்..

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னேன் வரி வஜா செய்வதற்கு சில முறைகள் இருக்கின்றன. அந்த முறைகளுடைய அடிப்படையில் அதுபற்றிய அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வந்து, வருவாய்த் துறையினுடைய சிறப்பு ஆணையாளர்கள் ஆராய்ந்து பார்த்து, அரசுக்கு வந்து அரசு அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த முறைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டதற்கு பிறகுதான் அதுபற்றிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். அந்த ஆய்வு அறிக்கைகள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை வந்ததற்கு பிறகுதான் முடிவு செய்யப்படுமே தவிர, ஒவ்வொருவருடைய விருப்பத்திற்கிணங்க இங்கே பதில் சொல்வதற்கியலாது.

**திரு. எஸ். சிவராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியின் காரணமாக வரி வஜா செய்வதைப் பற்றி நாளைய உரையிலே அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாக கூறவிருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த முறையிலே ஒன்று தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறட்சி என்று அறிவிக்கப்படாமல் இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டங்களில் எங்களது மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்து கொள்ளாதது இரண்டாவது. ஆனால் எங்களுடைய செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம் போன்ற பகுதிகளில் மழை இந்த ஆண்டு சுத்தமாக இல்லை. ஏரி, குளங்களில் கூட தண்ணீர் இல்லை. இந்த நிலையில் இருக்கின்றபோது 5 ஆம் நம்பர் நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை. அந்தக் காரணத்தினால் இங்கே வறட்சி என்று அறிவிப்பதற்கு அரசு அதிகாரிகள் தயங்கிக்கொண்டு இருக்கிறார்கள். இதனை அடிப்படையாக வைத்து, தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், ரிஷிவந்தியம், செஞ்சி, திண்டிவனம் போன்ற பகுதிகளை வறட்சி பகுதியாக அறிவிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விளக்கக் குறிப்புகள் எல்லாம் எந்தெந்த மாவட்டத்தில் எவ்வளவு மழை பெய்தது, எவ்வளவு பொய்த்தது என்ற விவர குறிப்புகளையெல்லாம் நான் 2, 3 நாட்களுக்குப் பிறகு என்னுடைய உரையிலே தெளிவாக குறிப்பிடுகிறேன்.

**திரு. ப. தீர்த்தராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தமிழகத்திலேயே தர்மபுரி மாவட்டம் கடுமையான வறட்சிக்கு உள்ளாகியது என்பது அரசுக்குத் தெரியும். தெரிந்து உரிய நடவடிக்கை எடுத்தது. அப்படி எடுக்கின்ற நேரத்திலே வரி வஜா செய்வதாக அறிவித்தது. அறிவிக்கின்ற





போது பசலி முடிந்துவிட்டது. முடிந்துவிட்ட நேரத்தில் வசூல் ஏறக்குறைய முழுவதுமாக இருந்தது. இவ்வாண்டு வசூலுக்குச் செல்லும்போது அதை முத்ரா செய்து வைப்பதுதான் முறை. இருந்தாலும் கேட்கின்றபோது போன ஆண்டு வரி வஜா செய்யவில்லை, மீண்டும் இவ்வாண்டு வரி செலுத்த வேண்டும் என்று கேட்கின்றார்கள். இதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அந்த நிலைமைகளை ஆராய்ந்து அறிந்து எந்தச் சூழ்நிலையில், ஏன் அந்த நிலை ஏற்பட்டது என்பதைச் சொல்கிறேன்.

**திரு. ஆ. பிரேம்குமார் :** பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டமானது அந்த மாவட்டம் பிரிக்கப்பட்டதிலிருந்து மிகவும் கடுமையான வறட்சியாக உள்ளது. மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கும் இது நன்றாகத் தெரியும். ஆத்தூரும் அதே நிலையில்தான் இருக்கிறது. திண்டுக்கல் பகுதியில் சிறுமலையில் வறட்சி மிக மிக கடுமையாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே குடிப்பதற்கு கூட தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. இந்தச் சமயத்தில் வரி வசூல் செய்வதால் மக்களால் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே இதனை நினைவில் கொண்டு, அரசு வரி விலக்கு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம் பிரிக்கப்பட்டதிலிருந்து வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பிரிக்கப்பட்டதற்கும் இந்த வறட்சி ஏற்பட்ட நிலைக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. ஆத்தூர் என்னுடைய தொகுதி என்பதால், வறட்சி அதைச் சுற்றி வராது. எல்லா தொகுதிகளுக்கும் வருகின்ற நிலைமை தான் வரும். ஆகவே இந்த வறட்சியினுடைய அளவு என்ன, நிலைமை என்ன, பாதிப்பு என்ன, மழை குறித்த அளவு என்ன, விளைவு என்ன என்ற விவரக் குறிப்புகளை வைத்துத்தான் நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதுபற்றிய முழு விவரக் குறிப்புகளின் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் என்னுடைய பதிலுரையில் விளக்குகிறேன்.

**திரு. கே. முத்துவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் கடந்த 4 ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்சமயம் பழைய பாக்கி என்று நில வரியை கெடுபிடி வசூல் செய்வது அரசுக்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 6

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கெடுபிடி வசூல் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. சரியாக வசூல் ஆகவில்லையென்ற கணக்கு தான் எனக்கு வந்து கொண்டிருக்கிறதே தவிர, நியாயமாக ஆக வேண்டிய வசூல் கூட ஆகவில்லையென்று தான் கணக்கு வந்து கொண்டிருக்கிறது. நான் முதலிலே சொன்னபடி அதற்கென்று நியதிகள், முறைகள், மற்றவை எல்லாம் இருக்கின்றன. அவற்றினுடைய அடிப்படையிலே தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கு பரிந்துரைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அது ஆயப்பட்டு அதனுடைய அடிப்படையிலே முடிவுகளை அரசு எடுக்கும் என்று நான் சொல்லியிருக்கிறேன். அது பற்றிய ஆய்வுகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 83 முதல் 85 வரை, மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப் பெறுகின்றன.

## திருநெல்வேலி மாவட்ட தலைமை மருத்துவமனை

86—(*வினா எண். 1494)—திரு. டி, ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பிரிக்கப்படும் போது மாவட்ட தலைமை மருத்துவமனையை தென்காசியில் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிதாக அமைக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாவட்ட மருத்துவர் அலுவலகமும் மாவட்ட தலைமையிட மருத்துவமனையும் தென்காசியில் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட மருத்துவமனையை என்னுடைய பகுதியில் ஆரம்பித்ததற்காக அரசுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது இந்த மாவட்ட மருத்துவமனை அமைப்பதற்கு இட ஆர்ஜித வேலைகள் எந்த அளவில் இருக்கின்றன, கட்டுமான பணிகள் எப்பொழுது தொடங்கும் என்பதை நான் அறிய ஆவலாக இருக்கிறேன்.



1987 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற படுக்கை வசதிகளை அதிகப்படுத்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நில ஆர்ஜிதம் பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சேகரித்துத் தரப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி அடிக்கடி மின் பற்றாக்குறை ஏற்படுகிற ஒரு இடம். ஏற்கனவே மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்கெல்லாம் ஜெனரேட்டர் கொடுக்க வேண்டுமென்று அரசு அளவிலே ஏற்றுக் கொண்டதாக இந்த அவையிலே பல முறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அந்த மாவட்ட மருத்துவமனைக்கு உடனடியாக—கட்டட வேலைகள் துவங்குவது ஒரு புறம் இருந்தாலும் கூட—ஜெனரேட்டர் வழங்க, அதனுடைய முக்கியத்துவத்தையும் அவசரத்தையும் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் உத்தர விடுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

## சண்முகா காலேஜ் ஆப் பார்மசி, குடந்தை

87—(*வினா எண். 2844)—திரு. எஸ். செல்லமுத்து, திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை நகரில் ஷண்முகா காலேஜ் ஆப் பார்மசி என்ற கல்லூரி துவக்கப்பட்டு அரசு அங்கீகாரம் கோரி முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை. ஷண்முகா காலேஜ் ஆப் பார்மசி என்ற கல்லூரிக்கு மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வரை தேர்வாளராக இருக்க அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்தது.

(ஆ) மேற் குறிப்பிட்ட கோரிக்கையை பரிசீலனைக்குப் பிறகு அரசு நிராகரித்தது.

[1987 மார்ச் 6

**திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குடந்தை பகுதிக்கு வந்த பொழுது அவர்களிடம் குடந்தை பகுதி, தொழிலில் மட்டுமல்லாமல், கல்வியிலும் பின் தங்கிய பகுதியாக இருக்கிறது என்று தெரிவித்து கேட்டுக் கொண்டதன் பேரில் தான் இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், ஏதோ அரசியல் காரணங்களுக்காக அந்த அனுமதி மறுக்கப்பட்டு மாணவர்கள் ஓராண்டு படித்து அவர்களுடைய வாழ்க்கை வீணாகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அந்தக் கல்லூரியை மீண்டும் துவக்க, அரசு மறு பரிசீலனை செய்யுமா ? அல்லது படித்த மாணவர்கள் வேறு கல்லூரிகளிலே இந்தப் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்களா ? ஓராண்டுப் பாடங்கள் படித்து, லேபரட்டரி பயிற்சிகள் எல்லாம் முடிந்து அவர்கள் பரீட்சை எழுதத் தகுதியானவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய எதிர் காலம் இருண்டு கொண்டிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டாவது, வேறு கல்லூரியிலாவது அந்த செட் மாணவர்கள் மட்டும் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்களா ? சௌராஷ்டிரா சமூகத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதில் அரசியல் காரணம் எதுவுமே கிடையாது என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, அரசு அங்கீகரிக்காத ஒரு கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கக் கூடாது என்று கடிதம் எழுதியிருந்தும் இப்படிச் சேர்க்கிறார்கள். மாணவர்களைச் சேர்த்துவிட்டு, பயிற்சி அளித்து விட்டோம், ஆகவே, மாணவர்களை இந்த ஆண்டு பரீட்சை எழுத அனுமதியுங்கள் என்று கேட்பது வாடிக்கையாகிவிட்டது. அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பதற்காகத்தான் முடியாது என்று சொன்னோம். மாணவர்கள் சார்பாக, மாணவர்கள் தலைவர்களை விட்டு நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது.

[முற்பகல் 10-20.]

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அங்கீகாரம் அளிக்காமல், பல்வேறு கல்லூரிகள் அல்லது பள்ளிகள் இப்படி நடைபெற்றுக் கொண்டு, அவர்கள் எக்ஸாமினேஷன் தேவை என்று தேர்வுக்கு மட்டும் அங்கீகாரத்தைப் பெற்று, அதற்குப் பிறகு அதை ரெகக்னைஸ் செய்வது—அங்கீகாரம் பெற்று விடுவது என்ற முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து தெரிய வருகிறது. அப்படியானால், அவர்கள் ஆரம்பக் கட்டத்திலேயே மாணவர்களை சேர்த்துக் கொண்டு



1987 மார்ச் 6]

நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்கிற போதே, அவர்கள் மீது கிரிமினல் ஆக்ஷன் போன்ற நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற சட்டத்தில், அப்படி நடவடிக்கை எடுக்க அரசுக்கு அதிகாரம் இல்லை. இருந்தாலும் கூட, இப்படி மாணவர்களை, பார்மசியிலே மட்டுமல்ல, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே கூட சேர்த்து விடுகிறார்கள். பிறகு அரசாங்கத்திடமிருந்து, இந்த முறையாவது பரீட்சை எழுத அனுமதியுங்கள் என்று கேட்கிறார்கள். ஒரு முறை அனுமதி கொடுத்தால், அடுத்த முறையும் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இப்படி தொடர்ந்து தவறான முறை கையாளப்படுவதால் அரசு அதை மறுத்திருக்கிறது.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடந்தை நகரில், இந்தக் காலேஜ், தனியார்கள் அனுமதி வாங்காமல் நடத்தியதனுடைய விளைவாக இன்றைக்கு மாணவர்களுடைய படிப்பில் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு கூட, தமிழகத்தில் ஆசிரியர் பயிற்சியில் கூட, நூற்றுக் கணக்கான இடத்திலே துவக்கப்பட்டு, அது மறுபடியும் பரீட்சை எழுதுவதற்கு முடியாமல் அந்த மாணவர்கள் அதிகம் பேர் கஷ்டப்பட்டு அமைச்சரைச் சந்தித்து, மறுபடியும் பரீட்சை எழுதுவதற்கான ஒரு வாய்ப்பை அரசு அளித்தது. நான் கேட்டுக்கொள்வது எல்லாம், அரசு பள்ளிகள் இருக்கிற போது, அரசுக்குத் தெரியாமலேயே தனியார்கள் சில பேர் சில முக்கியமான நபர்கள் இப்படி கல்வித் தரத்தை சீரழிக்கக் கூடிய அளவுக்கு இருக்கக் கூடிய நபர்கள் மீது, அரசு உரிய நடவடிக்கை எடுத்து எதிர்காலத்திலாவது இப்படி மாணவர்களுடைய படிப்பை கெடுக்காத அளவுக்கு, கெடுப்பவர்கள் மீது அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான முன்னுதாரணத்தைக் காட்டி, அதையே பின்பற்ற வேண்டும், தொடர்ந்து செய்ய வேண்டும் என்று சொல்வது முறையாகாது. அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இப்படி தவறாக பள்ளிகளை ஆரம்பிப்பதும், மாணவர்களைச் சேர்ப்பதும், அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடந்தையிலே இருந்த அந்த அமைப்பில் மாணவர்கள் தான் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நிர்வாகிகள் செல்லவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

அனுதாபத்தோடு அவர்களுக்கு இந்த ஆண்டு தேர்விற்கு அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, குடந்தையிலே அரசு சார்பிலேயாவது இது போன்ற கல்லூரியை அமைக்க உத்தேசம் உண்டா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பிலே அப்படி குடந்தையிலே ஆரம்பிக்கின்ற உத்தேசம் தற்போது இல்லை. ஆனால் மாணவர் தலைவர்கள் சென்று வழக்கு போட்டு இருக்கிறார்கள். மாணவர்கள் தலைவர்களாக சென்றிருக்கிறார்களா, சேர்ந்து கல்லூரி முதல்வரும் போட்டிருக்கிறாரா என்பது வேறு விஷயம். தலையிட விரும்பவில்லை ஆனால் வழக்கு நீதி மன்றத்திலே இருக்கிறது, இப்போது அதைப்பற்றி சொல்ல விரும்பவில்லை.

## ஒரத்தநாடு அரசு ஆஸ்பத்திரி

**88**—(*வினா எண். 9259) **திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு அரசு ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே கருவி வைக்கவும், அறுவை அரங்கம் கட்டவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கு மட்டும், ரூ. 3.50 இலட்சம் செலவில் கட்ட 1986–87 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டப் பணியாக செயற்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய 'எக்ஸ்ரே' கருவி வைப்பதற்கு அரசு ஆணை இடப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத் தான் இப்போது படித்தேன். கேள்வியே, எக்ஸ்ரே கருவி வைக்கவும், அறுவை அரங்கம் கட்டவும் அரசின் செயற் குறிப்பு உள்ளதா என்பது. 'ஆம்' என்று நான் பதில் அளித்திருக்கிறேன்.

**திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு தாலுகா அரசு மருத்துவமனையில் இடம் குறைவாக இருப்பதால் பக்கத்திலே இருக்கின்ற கால்நடைப் பண்ணையிலிருந்து அரசுக்கு அதைக் கொடுக்க கால்நடை இலாகாவிலிருந்து ஏதேனும் உத்தரவு வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இப்போது அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் தருகிறேன்.

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து வட்டங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளிலே லேபரட்டரி, எக்ஸ்ரே யூனிட், ப்ளட் பாங்க் மற்றும் ஆப்பரேஷன் தியேட்டர் போன்ற அத்தியாவசியமான பகுதிகளை துவங்குவதற்கு அரசு ஒரு கொள்கை முடிவு எடுக்க முன் வருமா ? ஏனென்றால், பல்வேறு தாலுகா மருத்துவமனைகளிலே இப்படிப்பட்ட யூனிட்டுகள், சில இடங்களில் இல்லை. எனவே, இதுபற்றி கொள்கை முடிவு எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், தாலுகா மருத்துவமனைகளில் எல்லாம் இந்த வசதிகள் இருக்க வேண்டும் என்பதற்காக கொள்கை முடிவு எடுத்திருக்கிறார்கள். லேபரட்டரியைப் பற்றிக் கூட சொன்னார்கள். மூலக் கேள்வியில் இல்லையென்றாலும், நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். லேபரட்டரிகளைப் பொறுத்தவரையிலும் ரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை செய்வது போன்றவற்றை ஆரம்ப சுகாதார நிலையங்களிலே கூட வைக்கலாம் என்பதைப் பற்றிக்கூட அரசு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. அதற்கு வேண்டிய நிதி ஆதாரத்தைப் பொறுத்து விரிவுபடுத்த இருக்கிறது.

**திரு ப. ந. இராமச்சந்திரன் :** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா தலைமை மருத்துவமனைகளில் இப்படிப்பட்ட வசதி குறைவு இருப்பதையும், இட வசதி பற்றாக் குறை இருப்பதையும் அறிய மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவை அரசு நியமிக்குமா ? அதிகாரிகள் சில நேரங்களில் கவனக் குறைவால் அறிக்கையைத் தருகிறார்கள். பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு இடவசதி கேட்டு பொதுப் பணித் துறைக்கு அனுப்பப்பட்டு, அந்த செயற்குறிப்பு பொதுப் பணித் துறையிடமிருந்து வராததால், அந்த இடத்தை மாற்றிக் கொடுக்காமல் இருக்கிறார்கள். பட்டுக்கோட்டை தலைமை மருத்துவமனைக்கு 20 வார்டுகள் கொண்ட கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டும், அது கட்டப்படாமல் இருக்கிறது. அதற்கு இடம் கொடுத்து, விரைந்து கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 6

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட முதல் கேள்விக்குப் பதில் சொல்கிறேன். தனியாக ஒரு குழு நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓய்வு பெற்ற சிறப்பான சில மருத்துவர்களைக் கொண்ட குழுவை அமைத்து, தமிழ்நாடு முழுவதும் எந்தெந்த மருத்துவ மனைகளில் குறைகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து, அது சம்பந்தமான ஒரு அறிக்கை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு, அவர்களும் அறிக்கையை அளித்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பட்டுக்கோட்டை விவரம் பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனியாக கேள்வி போட்டால், விவரம் சேகரித்து பதில் தருகிறேன்.

**திரு. ஆர். தியாகராசன்** : மரியாதைக்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு நீரிழிவு நோய் இந்தியாவில் 40 சதவீதம் பேர்களுக்கு இருக்கிறது. நீரிழிவு நோய்க்கு வேண்டி இரத்த பரிசோதனை பண்ணும் கருவி, ஒவ்வொரு தாலுகா மருத்துவ மனையிலும் வைப்பதாக ஏற்கெனவே சொன்னார்கள். ஒரு வருஷம் ஆகியும் டெஸ்ட் செய்வதற்காக சாமான்கள் வரவில்லை. விருத்தாசலத்தில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் இந்த நீரிழிவு நோய் இருக்கிறது. எனக்கே சர்க்கரை வியாதி இருக்கிறது. தயவுசெய்து நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கான தக்க ஏற்பாடுகளைச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, டானிடா திட்டத்தின் கீழ் தென் ஆற்காடு, சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறுநீர், இரத்தம் பரிசோதனை செய்யும் கருவிகள் வாங்கி, டெக்னீஷியன்களும் இருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் அரசின் சார்பில் செய்யலாம் என்றுகூட முதலமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கா. சொர்ணலிங்கம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா மருத்துவமனைகள் அனைத்திலும் இரத்தம் சேமிக்கின்ற நிலையத்தை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ? தேவகோட்டை அரசு மருத்துவமனையிலிருந்து இப்படி மனுக்கள் வரப்பட்டிருக்கின்றதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி குறித்து தனியாகக் கேட்டால், விடை அளிக்க முடியும்.



1987 மார்ச் 6]

**திரு. டி. தீர்த்தகிரிகவுண்டர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டானிடா திட்டம் என்பது சில மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றது. மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் இல்லை. மாநில அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டானிடா திட்டம் தற்போது தென் ஆற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம் ஆகியவற்றில்தான் செயல்படுத்தப் படுகின்றது. மேற்கொண்டு மற்ற மாவட்டங்களில் விரிவாக்குவதற்கு மத்திய அரசோடு பேசிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கமும் அதை ஒப்புக் கொண்டிருக்கிறது. டென்மார்க் அரசும் இதற்கு தன் ஒப்புதலைத் தெரிவித்திருக்கிறது. இறுதியான உத்தரவு இன்னும் வரவில்லை. இந்தத் திட்டத்தின்கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்த வசதிகளை வைக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் ; சொல்லியிருக்கிறார்கள். நிதி ஆதாரத்திற்கு ஏற்றவாறு, இது விரிவாக்கப்படும்.

**திரு. துரை கோவிந்தராசன்** : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக தாலூகா தலைநகரங்கள் வளர்ந்து வருகின்ற நேரத்தில், அங்கே தாலூகா மருத்துவமனைகளில் தரப்படுகின்ற மருந்துகள் அந்தந்த ஆண்டில் ஜனத் தொகையின் அடிப்படையில் தரப்படுகின்றதா ? அல்லது 10 ஆண்டு, 5 ஆண்டுகள் என்று கணக்கிட்டு, அந்த தாலூகா தலைநகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் மருந்துகள் ஏறத்தாழ வழங்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தமில்லை என்றாலும், தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட ஒரு தவறான எண்ணம் மக்களிடையே இருந்துவிடக் கூடாது என்பதற்காக இதற்கு விடை அளிக்கிறேன். நான் பல தாலுகா மருத்துவமனைகளை பரிசோதனை செய்திருக்கிறேன். மருத்துவமனைகளுக்கும் நேரில் சென்றிருக்கிறேன். எவ்வளவு மருந்துகள் அங்கிருக்கின்றன என்பதையும் பார்த்திருக்கிறேன். அங்கே ஏராளமான மருந்துகளை வைத்திருக்கிறார்கள். 3 மாதங்களுக்கு ஒரு முறை இன்டெண்ட் போட்டு, மருந்துகள் வரவழைக்கப்பட்டு தேவையான அளவில் இருக்கின்றன. ஆண்டில் 4 முறை இன்டெண்ட் போடுகிறார்கள். அவ்வப்போது சோதனை போடும் இடங்களில், ஆறு மாதங்களுக்குத் தேவையான மருந்துகளை வாங்கி வைத்திருக்கிறார்கள். மருந்துகள் இல்லையென்று எந்த மருத்துவராவது

[1987 மார்ச் 6

சொல்வாரானால், அரசுக்கு பொது மக்கள் புகார் தெ வித்தால், நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

89—(*வினா எண். 9674)—திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையை விரிவு படுத்த திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ & ஆ) தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(முற்பகல் 10-30)

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். அம்பாசமுத்திரத்தைச் சுற்றிப் பல நூற்றுக் கணக்கான கிராமங்களும் நகரங்களும் இருக்கின்றன. தற்சமயம் அங்கே உள்ள தாலுகா மருத்துவமனை மிகவும் பழமையானது, நூற்றாண்டுக்கு முற்பட்டது. அங்கே நவீன அறுவை கிசிச்சை செய்யக்கூடிய கருவிகளும் இல்லை. சிறந்த கட்டிட வசதிகளும் இல்லை என்ற காரணத்தினால் அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த உடனடியாக மறுபரிசீலனை செய்ய நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள தகவல்படி அந்த மருத்துவ மனையிலே அறுவைசிகிச்சை குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்படுவதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதை எழுதித் தருவார்களானால் அது பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே போதுமான கட்டிடங்கள் இல்லை. அதற்குக் கட்டிடங்கள் வேண்டிய அளவுக்குக் கட்டுவதற்கு பக்கத்திலே நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன். அது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுபற்றிய விவரங்களை எழுதித் தருவார்களானால் அரசு பரிசீலிக்கும்.



1987 மார்ச் 6]

### தமிழ்நாட்டில் சுயநிதி மருத்துவக் கல்லூரி

90—(*வினா எண். 12168)—திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மூன்று சுய நிதி மருத்துவக் கல்லூரிகளும், மத்திய மருத்துவக் குழுவின் அனுமதியோ அல்லது மத்திய அரசின் அனுமதியோ பெறாமல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என மத்திய சுகாதார அமைச்சர் நாடாளுமன்ற மேலவையில் எழுத்து மூலம் தெரிவித்துள்ளது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 91 முதல் 94 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

### தமிழகத்தில் சாதியின் பெயரில் சங்கங்கள்

95—(*வினா எண். 2283)—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சாதியின் பெயரால் உள்ள சங்கங்களை தடை செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) இதுகுறித்து மத்திய அரசிற்கு தமிழக அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள அனைத்துச் சாதிகளும் சங்கங்கள் வைத்திருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியும்

என்று கருதுகிறேன். அந்தச் சங்கங்களால் இனக்கலவரங்கள் உண்டாக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டு அதன்மூலம் சமுதாயக் கேடுகளை உருவாக்கி ஒற்றுமையைக் குலைக்கிற நிலை ஏற்படுவதால் அந்த சாதி சங்கங்களை அடக்குவதற்கு தடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதி சங்கம் வைத்துக் கொள்வது அரசியல் சாசன அடிப்படை உரிமைகளில் ஒன்றாக கருதப்படுகிறது. ஆகவே அரசியல் சானத்தைத் திருத்துவதற்கு முதலில் மைய அரசு முன்வரவேண்டும். எல்லோரும் ஏகோபித்து முடிவு எடுத்தால் அதைப்பற்றி முடிவு எடுக்கலாம்.

**திரு. ஜி. கே. ஜே. பாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவண் அரசு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இந்தப் பேரவையிலேயே சாதியை ஒழிக்கின்ற பணியை தமிழக தலைமை அமைச்சர் செய்துவருகிறார்கள். தெருவெல்லாம் சாதி ஒழிந்திருக்கிறது. ஆகவே சாதி சங்கங்களை ஒழிப்பதற்கு அரசே தீர்மானத்தைக் கொண்டுவருமா? அப்படிப்பட்ட தீர்மானத்தைக் கொண்டுவருகிற வாய்ப்பை அரசு ஏற்படுத்துமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி நம் கையிலே இருக்கிறது. அப்படிப் பெயர்களை வைப்பதும் எடுப்பதும் நம் கையில் இருக்கிறது. பொதுவாக மாநிலத்தில் உள்ள சாதிகள் சங்கங்கள்ள வைத்துக் கொள்வது என்பது அரசியல் சாசன உரிமை என்று கருதுகிறார்கள். எல்லோரும் சாதி சங்கங்கள் இருக்கக்கூடாது என்று முடிவெடுத்தால் அதைப் பற்றி நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து கொண்டு முடிவெடுக்கலாம்.

**திரு. என். விஜயபாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவ்ர்கள் வழியிலே செல்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சிக்காலத்திலேதான் தமிழகத்திலே பல சமுதாயத் திருப்பங்களும் பல சாதனைகளும் ஏற்பட்டிருக்கின்றன. கல்விக் கூடங்களிலும், வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் மற்றும் அரசுத் துறைகளிலும் சாதிப் பெயர் கூடாது என்று ஆணையிடப்படுமா? சாதிப் பெயர்கள் நீக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது.



**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல ஊர்களுடைய பெயர்கள் சில சாதிப் பெயர்கள் சூட்டப்பட்டு உள்ளன. உதாரணமாக மதுரை வடக்குத் தாலுகாவில் ஒரு ஊருக்கு பறையன்குளம் என்று வைக்கப்பட்டிருக்கிறது. தீண்டாமையை ஒழிக்க பாடுபடுகிற நாம் சில குறிப்பிட்ட சாதிப்பெயர்களை வைத்து அவர்களை இழிவுபடுத்துவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு ஊரினுடைய பெயர் அப்படி இருக்குமானால் அது ஒரு சமூகத்தை இழிவு படுத்துவதாகக் கருதப்படுமானால் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பினால் அரசு அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதியின் பெயரால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாராட்டு விழா நடக்கிறது. ஜாதியின் பெயரால் கோரிக்கைகளைச் சொல்லி கூட்டங்கள் நடத்துகிறார்கள். இதில் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களும் அமைச்சர் பெருமக்களும் கலந்துகொள்வதற்குத் தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : :** பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களைக் கலந்து கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தில் ஜாதி அமைப்புகளுக்கு இடம் உண்டு என்று அமைச்சர் இங்கே குறிப்பிட்டார். அரசியல் சட்டத்தில் அப்படி ஒரு ஷரத்து இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஜாதி அமைப்புகளை ஊக்குவிக்க வேண்டுமென்று ஜாதி அமைப்புகளை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அரசியல் சட்டம் எங்கும் குறிப்பிடப்படவில்லையென்று தான் நான் கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் கூறிய கருத்து சரியல்ல. நான் இங்கே கேட்டுக்கொள்வதெல்லாம் ஜாதி அமைப்புகளை ஊக்குவிக்காமல் இருப்பதற்குத் தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்து வந்தது? தெளிவான கருத்தை அமைச்சர் சொல்வாரானால் நான் நன்றி உள்ளவனாகஇருப்பேன்.

**மாண்புமிகு திரு. வி. வி .சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நானே நாடாளுமன்ற மேலவையில் உறுப்பினராக இருந்த பொழுது, அரசியல் சாசனம் திருத்த மசோதா வந்தபொழுது அதுபற்றி குறிப்பிட்டேன். அப்பொழுது இதுபற்றி சொன்னார்

கள். அது மிகவும் கடினமான காரியம், பிற்பட்ட வகுப்பு என்று வைத்துக் கொண்டிருக்கிறோம், அதற்கு அடையாளம் காண்பதற்கு ஜாதிப்பெயர் இருக்கவேண்டும். இங்கே ஜாதியை அகற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள், முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. ஆகவே, இதுபற்றிப் பேச வேண்டாம் என்று மாநிலங்கள் அவையில் அறிவுரை வழங்கப்பட்டது. அதைத் தான் சொன்னேன். பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் கேட்டவை பற்றி, தனிக் கேள்வி போட்டால் நாம் அதுபற்றி பேசலாம்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் மிக முக்கிய பெரிய பொறுப்பில் உள்ளவர்கள் ரிடையர் ஆன பின்னால் ஒரு ஜாதி சங்கத்தினுடைய தலைவராக இருக்கிறார்கள். ஆக, அவர்கள் அர்சாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கும்போதும் அந்த ஜாதி சார்பாக நடந்து கொள்வதற்கு அது காரணமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்தில் உத்தியோகத்தில் பொறுப்பில் இருப்பவர்களோ அல்லது ரிடையர் ஆன பின்னாலோ ஜாதி சங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கக்கூடாது என்று தடையை நம்முடைய அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குக் குறிப்பிட்டு அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பற்றி குறிப்பு கொடுத்தால், அது பற்றி அரசு ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

### விளாத்திக்குளம் தொகுதியில் பால்பண்ணை அமைத்தல்

96—(*வினா எண். 7849)—**திரு. ச. குமர குருபரராமநாதன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியில் பால்பண்ணை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் பால பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை மேலும், இங்கு அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.



**திரு. ச. குமரகுருபர ராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. அந்தப் பகுதியிலே விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மை மக்கள் வாழ்கிறார்கள். விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலே, அந்தப் பகுதியிலே சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள் வளர்ச்சியடையாத காரணத்தால், தற்போது விவசாயத்திற்கு உதவுகிற பால் பண்ணை தொழிலை அபிவிருத்தி செய்தால் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வாய்ப்பாக இருக்கும். எனவே, பால்பண்ணை சம்பந்தப்பட்ட பிரிவை துவக்க அமைச்சர் உரிய நடவடி க்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் மொத்தம் 60 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 27 சங்கங்களே செயல்படுகின்றன. ஆகவே, எல்லா சங்கங்களும் செயல்பட ஆரம்பித்த பிறகு இதுபற்றி நாம் யோசிக்கலாம்.

**திரு. மு. ஜான் வின்செண்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டத்திலாவது அல்லது சிதம்பரனார் மாவட்டத்திலாவது பால் உற்பத்தி மற்றும் பால் பதப்படுத்துவதை விரிவுபடுத்துவதற்கு அபிவிருத்தி திட்டம் ஏதாவது அரசின் ஆய்வில் இருக்கிறதா? அப்படியிருக்குமானால் எப்பொழுது அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் நெல்லை மாவட்டம், வ.உ.சி. மாவட்டம் இரண்டுக்கும் சேர்ந்தார்போல் அண்மையில் ரூ. 7.5 கோடி செலவில் பால் பதனிடுதல், பால் உற்பத்தி பெருக்கம், பால் விற்பனை ஆகியவற்றிற்கு ஒரு திட்டம் அனுமதிக்காக வந்திருக்கிறது.

### தமிழ்நாடு பால்வள நிறுவனம்

97—(*வினா எண். 9600)—**திருமதி. தா. ராசாம்பாள்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பால்வள நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்திய விற்பனையின் அளவைக் காட்டிலும் கொள்முதல் அளவு அதிகம் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உபரியை சத்துணவு மையங்களுக்கு விநியோகம் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

[1987 மார்ச் 6

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இல்லை.

**திருமதி. தா. இராசாம்பாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உபரியாக பால் கிடைக்கிறது என்று சொன்னால் சத்துணவு மையங்களுக்குக் கொடுப்பதில் அரசுக்கு என்ன தடையிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு அதிகமாக பால் கிடைக்கின்ற காரணத்தினால், அதைப் பதப்படுத்துவதற்கு வேறு தொழிற்சாலை ஏதாவது ஆரம்பிக்க அரசு திட்டம் வைத்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 12 ஒன்றியங்கள், 14 மாவட்டங்களில் இந்த பால்வளத் திட்டம் அமலில் இருக்கிறது. பால் அதிகமாக, உபரியாக இல்லை. 1986–87 ஆம் ஆண்டுக்கு கூட பால் கொள்முதல் 10.70 லட்சம் லிட்டர் ஆகும். பால் விற்பனை 10.30 லட்சம் லிட்டர் ஆகும். உபரி 0.40 லட்சம் லிட்டர் ஆகும். உபரியாக உள்ள பாலை தற்போது பௌடராக மாற்றுகிறோம். அதை பால் உற்பத்தி இல்லாத காலத்தில் பால் உற்பத்திக்காகப் பயன்படுத்துகிறோம். ஆகவே உபரி என்பது இல்லை.

**திருமதி தா. இராசாம்பாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உபரியாக உள்ள காலத்தில் இருக்கிற பாலை பால் பௌடராக்கி உபரி இல்லாத காலங்களில் பயன்படுத்துகிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். உபரி இல்லாத காலத்தில் பல கிராமங்களில் பால் சொசைட்டிகள் ஆரம்பிக்க கிராம மக்கள் வேண்டுகிறார்கள். அந்த உரிமத்தைக் கொடுக்க அரசு முன் வருமா? பல இடங்களில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட சொசைட்டிகள் இயங்காமல் இருக்கின்றன. அந்தந்த சொசைட்டிகளின் டைரக்டர்களும் ஊரில் இருப்பது இல்லை. ஆகவே மீண்டும் அந்த சொசைட்டிகளை ஆரம்பிக்க வேண்டும் என்றால் ஏற்கனவே இருக்கிறது என்று சொல்லி அதற்கு அனுமதி அளிக்காத காரணத்தால் அரசு அதை பரிசீலனை செய்து சொசைட்டிகள் இயங்காத இடங்களில் யாராவது முன் வந்தால் அவர்களை இயக்குநர்களாக அமைத்து பால் சொசைட்டி ஆரம்பிக்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் சங்கங்கள் எவ்வளவு அதிகமாக ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு ஏற்



1987 மார்ச் 6]

படுத்தவேண்டுமென்பதுதான் அரசினுடைய கொள்கையாகும். ஆனால் ஏற்கெனவே சங்கங்கள் துவக்கப்பட்டு அந்தச் சங்கங்கள் இயங்காமல் இருக்குமானால்—டிபங்கட் ஆகி இருந்தால்—அந்த இடங்களில் புதிதாக சங்கங்கள் ஆரம்பிக்க விதிகளில் இடமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை உணர்ந்து சில நாட்களுக்கு முன்பாக அலுவலர்களுக்கு, இது மாதிரி இயங்காத சொசைட்டிகள் உள்ள ஊர்களில் புதிதாக கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கச்சொல்லி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும், கிராமங்களிலே இயங்கி வருகின்றன. உண்மையிலேயே அந்தத் திட்டம் நாட்டு மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு நல்ல பயனளிக்கக் கூடிய ஒரு திட்டம். இந்த வெயில் காலத்திலே எல்லா இடங்களிலும் பால் உற்பத்தி மிகக் குறைவாக இருக்கிறது. காரணம் போதுமானதான அளவுக்கு தீவனம் இல்லை. அதிலும் தமிழ்நாட்டிலே வறட்சி அதிகமாக இருக்கிற காரணத்தால் பால் உற்பத்தியைகொடுக்கும் கறவை மாடுகளுக்கு போதிய தீவனம் கிடைப்பதில்லை. புல் கிடைப்பதில்லை. கறவை மாடுகளை வைத்திருக்கக் கூடியவர்கள் தீவனத்துக்கு ரொம்பவும் அவதிப்படுகிறார்கள். வறட்சியை முன்னிட்டு தீவனத்துக்கு ரொம்பவும் அவதிப்படுகிறார்கள். வறட்சியை முன்னிட்டு இந்த கூட்டுறவு பால் விநியோகச் சங்கங்கள் மூலமாக கறவை மாடுகளை வாங்கக் கூடியவர்களுக்கு கடன் அளிக்கிறார்கள். அதேபோன்று தீவனம் கொடுப்பதற்கு, தவிடு, பிண்ணாக்கு போன்ற தீவனங்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் கறவை மாடுகளை வாங்குவதிலும், பாலைக் கறப்பதிலும்தான் கவனமாக இருக்கிறார்களே தவிர அந்த மாடுகளுக்கு தீவனம் கொடுப்பதில் அக்கறை உள்ளவர்களாக இல்லை. அவர்கள் விழிப்புணர்வோடு தீவனம் போட வேண்டும். நம்முடைய அரசே இரண்டு இடங்களில் தீவனம் உற்பத்தித் தொழிற்சாலை வைத்திருக்கிறது. பல்வேறு ஒன்றியங்களில் சமூகக் காடு வளர்ப்பு என்.ஆர்.ஈ.பி. திட்டத்தின் கீழ் அவர்கள் புல் வளர்ப்பதற்கு முன் வந்தால் அதற்கும் ஊக்கம் கொடுக்கிறோம். எனவே சங்கச் சகோதரர்கள் முன்னுக்கு வந்தால் நிச்சயமாக அரசு உதவி செய்யும்.

[1987 மார்ச் 6

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கால்நடைத் தீவனங்கள் மிகவும் விலை உயர்ந்து விட்ட காரணத்தால் தற்போது பாலுக்கு வழங்கப் படுகிற விலை மிகவும் குறைவாக இருக்கிறது என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா? ஆம் எனில், பாலுக்குத் தருகின்ற விலையை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக் டிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனியாக கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்கப்படும்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர்களாக இருக்கின் றவர்கள் தவறு செய்து அதன்மூலமாக சங்கத்தை விட்டு விட்டு ஓடிவிட்டால் அது அந்த உறுப்பினர்களை பாதிப்ப தோடு, மொத்தத் தொகையும் அவர்கள் ஈடுசெய்யக்கூடிய இக்கட்டான நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அப்படித் தவறு செய்யும் தலைவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுத்து அந்த உறுப்பினர்களை காப்பாற்றும் சூழ்நிலையை உருவாக்க அரசு முன் வருமா?

அதைப்போலவே அதிகமான ஜனத்தொகை இருக்கிற பகுதி களின் ஒரு பால் சங்கம் போதாத சூழ்நிலை இருக்கிறது. அங் கெல்லாம் இரண்டு சங்கங்களை அமைக்கும் சூழ்நிலையை அரசு உருவாகக முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலை வா அவாகளே, தற்போதுள்ள விதிமுறைகளின்படி தலைவர்கள் மீது மட்டும்தான் நடவடிக்கை எடுக்க முடியும். சாதாரண உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது. அப்படி ஏங்காவது நடவடிக்கை எடுத்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைச் சொல்லலாம் என்று சொல்லிக் கொள் கிறேன்.

அடுத்து ஏதாவது ஒரு ஊரில் ஒரு சங்கம் இருந்து அந்தச் சங் கம் போதாது என்ற அடிப்படையில் மேலும் ஒரு பால் உற்பத் தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டும் என்ற நிலை இருந்தால் அங்கு இன்னொரு சங்கத்தை விதிகளுக்கு விலக் களித்து தோற்றுவிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்றும் தெரி விக்க விரும்புகிறேன்.



1987 மார்ச் 6]

திரு. கே. எஸ் எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலை வர் அவர்களே, தற்போது பாக்கெட்டில் மக்களுக்கு வழங்கப் படும் பாலில் எந்த விகிதாச்சாரத்தில் கொழுப்புச் சத்து வழங் கப்படுகிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது குறித்து தனியாக கேள்வி போடும் படி மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பல கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உருவாகின்றன. அவ்வாறு உருவாக்கப்படுகிற சங் கங்கள், 2, 3, 4 வாரங்கள் வரை பாலை பால் ஒன்றியத்திற்குச் சப்ளை செய்தும், பால் ஒன்றியத்திலிருந்து பில் பணம் வருவ தில்லை. அதனால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் செயல் பட முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே புதிதாக ஆரம் பித்த சங்கங்களைப் பொறுத்த வரையில் ஒழுங்காக பில் பணம் கிடைக்கக் கூடிய வகையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிதாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் துவக்கப்பட்டால் அவர்கள் காலையில் பால் கொடுத் தால் மாலையில் பணமும் மாலையில் கறந்து கொடுக்கும் பாலுக்கு மறுநாள் காலையில் பணமும் கொடுக்கும் வகையில் தான் தற்போதைய திட்டம் இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் சங்கங்கள் துவக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் ஒன்றியத்தில் அவ்வாறு பணம் கொடுக்கா மல் தவறி இருந்தால், விவரம் அளித்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ் ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது ஒரு இடத்தில் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் இருந்தாலும் இன்னொரு சங்கம் துவக்க வேண்டிய அவசி யம் இருந்தால் அரசு அதற்கு அனுமதி வழங்கும் என்று சொன் னார்கள். காமராஜர் மாவட்டத்தில் அவ்வாறு ஒரு முயற்சி எடுக்கப்பட்டபோது அரசின் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமன்றி தற்போது ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 8 கிலோ மீட்டர் எல்லைக்குள் தான் பாலைக் கொள் முதல் செய்ய வேண்டுமென்றும், 8 கிலோ மீட்டருக்கு அப்பால் கொள்முதல் செய்யக் கூடாது என்றும் விதிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட பகுதிகளில் ஒன்று பாலை வாங்குவதற்குப் புதிதாக சங்கங்களை அமைக்க வேண்டும் அப்

படி அமைக்கா விட்டால் 8 கிலோ மீட்டருக்கு அப்பால் இருப்பவர்கள் பாலை எப்படி விற்க முடியும்? தற்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு அப்படி ஒரு தடை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது தனியான ஒரு ஊரைப் பற்றிய கேள்வி. எனவே இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் சிறப்பாக பதில் சொல்ல இயலும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பால் கூட்டுறவுச் சங்க அமைப்புகளில் தலைவர்கள் தவறுகள் செய்து விட்டால் அவர்கள் மீது மட்டும்தான் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லும் போது குறிப்பிட்டார்கள். இதைக் குறித்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஒரு தலைவரின் தலைமையில் அங்குள்ள உறுப்பினர்கள் அனைவரும் கடன பெற்றுக் கொடுத்துவிட்டு அந்தக் கடன்கள் மூலமாக மாடுகளை வாங்கிக் கொடுத்துவிட்டார்கள். பிறகு அவ்வாறு மாடுகளைப் பெற்ற உறுப்பினர்கள் அந்த மாடுகளை எல்லாம் விற்றுவிட்டார்கள். அப்படி விற்றுவிட்டு சங்கத்திற்குப் பணம் கட்டவில்லை என்றால் அதற்குத் தலைவர் பொறுப்பாளியாவாரா அல்லது உறுப்பினர்கள் பொறுப்பாளிகள் ஆவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

•

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதெல்லாம் சட்டப் பிரச்சினை. பொதுவாக எங்களுக்கு வந்த தகவல் தலைவர்கள் தான் அதிகமாகத் தவறு செய்கிறார்கள். அவர்களுக்குத் தான் பொறுப்பு அளிக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல் அங்குள்ள உறுப்பினர்களும் தவறு செய்திருந்தால் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. கே. பாலாஜி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் சங்கங்களை கிராமங்களில் துவக்க வேண்டுமென்றால் அங்கே குறைந்தது 100 லிட்டர் பால் ஒரு நாளைக்கு வழங்கும் நிலை இருக்க வேண்டும் என்றும் அப்படி 3 மாதம் வழங்கினால் தான் துவக்கலாம் என்று விதிமுறைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கிராமங்களில் இருக்கிற ஏழை எளிய மக்கள் கடன் வாங்கி மாட்டை பெற்று, பாலைக் கறக்கும் நிலையில் இருக்கிறார்கள். எனவே அவர்கள் 100 லிட்டர் பால் ஒரு நாளைக்கு அளிக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக 25 லிட்டர் அளித்தால் போதும் என்றும், 3 மாதம்



அளிக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக 15 தினங்கள் அளித்தால் போதும் என்றும் குறைப்பதற்கு அரசு பரிசீலனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** அது மாதிரி எங்காவது அவசியம் ஏற்பட்டால் விதி விலக்கு அளிக்க அரசு முன் வரும்.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் பண்ணைகளைப் பொறுத்த வரையில் அங்கே நாட்டு மாடு என்று சொல்லக்கூடிய ஒரு ரகமும், சீமை மாடு என்று சொல்லக் கூடிய ஒரு ரகமும் இருக்கின்றன. மாதவரத்தில் உள்ள பால் பண்ணையில் சீமை மாடுகள்தான் இருக்கின்றன. சீமை மாடுகள் உற்பத்தி செய்யும் பாலைச் சாப்பிட்டால் அதில் எந்தச் சுவையும் இருப்பதில்லை. கிராமங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் நாட்டு மாடுகள் உற்பத்தி செய்யும் பாலைச் சாப்பிட்டால் அது சுவை நிரம்பியதாக அதாவது ஒரு வித சர்க்கரைச் சத்தோடு தித்திப்பாக இருக்கும். மாதவரத்தில் உள்ள மாடுகள் சீமை மாடுகளாக இருப்பதால் இந்தச் சுவை இல்லாமல் இருக்கிறது ...............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** இதில் கேள்வி என்ன இருக்கிறது?

(முற்பகல் 10-50).

**திரு. வி. தங்கவேலு :** இந்த சீமை மாடுகள் உற்பத்தி செய்யக் கூடிய பாலானது, நாட்டு மாடுகள் தரக்கூடிய சுவையான பாலைப் போல இருக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய ஆவலாய் இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசு என்ன செய்ய முடியும்?

**டாக்டர் கே. சௌரிராஜன் :** : * *

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மொத்தத்தில் பால் பதனிடப்படும்போது சீமை மாட்டுப் பால், நாட்டுப்புறத்து மாட்டுப்பால், எருமை மாட்டுப் பால், பசு மாட்டுப் பால் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து பதப்படுத்தப்படுவதால் எங்கே சுவை இருக்கிறது, எங்கே சுவை இல்லை என்று பார்க்க

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வழியில்லை. சுவையான பாலை மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், சுவையான பால் கறக்கும் மாட்டை வாங்கி வைத்து பாலைக் கறந்து குடிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * என்பதை நீக்கவும்.

நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் புதிய அனல் மின் நிலையம் அமைத்தல்.

98 (*வினா எண். 12152)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் புதிதாக அனல் மின் நிலையம் அமைக்க மைய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம், எனில் பணி எப்போது துவக்கப்படும்?

(இ) இதன் மூலம் எவ்வளவு மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்கும்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இன்னும் அரசு அனுமதி வழங்கவில்லை. (ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணு மின் நிலையம் அமைக்க கூடங்குளம் பொருத்தமான இடம்தான் என்பதை அரசு முடிவு செய்துவிட்டதா? அந்தப் பகுதியில் பல ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டிருக்கிறதே அந்த நிலத்தின் மொத்த பரப்பளவு எவ்வளவு? அதற்கு நிர்ணயித்த தொகை எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா, என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத தலைவர் அவர்களே, சைட் செலக்ட் கமிட்டி என்று மைய அரசின் அணுசக்தி இலாக்கா நியமித்த அந்தக் குழுவும் 1976-லும், 1981-லும் மீண்டும் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிபுணர் குழுவும், கூடங்குளம் பொருத்தமான இடம்தான் என்ற அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கிறது. ஆனால் இன்னும் மைய அரசு அதைப் பற்றி இறுதி முடிவை எடுத்து அறிவிக்கவில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் பெருமகனார் தன்னுடைய பதிலில் அணு மின் நிலையம் என்று சொன்னாலும் கேள்வியிலே அனல் மின் நிலையம் என்று எழுதப்பட்டிருக்கிறது. அது அணுமின் நிலையமாக வர வேண்டும். கூடங்குளம் சரியான இடம்தான் என்று அந்தக் குழு நிர்ணயித்திருப்பது பாராட்டுக்குரியது. அமைச்சர் பெருமகனார் சொல்லும்போது மத்திய அரசிடமிருந்து வருகிற அனுமதி பற்றி குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே சட்டமன்றத்திலே நான் அதைப்பற்றி ஒரு வினா எழுப்பியபோது முன்பிருந்த அமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதன் பிறகு இப்போதுள்ள மின்துறை அமைச்சர் அவர்கள் இதைப் பற்றிச் சொன்னார்கள். அண்மையில் பாரதியார் சிலை திறப்பு விழாவிற்கு டில்லிக்கு வந்திருந்த முதலமைச்சரிடம், இதை மத்திய அரசிடம் பெற்றுத் தர வேண்டுமென்று சொன்னேன். இது வராமல் இருப்பதற்குரிய முக்கியமான காரணம் குடிநீர் பற்றாக்குறை என்று அணுசக்தி தலைவர் ஸ்ரீனிவாசன் சொன்னார். குடி தண்ணீர் பற்றாக் குறை என்பது நமது மாநிலத்தைப் பொறுத்தது. பக்கத்திலே உள்ள பொய்கை அணை, மாம்பலத்தாறு அணை, ஆலந்தலையாறு அணை ஆகியவற்றை மாநில அரசு அமைத்துவிட்டால் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும். மத்திய அரசாங்கம் அணு மின் நிலையத்தை ஏற்படுத்தச் செய்தால் மத்திய அரசின் நிதியையும் பெறலாம். இந்த இரண்டு பயன்களையும் பெற்றுக் கொள்ள முடியும். எனவே மாநில அரசு இதைப் பற்றி விரைந்து மத்திய அரசாங்கத்தோடு பேசி முடிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தமிழக முதல்வர் பாரதப் பிரதமருக்கு 13 கடிதங்களை எழுதியிருக்கிறார். 1984-இல் மூன்று கடிதங்கள், 1985-ல் 4 கடிதங்கள், 1986-இல் 6 கடிதங்கள். கடைசியாக எழுதப்பட்ட கடிதம் 16—2—1987-இல் எழுதப்பட்டிருக்கிறது முதல்வரவர்கள் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் நிலத்தைப் பொறுத்தவரையிலும், நீரைப் பொறுத்தவரையிலும் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும், இலவசமாகக் கொடுப்பதற்கும் தயாராக இருப்பதாகவும், அதனால் இரண்டாவது அணு மின் நிலையம் வர உதவி செய்ய வேண்டுமென்றும் எழுதி இருக்கிறார்கள். மீண்டும் அதைப் பற்றி வலியுறுத்துவார்கள்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்ற கொள்கை முடிவை அரசு அறிவித்தது. அதன்படி தனியார்கள் யாராவது மின்சாரம் உற்பத்தி செய்ய முன் வந்திருக்கிறார்

களா ? அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா ? வட சென்னையில் அனல் மின் நிலையத்திற்கு 150 இலட்சம் டாலர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தப் பணி எப்போது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மின்சாரம் நிலக்கரி அடிப்படையில் உற்பத்தி செய்வதற்கு 4 ஆண்டுகள் ஆகும் என்கிறார்கள். அணு அடிப்படையில் உற்பத்தி செய்தால் 8, 10, 12 ஆண்டுகள் ஆகுமென்று சொல்லுகிறார்கள். நீரின் அடிப்படையில் புனல் மின் நிலையம் அமைக்கவேண்டுமென்றால் 6,7 வருடங்கள் ஆகுமென்று சொல்லுகிறார்கள். குறிப்பாக தமிழ் நாட்டில் விவசாயிகளுக்கு தேவையான நீரை இரைக்க, பம்புகளுக்கு இணைப்பு கொடுக்க நமக்கு மின்சாரம் தேவைப்படுகிறபோது, விரைவில் பெட்ரோலியம் சம்பந்தமான திரவ எரி பொருள்கள் அல்லது உயர் சக்தியுள்ள நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதி கொடுத்தால் நிச்சயம் உற்பத்தி செய்யலாம். தனியார்கள், மத்திய, மாநில அரசுகளிடமிருந்து பணத்தை எதிர்பார்க்காமல், 110, 210, 500, 675 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையங்களை தமிழகத்தில் அமைக்கத் தயாராக இருக்கிறார்கள். நிலக்கரி உற்பத்தியாகும் வட புலங்களிலிருந்து தமிழ்நாடு வெகு தூரத்தில் இருப்பதால், இதை ஒரு விசேஷ காரணமாகக் கருதி, நிலக்கரியை இறக்குமதி செய்யவும், பெட்ரோலியம் திரவப் பொருள்களை—சி. எச்., எல்.எஸ்.எச்.— கொடுக்கவும் முன்வர வேண்டும். பலர் ஏற்கெனவே மனு போட்டிருக்கிறார்கள்.

### சேலம் மாவட்டம் சேகோசர்வ் தொழில் கூட்டுறவுச் சங்கம்

99—(*வினா எண். 5238)—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சேகோசர்வ் தொழில் கூட்டுறவு சங்கத்தில் எத்தனை பேர்கள் உறுப்பினர்களாக உள்ளார்கள்?

(ஆ) இச்சங்க உறுப்பினர்களது மூலப்பொருளான மரவள்ளிக்கிழங்கு விலையை ஒரே சீராக வைத்திருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விடை (அ) சாகோசர்வ் என அழைக்கப்படும் சேலம் மாவட்ட ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவு சங்கத்தில் தற்போது 649 பேர் உறுப்பினர்களாக உள்ளார்கள்.

(ஆ) விவசாய விளைபொருளான மரவள்ளிக் கிழங்கினை நேரடியாகக் கொள்முதல் செய்து மாற்றுப் பொருளாக உற்பத்தி செய்யக்கூடிய தொழில் அமைப்புகள் தற்போது இல்லை.

**திரு. சி. பழனிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் சாகோசர்வ் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதிலே ஸ்டார்ச், ஜவ்வரிசி கொள்முதல் செய்து, வியாபாரிகளுக்கு விலைக்கு விற்கிறார்கள். அந்தக் கொள்முதல் செய்ததில் எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது? அதிலே அவர்களுக்கு எவ்வளவு டிவிடன்ட் கொடுத்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

### டாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள்

100—(*வினா எண். 9296)—திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாட்கோ மூலம் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் மானியம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு மானியம் எதுவும் வழங்குவதில்லை. மாநில அரசு வீடொன்றுக்கு ரூ. 6,000 சமவெளிப் பகுதியிலும், ரூ. 9,000 மலைப்பாங்கான பகுதியிலும் மானியம் வழங்குகிறது.

**திரு. ஆர். ரெங்கசாமி :** *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாட்கோ மூலம் ஒன்றிய வாரியாக வருடத்திற்கு எவ்வளவு வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாட்கோ மூலம் ஒன்றிய வாரியாகப் பிரித்துக் கொடுப்பதில்லை. மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாகப் பட்டா கொடுக்கப்பட்ட இடங்களில், இங்கேயிருந்து அரசு மூலமாக உத்தரவு வழங்கப்படுகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டா வழங்கியிருக்கும் எல்லா ஆதி திராவிட மக்களுக்கும் தாட்கோ மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், ஒரு ஆண்டுக்கு 10 லட்சம் வீடுகள் என்ற நியதியில் 3 ஆண்டுகளுக்கு 30 லட்சம் வீடுகளைக் கட்டிக்கொடுக்கின்ற ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் வாயிலாக எங்கெங்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அங்கெல்லாம் வீடு கட்டிக்கொடுக்கப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தில் தாட்கோ துறையாளர்கள் ரூ. 3 ஆயிரம் அளவிற்கு அனுமதி அளித்து அவர்களை வீடு கட்டிக் கொள்ளச் சொன்னார்கள். அந்த அரிஜனங்கள் பட்டாவை அரசிடம் கொடுத்துவிட்டு இப்போது திண்டாடுகிறார்கள். வீடுகள் பாதியில் இருக்கின்றன. ஏழையெளிய விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறையில் கொடுத்த கடனை ரத்து செய்தது போல அந்தத் தொகையை ரத்துசெய்துவிட்டு, அந்தப் பட்டாக்களைத் திரும்பக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு வீடுகட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் கட்டிக் கொடுக்கின்ற வீடு முழு மானியத்தோடு கட்டும் வீடாகும். 1984-க்கு முன்னாலே ரூ 3,250 கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே 1984-லிருந்து அது ரூ. 6,000 ஆக உயர்த்தப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தத் தொகை கூட்டுறவுத் துறை மூலமாக கிராமத்திலே இருக்கின்ற வீடு கட்டும் சங்கத்தின் வாயிலாக கொடுக்கப்பட்டதாகும். ஆகவே அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### வறட்சி நிலை பற்றி மைய அரசுக்கு அறிக்கை அளிப்பது குறித்து

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் மிகவும் பிரதானமான இடத்தைப் பெற்று இருப்பது 'தமிழகத்திலே கடுமையான வறட்சி நிலை' என்பது. அந்த வறட்சி நிலையைப் பற்றி அத்தனை பேர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்தபோது, மதிப்பிற்கும் மரியாதைக்கும்உரிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த வறட்சி நிலைபற்றி மாதந்தோறும் மத்திய அரசுக்கு அறிக்கை தருவதாகவும், அந்த அறிக்கையின் பலனை எதிர்பார்த்துக்கொண்டு இருப்பதாகவும் இந்த அவைக்குத் தெரிவித்தார்கள். நான் தலைவர் அவர்களின் அனுமதியோடு இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, தரமான பத்திரிகை தினமணியில் வந்தது. மாநிலங்கள் அவையில் குறிப்பிட்ட செய்தி ஒன்றை இப்போது அவையின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசுக்கு ஏற்கனவே 31.77 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. 'திரும்ப திரும்ப ஞாபகப்படுத்தியும்' வார்த்தைகளைக் கொஞ்சம் கவனிக்கக் கேட்டுக் கொள்கிறேன். 'திரும்ப திரும்ப ஞாபகப்படுத்தியும், சேதத்தின் அளவு மற்றும் தேவையான நிவாரணம் தொடர்பாக இம்மாநில அரசு இதுவரை விரிவான அறிக்கை எதையும் சமர்ப்பிக்கவில்லை' என்று திரு. கோபாலசாமிக்கு மைய அமைச்சர் திரு. மக்வானா அவர்கள் பதில் தெரிவித்தார்.

தவறான தகவலைத் தந்தது நிதி அமைச்சரா? இங்கே இருக்கின்ற நிதி அமைச்சரா அல்லது திரு. மக்வானா அவர்களா என்பதை நான் இந்த நேரத்திலே உங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நாம் முந்நூற்றுச் சில்லரை கோடி ரூபாய் அளவிற்கு கேட்டு இரண்டு குழுக்கள்

வந்து ஆராய்ந்து அவர்கள் தந்த அறிக்கையின் அடிப்படையிலே 31 கோடி ரூபாய் அனுமதித்திருக்கின்றார்கள். அவர்கள் அனுமதித்திருந்தாலும் நாமே மொத்தத்திலே செய்த செலவெல்லாம் சேர்த்து ரூ. 105 கோடி என்ற அளவுக்கு கணக்குச் சொல்லியிருக்கிறேன். அது சென்ற ஆண்டு கணக்கு. இந்த ஆண்டு அவ்வப்போது நிலைமையை அறிவித்திருக்கிறோம் என்று சொன்னேன். இன்னமும் புதிதாக அறிக்கை கொடுத்ததாக நான் சொல்லவில்லை. இருக்கிற நிலைமைகளை அறிவித்துக்கொண்டு இருக்கிறோமே தவிர, இவ்வளவு சேதம் என்று சொல்லவில்லை. புயல் வீசினால், வீசின 3-ம் நாள் விரிவான அறிக்கை தரலாம். அல்லது பெரிய வெள்ளச் சேதம் வந்தால் விரிவான அறிக்கை 3-ம் நாள் தந்துவிடலாம். வறட்சியைப் பற்றிய அறிக்கை இன்னமும் தரவில்லை என்றுதான் சொன்னேன். மாதா மாதம் இருக்கின்ற நிலைமைகளை எடுத்து தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். விரிவான அறிக்கை கொடுத்து இவ்வளவு தாருங்கள் என்று இன்னமும் கேட்கவில்லை. கொடுக்கவில்லை. விரிவான அறிக்கை தரவில்லை. விரிவான அறிக்கை தருகின்ற நிலையிலே இருக்கிறோம். நேற்றுகூட கேட்டபோது நான் சொன்னேன். மாதா மாதம் இருக்கின்ற நிலைமைகள் இன்ன இன்ன அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த அளவுக்கு இருக்கிறது என்றுதான் தெரிவித்துக் கொண்டிருக்கிறோமே தவிர, விரிவான அறிக்கை தரவில்லை. இவ்வளவு தரவேண்டும் என்று கேட்கவில்லை. இப்போது கேட்டால் கொஞ்சமாகத்தான் கேட்கவேண்டியிருக்கும். ஆனால் விரிவான அறிக்கை கொடுக்கின்ற நிலை விரைவிலே ஏற்படும். எல்லாவற்றையும் சேர்த்துப் பதில் உரையிலே நான் விரிவாகச் சொல்வேன். திரு. மக்களன் அவர்கள் பேசிய பேச்சுக்கும் சேர்த்து சொல்வேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய உதாரகுணத்திற்கு நன்றி. சந்தர்ப்பத்தைத் தந்திருக்கிறீர்கள். இங்கே பேசிய நாவலர் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இப்போதே வறட்சி அதிகமாக இருக்கிறது. இன்னும் அதிகமாக அவர் எதிர்பார்க்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. கடுமையான வறட்சி ஏற்பட்டு, அதன் காரணமாக ஏராளமான பேர் சாகிற நிலைமை ஏற்பட்டதற்கு பிறகு அறிக்கைகொடுக்கத் தயாராக இருக்கிறாரா அல்லது உடனடியாக அறிக்கை கொடுத்து இவ்வளவு தேவை என்று வாதாடி, போராடி மத்திய அரசிடமிருந்து நிதியை பெற தயாராக இருக்கிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். முழுமையான அறிக்கை வைக்கவில்லை என்று அவர் சொன்னார். முழுமையான அறிக்கை





பற்றி கவலைப்படவில்லை. தமிழகத்தில் வறட்சி கவ்வி பற்றிக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் சாதாரண பிரச்சினையாக இதனை ஆக்கக்கூடாது. (மணி அடிக்கப் பெற்றது.)

**திரு. என். எஸ். வி. சித்தன்:** On a point of order sir, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களையொட்டி, சென்ற ஆண்டு இதே மாமன்றத்திலே தமிழகத்தில் நிலவிய கடுமையான வறட்சி பற்றி எடுத்துக் கூறிய நேரத்தில் எல்லாம், இதே மாதிரியாக தகவல்களை, அறிக்கைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம், தகவல்களை சேகரித்துக் கொண்டிருக்கிறோம், அறிக்கைகளை தயாரித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லி, காலதாமதமாக அறிக்கையை அனுப்பிய காரணத்தால் அவர்கள் நிபுணர் குழுவை அனுப்புவதிலும் காலதாமதம் ஏற்பட்டது. இடையிலே மழை பெய்ததன் காரணமாக கடுமையான வறட்சி தெரியாத நிலைமையும், விளைச்சல் ஏற்பட்டு விட்ட நிலைமையும் தான் நிபுணர் குழுவுக்கு தெரிந்தது. இப்போது எத்தகைய கடுமையான வறட்சி நிலை நிலவுகிறது என்பது பற்றி மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருக்கும்போது இன்னும் அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்வதில் நியாயமே இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எவ்வளவு சேதம் என்பது பற்றிய அறிக்கையை ஏற்கனவே கொடுத்து விட்டார்கள். நீங்களும் உங்களுடைய அறிக்கையை உடனடியாக மத்திய அரசுக்கு அனுப்பி நிதியைப் பெறுவதற்கு ஆவன செய்தால் நாங்களும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது Point cf ord r அல்ல. Point of information

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே விரைவாக மத்திய அரசுக்கு, ஒரு காலகெடுவுக்குள் விரிவான அறிக்கையைத் தயாரித்து, இவ்வளவு நிதி தேவை என்று சொன்னால் அவர்களும் உடனடியாக நிபுணர் குழுவை அனுப்புவார்கள். நாமும் தேவையான நிதியைப் பெற முடியும் என்பதால் எப்போது அறிக்கையை அனுப்புவார்கள் என்பதை இங்கேயே திட்டவட்டமாகத் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இப்போதையது அல்ல. சென்ற ஆண்டைப் பற்றியது. (திரு. வி. பி. சிந்தன் இருக்கையில் நின்று கொண்டிருந்தார்). இது விவாதம் அல்ல. விவாதித்துக் கொண்டே போகிறீர்களே.

திரு. வி. பி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 310 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லி மத்திய அரசுக்கு ஒரு மெமோரண்டம் அனுப்பப்பட்டிருக்கிறது. இது பற்றி கவர்னர் உரையிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 310 கோடி ரூபாய் உதவி தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி விவாதத்தின் போது பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நிலைமை பற்றி குறிப்பிட்டு இப்போதைய நிலைமையைப் பற்றியும் பேசப்படுகிறது. திரும்பத் திரும்ப இது பற்றி சொல்லியிருக்கிறேன். மழையின்போது ஏற்பட்டிருக்கிற நிலைமையைப் பற்றி அறிக்கை அனுப்பிக் கொண்டு இருக்கிறோம். விரிவான அறிக்கை தரப்படவில்லை. கொடுத்ததாக நான் சொல்லவும் இல்லை. எவ்வளவு நிதி வேண்டுமென்று அசெஸ் செய்யப்பட்டு விரிவான அறிக்கை விரைவில் அனுப்பப்படும். **விரிவான அறிக்கை இன்னும் அனுப்பப்படவில்லை. இருக்கிற நிலைமைகளை சொல்கிறேன். 10 ஆண்டுகளாக, எப்போதெல்லாம் வறட்சி ஏற்பட்டது, எப்போது விரைவு அறிக்கை அனுப்பப்பட்டது, எப்போது நிபுணர் குழு வந்து பார்வையிட்டது போன்ற விவரங்களை வேண்டுமானால் எடுத்து வைக்கிறேன். அது போல் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது எப்போதெல்லாம் வறட்சி ஏற்பட்டது, விவர அறிக்கை எப்போது அனுப்பப்பட்டது, நிபுணர் குழு எப்போது வந்து பார்வையிட்டது போன்ற விவரங்களையும் வைக்க நான் தயாராக இருக்கிறேன். எல்லாவற்றையும் 10 ஆம் தேதி வைக்கத் தயராக இருக்கிறேன் என்பதை இந்த அவைக்கு சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் சொல்லியாயிற்று. அமருங்கள். அடுத்து, அவை உரிமை மீறல் பிரச்சினை. (குறுக்கீடு).

திரு. கி. மனோகரன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் நீக்க வேண்டியது ஏதாவது இருந்தால், நீக்கி விடுங்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றும் இல்லை. வேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன். வெளியே இதைப் பற்றி சொல்ல வேண்டாம். நான் படித்துப் பார்த்து வேண்டாம் என்பதை நீக்கி விடுகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைப்படி அகற்றப் பெற்றது.



[முற்பகல் 11.10]

### 3. அவை உரிமை மீறல் பிரச்சினை 'அசைடு' பத்திரிகை மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. சட்டமன்றப் பேரவை விதி 219-ன் கீழ்; மாதம் இருமுறை வெளிவரும், 1/15-3 87 ஆம் நாளிட்ட ''ASIDE'' என்னும் பத்திரிகையில், சட்டமன்ற உறுப்பினர்கள் நடந்துகொள்ளும் முறை பற்றியும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விடுதியில் உறுப்பினர்கள் நடத்தை குறித்தும் எழுதப்பட்டுள்ள சில வாசகங்கள் பேரவையின் கண்ணியத்தையும், உறுப்பினர்களின் உரிமைகளையும் பெருமளவு பாதிப்பதாக அமைந்துள்ளது என்று, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். வேணுகோபால், திரு. எஸ். சிவராஜ், திரு. ஆர். தியாகராஜன், திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன், திரு. எஸ். இராசாராமன், திரு. எஸ். பி. மணவாளன், டாக்டர் க. நல்லமுத்து, திரு. எ. தெய்வநாயகம், திரு. என். சிவஞானம், திரு. டி. வெங்கட ரெட்டி, திரு. கே. வெங்கடாசலம் மற்றும் திருமதி பா. வளர்மதி ஆகியோர் பேரவையில் இப்பிரச்சினையை எழுப்புவதற்கு அனுமதி கேட்டு அறிவிப்புக்களைக் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவை உரிமை மீறிய பிரச்சினையாகும் என்பது குறித்து, மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். வேணுகோபால்:

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ?

திரு. அ. ரகுமான்கான் : நீங்கள் சொன்னதிலே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒருவர் பெயரைச் சொல்லிவிட்டேன், அவர் பேசட்டும்.

திரு. அ. ரகுமான்கான் : புரொசீஜரிலே சொல்கிறேன். நீங்களே அது என்ன சப்ஜெக்ட் மேட்டர் என்று வாசித்து விடுங்களேன். ரூல்ஸை ஃபாலோ செய்ய வேண்டும். வேறொன்றும் தப்பாக நான் சொல்லவில்லை.

Mr. SPEAKER : I shall waive it under rule 312.

திரு. எஸ். வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து வெளிவரும் ''அசைட்'' என்ற ஆங்கிலப் பத்திரிகை, மாதம் இரு முறையாக வருகின்ற அந்தப் பத்திரிகையில் தமிழக சட்டமன்றத்தைக் குறித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நடப்பதாகச் சொல்லப்படும் சம்ப

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 மார்ச் 6

வங்கள் குறித்து 1-லிருந்து 15 ஆம் தேதி, மார்ச் மாதம், 1987லே வெளியிடப்பட்டுள்ளது. குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் அநேகமாக எழுதப்படிக்கத் தெரியாத, அரசியல் தெரியாதவர்கள் என்றும், சமூக விரோத செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் என்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி ஏதோ கேளிக்கை கூடாரம் என்பது போலவும், அங்கே மதுவும் மங்கையும், ஆபாசப் படங்களும், குடியும் கூத்துமாக தங்குதடையின்றி நடைபெறுவதாகவும் தரக்குறைவான முறையில், தவறான முறையிலே எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறு எழுதப்பட்டதன் மூலம் பொது மக்கள் மத்தியிலே, எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றிய அந்தஸ்தும், மரியாதையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் விடுதியில் தங்குகின்ற எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் இப்படித்தான் நடந்து கொள்கிறார்களோ என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியிலே எழுவதற்குக் காரணமாக அமைந்து உள்ளது. இதன் காரணமாக எங்களைப் பொதுமக்கள் கேலியாகவும், கிண்டலாகவும், கண்ணியத்திற்குக் குறைவாகவும், சந்தேகக் கண்களுடனும் பார்க்கக் கூடிய ஒரு நிலை உருவாகி இருப்பது எங்களுக்கெல்லாம் மிக்க வேதனையை அளிக்கிறது. இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி எழுத்து மூலமாக இந்தப் பத்திரிகை ஆசிரியர் அவை உரிமை மீறல் குற்றத்திற்கு ஆளாகிறார் என்று சொல்வதுடன், எங்களது உரிமையைப் பாதிக்கின்ற இந்தச் செயலைச் செய்வதால் இதை அவை உரிமைக் குழுவிற்கு விட்டு விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இப்பொழுது மட்டுமல்லாமல், எல்லா வீடுகளிலும் கூட, எங்கள் வீட்டில் இருக்கின்றவர்களெல்லாம் கூட இதைப் பார்த்துவிட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கே போக வேண்டாம் என்று நினைக்கின்ற நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலை இருக்குமேயானால்—அரசியல் வாதிகள் நீண்ட நெடுங்காலமாக, கடந்த காலங்களிலே அதுவும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் மிகவும் இழிவான விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பது தான் என்னுடைய கருத்தாக இருக்கும். ஆக, தனிப்பட்ட முறையில் இந்தப் பத்திரிகை ஆசிரியர் எழுதியிருக்கலாம். நான் அந்த விவாதத்திற்குப் போகத் தயாராக இல்லை. தங்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்தில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் இந்தச் சம்பவத்தைப் பற்றி நீங்கள் ஆய்வு செய்து இதைப் பேரவையின் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அசைட்'' என்ற ஆங்கில வார இதழில் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி ஒட்டுமொத்தமாகவும், சில கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களை மட்டும் பாராட்டியும்,



1987 மார்ச் 6] [திருமதி பா. வளர்மதி]

மிகவும் தரக்குறைவான முறையில் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் செய்வது இல்லை என்றும், பணம் சம்பாதிப்பதே குறிக்கோளாக உள்ளார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, பெண் சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றி மிகவும் கேவலமான முறையில், அவர்களின் வாழ்க்கையைக் களங்கப்படுத்தும் முறையில் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கருத்துக்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் பணிகளைச் செய்வதற்குத் தடங்கலாகவும், இடையூறாகவும் இருக்கும் என்கின்ற காரணத்தால், இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிற ''அசைட்'' பத்திரிகை ஆசிரியரை உரிமைக் குழுவின் முன் ஆஜராக்கி அவரை விசாரிக்க வேண்டுமென்று வேண்டி இந்த உரிமைப் பிரச்சினையைத் தங்கள் முன் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் இருப்பதாக நான் கருதுவதால், இப்பிரச்சினையை ஆய்ந்து பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்காக, பேரவை விதி 226-ன் கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகின்றேன்.

## 4. கவன ஈர்ப்பு

### (அ) விளவங்கோடு வட்டத்தின் சில கிராமப்பகுதிகளில் சீதபேதி நோயினால் பாதிப்பு.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' விளவங்கோடு வட்டத்தில் கடையல், அருமனை பேரூராட்சிகளிலும்,, மாங்கோடு ஊராட்சியிலும் 1986 டிசம்பர் மாதம் முதல் இரத்தபேதி நோய் பாதித்து இதுவரை 14 பேர் இறந்துள்ளது குறித்தும் நூற்றுக்கணக்கானோர் அபாய எல்லை தாண்டாமல் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவது குறித்தும் நோய் தொடர்ந்து பரவி வருவதால் மக்கள் மத்தியில் நிலவுகின்ற கவலை குறித்தும் '' உள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு, வட்டத்திலுள்ள கடையல் மற்றும் அருமனை பேரூராட்சிகளிலும், மற்றும் மேலபுரம் வட்டாரத்திலுள்ள இடைக்கோடு ஆரம்பச் சுகாதார நிலையப் பகுதியைச் சார்ந்த சுற்றுப்புற கிராமங்களிலும், 1986 நவம்பர் திங்களிலிருந்து 1987 சனவரித் திங்கள் முடிய சீதபேதி நோய் ஏற்பட்டது. 25—11—1986 முதல் 8—1—1987 வரை நான்கு கிராமங்களில் இந்நோயினால் 46 பாதிப்புகளும் 9 இறப்புகளும் (குழந்தைகள்) ஏற்பட்டன. இந்நோயினைப் பற்றிய தகவல் கிடைத்தவுடன் அம்மாவட்ட பொது சுகாதாரப் பணியாளர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து சென்று நோய் தடுப்பு மற்றும் மருத்துவப் பணிகளில் ஈடுபட்டனர். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கும் பொருட்டும், மேலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கும் பொருட்டும், ஒரு மருத்துவ அதிகாரி, இரண்டு பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள், ஒரு மருந்தாளுநர் ஆகியோர்களைக் கொண்ட ஐந்து சிறப்பு மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவப் பேராசிரியர் தலைமையின் கீழ் மருத்துவ நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்று, இந்நோயினைப் பற்றிய விரிவான ஆய்வுக்காக பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிட்டது. மேலும் இந்நோயினை எளிதில் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் பொருட்டும், சந்தேகப்படுகின்ற சீதபேதி நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கும் பொருட்டும், இடைக்கோடு ஆரம்ப சுகாதார பணியாளர்களைக் கொண்ட சீதபேதி கட்டுப்பாடு நிலையம் ஒன்றை கடையலில், நாகர்கோயில் மாவட்ட சுகாதார அலுவலர் நிறுவினார்.

கன்னியாகுமரி மாவட்ட சுகாதார அலுவலர் கேட்டதற்கிணங்க அம்மாவட்ட ஆட்சியாளர் பாதிக்கப்பட்ட இடங்களில் குடிப்பதற்கு உகந்த நீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தார். மேலும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு கிராமங்களிலும் மூன்று குழாய்க் கிணறுகள் போடப்பட்டன. போதிய மருந்துகளும் பூச்சிக்கொல்லி மருந்துகளும், வட்டார வளர்ச்சி அலுவலரால் வழங்கப்பட்டன. தற்காலிக கூலியாட்கள் (மஸ்தூர்கள்) நியமிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள நீர்நிலைகளில் குளோரினேஷன் செய்யப்பட்டும், பாதிப்பு ஏற்பட்ட வீடுகளில் கிருமிநாசினி மருந்து தெளித்து சுத்தம் செய்யப்பட்டும், ஈ, கொசு ஆகியவைகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மிகுந்த முன்னெச்சரிக்கையாக பாதிப்பு ஏற்பட்ட இடங்களிலும் மற்றும் அதன் சுற்றுப்புறப்





பகுதிகளிலும் 31,157 பேர்களுக்கு காலரா தடுப்பூசி போடப்பட்டது. மேலும் அப்பகுதிகளில் திறந்த நிலையில் இருக்கின்ற 725 கிணறுகள், இப்பணி நிமித்தம் அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவினரால் தினமும் குளோரினேஷன் செய்யப்பட்டன. 8—1—1987-க்குப் பிறகு இந்நோயினால் எந்த ஒரு இறப்பும் ஏற்படவில்லை.

கொள்ளை நோய் பூச்சி இயல் ஆராய்ச்சியின்படி இந்நிகழ்வு வைரஸ் என்னும் கிருமியினால் ஏற்பட்ட சீதபேதி நோய்தான் என்று தெரிய வந்திருக்கிறது. இந்நோய் குறித்து அச்சப்படுவதற்கு எவ்விதக் காரணமுமில்லை. மலப் பரிசோதனையின் முடிவின்படி இவ்விடங்களில் வளைவுக் கிருமிகளால் ஏற்படக்கூடிய வாந்தி பேதிக்கான (காலரா) சாத்தியக் கூறுகள் இல்லை.

பொது சுகாதாரப் பணியாளர்கள் பாதிக்கப்பட்ட இடங்களை சிறந்த முறையில் கண்காணித்து வருவதுடன் அப்பகுதிகளில் மருத்துவப் பணிகள் தொடர்ந்து அளிக்கவும் வசதிகள் செய்யப் பட்டிருக்கின்றன. தற்போது நிலைமை கட்டுக்குள் அடங்கியுள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, இந்த அறிவிப்பு கொடுக்கப்பட்ட பிறகு கிடைத்திருக்கிற தகவல் என்ன வென்றால் கடையல் என்ற கிராமத்திற்கு அருகில் உள்ள திற்பரப்பு பேரூராட்சியைச் சேர்ந்த பல பகுதிகளில் இந்த நோய் ஏற்பட்டு, பலர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

இன்றைக்கு அந்தப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கிற கடுமையான வறட்சியின் காரணமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காமல் ஆற்று நீரை (ரிவர் வாட்டர்) குடித்ததால் இந்த நோய் ஏற்பட்டிருப்பதாக சில மருத்துவர்கள் கூறியதாக பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அது உண்மை என்றால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதற்காக அந்தப் பகுதிகளில் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

இந்த விவர அறிக்கையில் மூன்று ஆழ் குழாய்க் கிணறுகள் அந்தப் பகுதிகளில் போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கொடுக்க இந்த மூன்று கிணறுகள் போதுமா ? அதனால் மட்டும் அந்தப் பகுதி மக்களுடைய தேவை பூர்த்தி செய்யப்பட்டுவிடுமா ? ஆகவே, பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதற்கு அரசு வேறு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா ? இல்லை என்றால் ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, குடிநீரினால்தான் நோய் ஏற்பட்டது என்று அறிக்கையிலே விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. திறந்த கிணறுகளை எல்லாம் போய் பார்த்து, மருந்துகள் போட்டு, சுத்தம் செய்திருக்கிறார்கள், கொசு ஒழிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னால் நோய் தணிந்திருக்கிறது என்று தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற பிரச்சினையை குடிநீர் வடிகால் வாரியம் தனியாகக் கவனிக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கொடுமையான நிலைமை ஏற்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஏதேனும் நிவாரணம் அளிப்பதற்கும், அந்தப் பகுதிகளிலுள்ள மக்களின் பயத்தைப் போக்குவதற்கும் என்ன ஏற்பாடுகளைத் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய அரசு முன் வருமா, உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, அனைத்து சுகாதார ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்று விவரமாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

(ஆ) கோவை மாவட்டத்தில் சில நூற்பாலைகள் மூடப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள். மா. சின்னராசு, கு. ரமணி, வி. பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதனைக் கொண்டு வருவார்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' கோவை மாவட்டத்தில் இராதாகிருஷ்ணா, வசந்தா மில், ஜனார்த்தனா மில், அட்சயா ஆகிய நூற்பாலைகள் நீண்ட நாட்களாக மூடப்பட்டு கிடப்பதால் இவைகளில் பணியாற்றி வந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஏற்பட்டிருக்கிற இன்னல் குறித்தும், இதன் காரணமாக தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் '' உள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



அறிக்கை.

கோவை மாவட்டத்தில் மூடப்பட்டு உள்ள இராதாகிருஷ்ணா வசந்தா, ஜனார்த்தனா மற்றும் அட்சயா மில் ஆகிய நூற்பாலைகளைப் பற்றிய விவரங்கள் :

**இராதாகிருஷ்ணா மில்ஸ் :**

இது ஒரு தனியார் நூற்பாலையாகும். இவ்வாலை நிதி நிலை நெருக்கடியாலும் தொழிலாளர் பிரச்சினைகளாலும் மூடப்பட்டது. இந் நூற்பாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்த்து வைக்க தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அப் பேச்சு வார்த்தை வெற்றி பெறவில்லை. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அரசின் ஆணையை தொழிலாளர் நல ஆணையர் கோரி உள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**வசந்தா மில்ஸ் :**

இது ஒரு தனியார் நூற்பாலையாகும். இது நிதி நிலை நெருக்கடி, தவறான நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களின் பிரச்சினை போன்ற காரணங்களால் மூடப்பட்டது. இந்த ஆலையினை திறப்பதற்கான சாத்திய கூறுகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

**ஜனார்த்தனா மில்ஸ்:**

இது ஒரு தனியார் நூற்பாலையாகும். இது நிதி நிலை நெருக்கடி, மற்றும் தொழிலாளர்களின் பிரச்சினை போன்ற காரணங்களால் மூடப்பட்டது. இந்த ஆலையினை திறப்பதற்கான, சாத்திய கூறுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

மேலும், இது சம்பந்தமாக சில விவரங்கள் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரிடம் கேட்கப்பட்டுள்ளன.

**அட்சயா மில்ஸ் :**

இது ஒரு தனியார் நூற்பாலையாகும். தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்த காரணத்தினால் மூடப்பட்டது. இந்த ஆலையினை அரசினர் தரப்பில் அதிக அளவில் இயக்குநர்களும் நிர்வாகத்தின் சார்பில் குறைந்த அளவில் இயக்குநர்களும் கொண்ட கூட்டு நிர்வாகத்தின் கீழ் திறப்பதற்கான சாத்தியக் கூறுகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. மா. சின்னராசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற விவர அறிக்கையில் இந்த நான்கு நூற்பாலைகளையும் திறப்பது குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும், அரசின் தீவிர பரிசீலனையில் இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டும் இதேமாதிரியான கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, கோவை மாவட்டத்தில் மூடப் பட்டிருக்கும் மில்களைத் திறக்க வேண்டுமென்று கேட்ட போது அரசு பரிசீலனை செய்துகொண்டு வருகிறது என்று விளக்கமாக அறிக்கை தரப்பட்டிருந்தது.

[முற்பகல் 11-20]

அதற்குப் பின்னர் இரண்டு மில்களைஅதாவது ஸ்ரீ ஹரி மில் மற்றும் பவானி மில் ஆகியவற்றை மட்டும் திறக்க ஏற்பாடு செய்து இந்த ஆண்டு திறக்கப்பட்டு இருக்கிறது. மத்திய அமைச்சர் கூட நாடாளுமன்றத்தில் இவைகளை தமிழ்நாட்டு அரசாங்கமே எடுத்துக்கொண்டு நடத்துவதில் ஆட்சேபணை இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஏற்கெனவே பல நூற்பாலைகளை நடத்தி வருகிறது. அந்த நூற்பாலைகளோடு சேர்த்து இவைகளையும் கூட நாம் எடுத்து இலாபகரமாக நடத்த முடியும் என்கிற அடிப்படையிலும், பல பேச்சுவார்த்தைக்குப் பின்னரும் நிர்வாகம் ஒத்துவராத காரணத்தினாலும் அரசே அவற்றை எடுத்துக் கொள்வதற்கு முயற்சி செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மேலும் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் கூட்டுறவு நூற்பாலைகள் மாவட்டத்திற்கு ஒன்று என்ற வகையில் புதிய மாவட்டங்களிலும் துவக்குவதாக அறிவிக்கப் பட்டு இருக்கிறது. அப்படி இருக்கிறபோது இருக்கின்ற நலிந்த ஆலைகளை அரசு எடுத்துக் கொண்டால் இன்னும் கூட பணம் மிச்சப்படும். இந்த மில் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. கோவை மாவட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை. எனவே அவற்றை அரசு எடுத்துக்கொள்வதுதான் சரியான முடிவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே அந்த முயற்சியை அரசு எடுத்துக்கொள்ள முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அறிக்கையிலே சொல்லியிருப்பது போல மூடிக்கிடக்கிற இந்தப் பஞ்சாலைகளை எந்த வகையிலே திறப்பது என்பது குறித்து அரசு தீவிரமாக பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. நலிவுற்ற பஞ்சாலைகளை இனிமேல் தேசியமயமாக்குவதில்லை என்று பாரதத்





தினுடைய பிரதமரே பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்கள்; சம்பந்தப்பட்ட அமைச்சரும் தெரிவித்து இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. தேசிய பஞ்சாலைகள் கழகம் என்பது மத்திய அரசுக்குச் சொந்தமானது. அவர்கள் நடத்திக் கொண்டிருக்கின்ற 6 பஞ்சாலைகள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றைக்கூட மூடிவிடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறுகின்ற வகையில் செய்திகள் வந்து இருக்கின்றன.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் நலிவுற்ற ஆலைகளை அரசு எடுத்து நடத்துவது என்ற பேச்சுக்கே இனிமேல் இடம் இல்லை. அதற்குத் தேவையான நிதியாதாரம் அரசினிடத்தில் இல்லை. ஆனால் அவற்றை நடத்திக் கொண்டிருக்கிற நிர்வாகத்தினரை அழைத்து, தொழிலாளர்களையும் அழைத்து தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையிலே பிரச்சினைகள் இருந்தால் அவை குறித்துப் பேசித் தீர்த்து சுமுகமாக அந்த ஆலைகளைத் திறக்கவும், நிதி நிலை பிரச்சினையாக இருக்குமேயானால் அவர்களுக்குக் கடன் கொடுத்திருக்கிற வங்கி அதிகாரிகளோடு பேசி அபராத வட்டி, வட்டி போன்றவற்றையாவது குறைக்க முடியுமா என்பதற்கும், அல்லது அரசாங்கத்திலே இருந்து இரண்டு, மூன்று பேர்களைப் போட்டு, ஜாயின்ட் மேனேஜ்மென்ட் மாதிரி நடத்த முடியுமா என்றால்— ஏற்கெனவே இரண்டு ஆலைகளை அந்த வகையில் நடத்தி வருகிறோம்— அதற்கான ஏற்பாடுகளைச் செய்து ஒரு குழுவை அமைத்து நடத்துவதற்கும் உரிய வகையில் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட வகைகளிலேதான் நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோமே தவிர தேசியமயமாக்குகின்ற பிரச்சினையே இல்லை. மூடியிருக்கிற ஆலைகளை, தொழிலாளர்களின் நலன் கருதி விரைவில் எந்த வகையில் திறக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

புதிய ஆலைகள் திறப்பது பற்றிச் சொன்னார்கள். கிட்டத்தட்ட 25,000 கதிர்களைக் கொண்ட நூற்பாலைகளை ஆரம்பிக்கவேண்டுமென்றால் 7½ கோடி ரூபாய்தான் செலவாகும். மேலும் புதிய ஆலைகளை ஆரம்பிக்க 50,000 ரூபாய் போட்டாலே போதும்; மீதி எல்லா பணத்தையும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற முடியும். ஆனால் மூடி இருக்கிற ஆலைகளைப் பற்றி பரிசீலனை செய்கிறபோது ஒவ்வொரு ஆலைக்கும் 7 கோடி, 8 கோடி என்று முதலீடு செய்தால்தான், அவற்றை மாடர்னைஸ் பண்ணினால்தான் நடத்த முடியும். அப்படிப்பட்ட நிலைமைதான் மூடி இருக்கிற ஆலைகளைப் பொறுத்தவரையில் இருக்கிறது. அதாவது அவற்றின் கடனை அடைத்தால்தான் நடத்த முடியும் என்ற நிலைமை இருக்கிறது. இப்படி பல்வேறுவிதமான சிக்கல்களுக்கிடையே அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்ட இந்த விளக்கத்தில் தவறான தகவல்கள் அடங்கி இருக்கிறன என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நான்கு மில்களைப் பொறுத்தவரையிலே தொழிலாளர்கள் தாவா எதுவும் இல்லை. அட்சயா மில்லில் வேலை நிறுத்தத்தால் இந்த நிலைமை ஏற்பட்டது என்று பதிலளித்தது தவறானது. அங்கே வேலை நிறுத்தமே நடைபெறவில்லை. சென்ற ஆண்டு நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும், தொழிற் சங்கத் தலைவர்களும் பாதயாத்திரையாக சென்னைக்கு வந்து முதலமைச்சரையும், அமைச்சரையும் சந்தித்துப் பேசியபோது ஆலை திறப்பது பற்றி பரிசீலிப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். பிறகு தொழிற் சங்கத் தலைவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் என்று பல நாட்கள் உண்ணாவிரதம் இருந்து அதன்பின்னர் கோவை மாநகரத்தில் கிட்டத்தட்ட 80,000 தொழிலாளர்கள் நான்கு நாட்கள் வேலை நிறுத்தம் நடத்திய பிறகு அரசு தலையிட்டு பரிசீலனை செய்வதாகச் சொன்னது. இப்போதும் பரிசீலனை செய்வதாகச் சொல்கிறார்கள். எப்போது இந்தப் பரிசீலனை முடியும்? தொழிற்சாலையை இயங்க வைத்து தொழிலாளர்கள் வாழ்வு பெறுவதற்கு ஏதேனும் ஒரு திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அத்துடன் உடனடியாக தமிழக அரசு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஏதேனும் நிவாரணம் கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே பலமுறை பல தொழிற்சாலைகளுக்கு இவ்வாறு மாநில அரசு வழங்கியது உண்டு. அந்த வகையில் நிவாரணம் ஏதேனும் கொடுக்க முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு மட்டத்தில் தொடர்ந்து பேசிக் கொண்டுதான் வருகிறோம். தொழிலாளர் நலத்துறையினுடைய அமைச்சர், நமது மாண்புமிகு நிதியமைச்சர், நான் மூவரும் சேர்ந்து நிர்வாகத்தோடும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும் பேசி வருகிறோம். நான் ஏற்கெனவே சொன்னது போல் மூடியிருக்கிற ஆலையை திறக்கவேண்டும் என்று சொன்னால் சில லட்சங்கள் கொடுத்து உதவி செய்தால் அல்லது வேறு ஏதாவது நிவாரணம் கொடுத்தால்தான் திறக்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஆனால் இப்போதுள்ள நிலைமை 6 கோடி, 7 கோடி தரவேண்டும் என்று கேட்கிறார்கள். சில ஆலைகளில் பஞ்சு வாங்கிய விதத்திலே 3 கோடி நஷ்டம், மின் சார பாக்கி 1 கோடி, 2 கோடி, தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய பணம் ஆகிய இவைகளை மொத்தமாகக் கணக்குப்





பார்த்தால் 7 கோடி 8 கோடி, வருகிறது. ஆனால் அந்த ஆலையினுடைய மதிப்பே 50 லட்சம், ஒரு கோடி என்றுதான் இருக்கிறது.

ஆகவேதான் பாரதப் பிரதமரே பாராளுமன்றத்திலே நலிவுற்ற ஆலைகளை இனி தேசிய மயமாக்கப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். மைய அரசினாலேயே முடியாது என்கிறபோது மாநில அரசு மூடி இருக்கிற ஆலைகளை 7, 8 கோடி ரூபாய் கொடுத்து திறக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துக் கொள்வார்கள். இருந்தாலும் வேறு எந்த வகையிலாவது ஏதேனும் செய்து திறக்க முடியுமா என்றுதான் அந்த நிர்வாகத்தினரை அழைத்து பேச்சு வார்த்தை நடத்துகிறோம். கடன்களில் சிலவற்றை தள்ளுபடி செய்து, கடன் கொடுத்த வங்கிகளோடு பேச்சு வார்த்தை நடத்தி எந்த வகையிலாவது திறக்க முடியுமா என்பதைப் பற்றி அரசு பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அது எப்போது முடியும், எப்போது திறக்கப்படும் என்று என்னால் உறுதியாக வரையறுத்து சொல்ல முடியாது. தீவிரமாகப் பரிசீலிக்கும் என்றுதான் என்னாலே இப்போது சொல்ல முடியும். பல ஆலைகளில் பல பிரச்சினைகள் இருக்கின்றன சில ஆலைகளில் தொழிலாளர் பிரச்சினை இருக்கலாம். சில ஆலைகளில் நிர்வாகப் பிரச்சினை இருக்கலாம். அந்தந்த ஆலைகளில் என்னென்ன பிரச்சினை என்று பார்த்து அதற்கேற்பத்தான் செய்ய முடியும். சில இடங்களில் [illegible] நெருக்கடி இருக்கிறது. ஆக பல்வேறு விதமான காரணங்களால் அந்த ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. நிவாரணத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. மா. சின்னராசு : : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஜோதி நூற்பு ஆலையும், பவானி நூற்பு ஆலையும், ஸ்ரீ ஹரி நூற்பு ஆலையும் அரசாங்கத்தினுடைய முழு ஒத்துழைப்போடும், அரசாங்கம் கொடுத்த சலுகையினுடைய அடிப்படையிலேயும் தான் திறந்திருக்கின்றன. ஆகவே அதே அடிப்படையில், தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் அவர்களுக்கு வரவேண்டிய பழைய பாக்கி சம்பளங்களையும் கூட விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே அதையும் பயன் படுத்திக் கொண்டு அதே நேரத்தில் வேறு ஆலைகளை திறந்தது போல் ராதா கிருஷ்ணா மில்லை உடனடியாகத் திறக்க முடியும். ஆகவே அப்படி ஜோதி மில்லை திறந்ததன் அடிப்படையிலும், ஸ்ரீஹரி மில்லை திறந்ததன் அடிப்படையிலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புவதோடு, ஏற்கெனவே திறந்து விட்ட பவானி நூற்பு ஆலைக்கு அரசாங்கம்

மூலமாக சேல்ஸ் டாக்ஸ் கன்செஷனும், பவர் கட்டிலே இருந்து ரிலீஃபும் கொடுக்காத காரணத்தால் மீண்டும் அது மூடப்படக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறது என்ற அச்சம் தெரிவிக்கப்படு கிறது. ஆகவே அதைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய சார்பிலே யும் நிர்வாகத்தினுடைய சார்பிலேயும் 2, 3 பேர்களை போட்டு ஒரு குழு அமைத்து நடத்துவது எளிதான காரியம். அதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. ஆனால் அதை எப்படி தொடர்ந்து நடத்துவது என்பதிலேதான் நிதி பற்றிய பிரச்சி னை எழுகிறது. ஏற்கனவே திறந்திருக்கிற ஜாயின்ட்மானேஜ் மெண்ட் ஒன்றிலே அந்த நிர்வாகத்திலே இருந்து 2, 3 பேர் களையும், அரசாங்கத்தின் தரப்பிலே 2, 3 பேர்களையும் தேர்ந்தெடுத்து அனுப்பி குழு ஒன்று போடப்பட்டிருக்கிறது. அது நன்கு நடந்து கொண்டு இருக்கிறது. அதற்காக அரசு சில லட்சங்களைத்தான் செலவிட்டிருக்கிறது. அதற்காக பாங்க் காரண்டியும் கொடுத்திருக்கிறது. எனவே எந்த அளவி லே சிறிய அளவிலே கடன் கொடுத்து சரி செய்யலாம் என் பது பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். ஆனால் பெரும் பாலான ஆலைகளில் பெரிய அளவிலே செய்ய வேண்டி யிருப்பதால்தான் அரசு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. மாண்பு மிகு உறுப்பினர்கள் சொன்ன பிரச்சினைகளை மனத்திலே கொண்டு அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும்.

[முற்பகல் 11–30]

## 5 அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.—

(அ) 1983–84–ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வணிகம்) உள்துறை தொடர் பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தொன் றாவது அறிக்கை.



(ஆ) 1971–72 முதல் 1975–76 வரையிலான ஆண்டுகளுக் கான தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1983–84) அளித்த முப்பத்தி ஒன்பதாம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கை.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2–3–1987-ஆம் நாளன்று டாக்டர் கே. சமரசம் அவர்களால் ஆளுநர் உரைக்கு நன்றி கூறி முன்மொழிந்த தீர்மானத்திற்கு வரப்பெற்ற திருத்தங்களை உறுப்பினர்கள் மொழிவார்கள்.

**திரு. கே. எம். தங்கமணி:** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

(1) திண்டிவனம், செஞ்சி, வானூர் ஆகிய வட்டங்களில் மழை பொய்த்து விட்டதால், குறிப்பாக திண்டிவனம் வட்டத் தில் உள்ள வீடுர் நீர்த்தேக்கம், 40 பெரிய ஏரிகள், 71 சிறிய ஏரிகளில் கொஞ்சமும் தண்ணீர் இல்லாமல் வறண்டிருக்கிற நிலை மையில் பயிர்கள் கருகிவிட்டபடியால் விவசாயிகள் வாட்டத் தைப் போக்க இப்பகுதிகளை வறட்சிப் பகுதியென அறிவித்து நில வரி வஜா, அரசுக் கடன், கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய் யவும், வறட்சி நிவாரணப் பணிகளை உடன் செயல்படுத்துவது குறித்தும் ;

(2) மதுவிலக்கு அமுலுக்குப் பின்னரும் உயர்வகை மது பானங்கள் விற்பனையை தடை செய்யாமலும், தமிழகத்தின் எல்லா இடங்களிலும் பெருகி உள்ள கள்ளச் சாராய விற்பனையை தடுப்பது பற்றியும் விஷ மதுவால் அண்மையில் சென்னை, கோவையில் பலர் உயிர்விட்டது குறித்தும் ;

(3) திண்டிவனம் நகருக்கு திருவெண்ணெய்நல்லூர் ஆற் றுப் படுகையிலிருந்து செஞ்சி வழியாகத் தண்ணீர் கொண்டு வரும் 12 கோடி ரூபாய் செலவிலான கூட்டுக் குடிநீர் திட்டத்தை உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் தற்காலிகமாக நகரில் குடிநீர் வசதி செய்ய 20 இலட் சம் ரூபாய் ஒதுக்குவது பற்றியும் ;

(4) திண்டிவனம் வட்டம், ரெட்டணைவராக நதி என்னும் தொண்டியாற்றின் குறுக்கிலும், ஓமந்தூர் தென்பசார் சாலையில் குறுக்கிடும் கால்வாயின் மீதும் உயர்மட்டப் பாலம் 1987–1988-ஆம் நிதியாண்டில் பாகம் 2 திட்டத்தில் சேர்த்து செயல்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் ;

(5) திண்டிவனம் பகுதியில் எந்தத் தொழில் வளர்ச்சியும் இல்லாத நிலைமையைப் போக்க வழிவகைகள் செய்ய வேண்டிய அவசியம் குறித்தும்;

(6) தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து உதயமாகும் வள்ளலார் மாவட்டத்திற்கு திண்டிவனம் தலைநகராகக் கொள்வது பற்றியும், இல்லையெனில் மாவட்ட அளவிலான சில முக்கிய அலுவலகங்களை திண்டிவனத்தில் இயங்கச் செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் ;

(7) புதிய 20 அம்சத் திட்டப்படி நரிக்குறவர்களுக்கு நல்வாழ்வு இல்லங்கள் துவங்க வேண்டிய அவசியம் குறித்தும் ;

(8) என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. ஆகிய திட்டங்களில் தமிழகத்தில் ஊராட்சிகள், சலவைத் துறைகள் முன்பு கட்டிக் கொடுத்தது போல கட்டவும் தற்போது மேற்கண்ட திட்டங்களில் இம்மாதிரி கட்டடங்கள் கட்டக் கூடாதென தடை செய்து உத்தரவிட்டுள்ளதை நீக்கக் கோருவது பற்றியும் ; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திரு. சி. பழனிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

(1) வறட்சியின் காரணமாக விவசாயிகள் தர வேண்டிய கடன்களை அரசு வசூலிப்பதை ஆறு மாதம் தள்ளி வைப்பது பற்றியும் ;

(2) மாநகராட்சி தேர்தல் நடத்துவது பற்றியும் ;

(3) கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவது பற்றியும்; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திரு. ஆர். செங்காளியப்பன் : துணைத் தலைவர் அவர்களே, திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, திரு. கு. ரமணி அவர்களால் கொடுக்கப்பட்ட கீழ்க்கண்ட திருத்தத்தை அவர்களின் சார்பாக நான் முன் மொழிகிறேன் :—

(1) ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகி வருவதைத் தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கையெடுப்பது குறித்தும் ;

(2) என்றும் கண்டிறாத அளவு வறட்சி நிலைமை ஏற்பட்டு கிராம ஏழை மக்கள் கிராமங்களை விட்டே வெளியேறுவதைத் தடுக்க உறுதியான உடனடி நடவடிக்கை எடுப்பது பற்றியும் ;

(3) விலைவாசி ஏற்றம் கடுமையாக உள்ளதால் மேலும் அதிகமாகக்கூடிய நிலைமை ஏற்பட்டு வருவதைத் தடுக்க வழிவகைகள் பற்றியும் ;

(4) தமிழகத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்து நிலமற்ற கிராமப்புற ஏழை மக்களுக்கு நிலம் கொடுக்க திட்டம் பற்றியும் ; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திரு. வி. பி. சிந்தன் : துணைத் தலைவர் அவர்களே, திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

*டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமைமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வளம் சேர்க்கும் ஆண்டாக, அமையுமென்று ஆளுநர் அவர்களின் புத்தாண்டு வாழ்த்துக்களுடன் தொடங்கிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களை இங்கே கூற ஆசைப்படுகிறேன்.

" பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு " என்ற பாரதியின் பாட்டிற்கிணங்க நம் பாரதத்தை உருவாக்கும் பாரதப் பிரதமர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிற, " செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே " என்ற தமிழ் திருநாட்டை பொன்கொழிக்கும் நாடாக மாற்றிக் கொண்டிருக்கும் வணக்கத்திற்குரிய தமிழக முதல்வர், புரட்சித் தலைவர், இதய தெய்வத்தை வணங்கி என் கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.

"...... கள்ளும் கவறும்
திருநீக்கப்பட்டார் தொடர்பு "

என்பது திருக்குறள். திருக்குறளைத் தந்த வள்ளுவன் காலத்திலிருந்து இருக்கிற கள்ளையும், சாராயத்தைத் தயாரிப்பதையும், விற்பனை செய்வதையும், அருந்துவதையும் அரசு தடை செய்திருப்பதை மனமாரப் பாராட்டுகிறோம். பெருந்துறைத்

தொகுதியைப் பொறுத்த வரையில் அங்கே இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கள் இறக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கள் இறக்கும் தொழிலாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது நம்முடைய தமிழகத்தில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருபார்கள் என்று எண்ணுகிறேன். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் ஆளுநர் உரையினை படிக்கின்றபோது 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கள் இறக்கும் தொழிலாளர்கள் இருப்பார்கள் என்று படித்தார்கள். அவர்களுக்கெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டாயிரம் ரூபாய் ரொக்க உதவியாகத் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த 2,000 ரூபாயை ரொக்கமாகத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அந்தத் தொழிலாளர்களிடம் தற்போது பதநீர் இறக்குவதற்கான கருவிகளும், வெல்லம் காய்ச்சுவதற்கான கருவிகளும் இருக்கின்ற காரணத்தால் அந்த இரண்டாயிரம் ரூபாயை அவர்களுக்கு பணமாக வழங்க வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கையாக இருந்துக் கொண்டிருக்கிறது. எனவே அதை ரொக்கமாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் அதே சமயத்தில் உள்ளபடியே பார்க்கிறபோது, கடந்த காலத்திலே பதநீர் இறக்குகின்ற அந்தத் தொழிலாளர்கள், கள் இறக்குபவர்களைவிடக் குறைவான சம்பளத்தைப் பெற்று, குறைவான வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவு படுத்த விரும்புகிறேன். 'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி, இந்த நாடே இருக்குது தம்பி' என்று அன்றே சொன்னார் புரட்சித் தலைவர் அவர்கள். நல்ல பிள்ளைகளை உருவாக்க 86.88 இலட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு படைத்த சரித்திர நாயகன் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள். நல்ல புத்தாடைகள் கொடுத்தார்கள். நல்ல புத்தகங்களைக் கொடுத்தார்கள். பல் உறுதி பெற பல்பொடி கொடுத்தார்கள். இப்போது 'வண்ணச் சீரடி மண்மகள் அறிந்திலள்' என்ற இளங்கோவடிகளின் அடிக்கு வடிவம் தருவதற்காக, 'பஞ்சென்ன, அந்தப் பிஞ்சுக் கால்களுக்கு, அந்த வண்ண வண்ண சீரடிதனில் ஓர் அடி கூட மண்மகள் அறியாத வண்ணம்' இருக்க சிறப்புமிக்க இந்தச் செருப்புத் திட்டத்தைத் தந்துள்ள புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுகிறேன். 15 இலட்சம் அரசு அலுவலர்களுக்கு சம்பளமாக மக்களின் நல்வாழ்வுக்காக போடுகின்ற திட்டத்திலே இருந்து பாதிக்கும்மேல் சம்பளமாகப் போய் விடுகின்ற நேரத்திலே 86.88 இலட்சம் குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள். 80 ஆயிரம் தாய்மார்கள் பயனடைகிறார்கள். 58.1 இலட்சம் குழந்தைகள் சீருடை



பெறுகிறார்கள். இதனால் 40 ஆயிரம் தாய்மார்கள் வேலை வாய்ப்புகளைப் பெறுகிறார்கள். 60 இலட்சம் சிறார்கள் செருப்பு பெறுகிறார்கள். 20 ஆயிரம் காலணி தைக்கும் நிலையங்கள் தொடங்கவும், பல்லாயிரக்கணக்கான காலணி தைப்போர் பயன் பெறவும், 20 இலட்சத்திற்கும் மேலாக உள்ளவர்கள் கூலியைப் பெறவும், 3 கோடிக்கு மேலாக துணை உறுப்புகளை உற்பத்தி செய்து வேலை வாய்ப்பைப் பெறவும், வாய்ப்பு ஏற்படுத்திய ஏழைப் பங்காளன் எங்கள் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுகிறோம்.

மக்களின் நல்வாழ்விற்காக, வறுமையான சமுதாயத்தின் நல்வாழ்விற்காக நூற்றுக்கணக்கான கோடிகளை ஓடி ஓடி செலவிட்டு, தன்னிகரில்லாத தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்த புரட்சித் தலைவர் அரசுக்கு என்னுடைய பாராட்டுக்கள். புரட்சித் தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க இப்போது நடை பெற்றுக் கொண்டிருக்கிற இந்த இலங்கைப் பிரச்சினை கூட ஒரு சுமுகமான முடிவிற்கு வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இந்த இலங்கைப் பிரச்சினை சுமுகமாகத் தீர்வதற்கு நாம் எல்லாம் கருத்துக்களை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் அனைவருக்கும் 300 ரூபாயை வழங்கிய அந்தப் பொங்கல் திருநாளில், கொடைக்கானல் தொலைக் காட்சி நிலையத்தைத் தொடங்கியமைக்காக நன்றி. அதிலே எந்நேரமும் ஒரு அலை வரிசையில் தமிழ் நிகழ்ச்சிகள் மட்டும் அமைந்திட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இப்போது புனல் பொய்த்து விட்ட காரணத்தால், அனல் மின் நிலையத்திற்கு அதிக நிதியை ஒதுக்கியிருக்கிற இந்த அரசைப் பாராட்டுகிறேன். உழவையும், தொழிலையும் இரு கண்களாகப் பாவிக்கும் இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுக்கள். வேளாண்மையிலே வறட்சியிலும் புரட்சியை ஏற்படுத்திய புரட்சித் தலைவருக்குப் பாராட்டுக்கள்.

கைத்தறிக்கு மானியமாக வழங்குவதை விட, அந்தக் கைத்தறித் தொழிலாளர் குடும்பத்திற்கு ஒரு விசைத் தறியை மானியமாகத் தந்து விடுவது நல்லது என்று நான் எண்ணுகிறேன். அதே நேரத்திலே தமிழகத்திலே தொழில் தொடங்க ஆர்வம் காட்டுகின்ற என். ஆர். ஐ., அதாவது நான்-ரெசிடென்ட்ஸ் இண்டியன்ஸ்களுக்கு தமிழக அரசு ஆர்வம் காட்டினால் அதைக் குறை கூறாமல் மன்ற உறுப்பினர்கள் அவர்களுக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லி, இங்கே தொழில் தொடங்க ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[டாக்டர் அ. பொன்னுசாமி] [1987 மார்ச் 6

சில தொழில்களைப் பொறுத்த வரையிலும், 1986–87 ஆம் ஆண்டில் மத்தியில் 76,382 ஆக அது உயர்ந்திருக்கிறது. இதன் காரணமாக 950 கோடிக்கு மேலாக மூலதனத்தை அதிலே இட்டிருக்கிறோம். அந்த அளவிற்கு சிறு தொழில்களுக்காக, நமது அரசாங்கம் செயல் பட்டுக் கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டாக வேண்டும்.

மத்திய அரசின் அனுமதி பெற்று, புதிய சர்க்கரை ஆலை களைத் தொடங்கவும், எக்ஸ் கதிர் படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலையைத் தொடங்கவும், இரோமாட்டிக் சேர்மங் கள் தயாரிப்புத் தொழிற்சாலையைத் தொடங்கவும், உரத் தொழிற்சாலையைத் தொடங்கவும் நடவடிக்கைகள் எடுத்து, அதைப் பெற்றுக் கொடுத்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன். மற்றும் சில தொழில்களைத் தொடங்க மத்திய அரசின் இசைவைப் பெற மன்ற உறுப்பினர்கள் ஆதரவு தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள் கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே, வேளாண்மைக் கடனில் இப்போது மறுமலர்ச்சியை ஏற்படுத்திய அரசுக்கு பாராட்டுக்கள். புரட் சித் தலைவர் அவர்கள், தாய் உள்ளத்துடன், தள்ளுபடி செய்த அந்த 125 கோடி ரூபாயிலே கட்டியவர்கள் கட்டி விட் டோமே என்று வருத்தப்படுகிறார்கள். கடன் வாங்காதவர்கள் கடன் வாங்கவில்லையே என்று வருத்தப்படுகிறார்கள். என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டாக வேண்டும்.

வரும் ஆண்டுகளில் வறட்சி கடுமையாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அதற்கு 28 கோடி ரூபாயை ஒதுக்கிய இந்த அரசுக்கு பாராட்டுக்கள். இந்த சட்டமன்றத்திலே பல முறை ஒரு கருத்து எடுத்து வைக்கப்பட்டு இருக்கிறது. அதில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். 6'' ஆழ் குழாய் கிணறு களை 100 மீட்டர் தோண்டுவதற்கு 20 ஆயிரம் ரூபாயை இந்த அரசு செலவிடுகிறது. இதற்கு டெண்டர் வைத்தால் அது 15 ஆயிரத்திற்குள்ளாகவே முடிந்துவிடும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11–40)

அதே நேரத்தில் கைப் பம்புகளைப் பொறுத்தவரையில் இந்த 6 இன்ச் போர் தேவையில்லை. 4½ இன்ச் போரே போதும். இதில் பாதி செலவு மிச்சம் ஆகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதன் காரணமாக அந்த செலவு 7,500 ரூபாய்க்குள் முடியும். ஆகவே இதே 28 கோடி ரூபாய்க்கு தற்போது போட இருக்கின்ற 8,625 போர் வெல்களுக்குப் பதிலாக குறைந்தது 20 ஆயிரம் போர் வெல்கள் போடலாம் என்பது எங்களுடைய கருத்து. அப்படிப் போட்டால் போர் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம், முடியாது என்பது



1987 மார்ச் 6] [டாக்டர் அ. பொன்னுசாமி]

உண்மையானாலும் அதாவது ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு ஹேம்லெட்டுக்கும் ஒரு போர் வெல் போடுவதற்கு நாம் முயற்சியை மேற்கொண்டால் கண்டிப்பாக போட்டுமுடிக்கலாம் என்பதுதான் என்னுடைய எண்ணமாக இருக்கிறது.

நிலத்தடி நீர் நாளுக்கு நாள் கீழ் நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறது என்பதைப் பற்றி நமக்குத் தெரியும். இதைப்பற்றி நிபுணர்கள் கூட ஆய்ந்து அறிந்து சொல்லியிருக்கிறார்கள். இப்போது கிணறுகளை ஆழப்படுத்துவதில் மட்டும் பயன் இல்லை. போர் வெல்களும் நிரந்தரமான நீரைக் கொடுக்கிற வழியாகத் தெரியவில்லை. அதன் காரணமாக தேவையான நீரைப் பெற குறிப்பாக குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகப் போக்க வேண்டும் என்றால் கூட்டுக் குடிநீர் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக எங்கள் பெருந்துறை தொகுதிக்கு பவானி ஆற்றிலிருந்து குன்னத்தூர், திங்களூர், விஜயமங்கலம், ஊத்துக்குளி போன்ற பகுதிகளுக்கு அந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தை வருகிற ஆண்டில் நிறைவேற் றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் மேல் பவானி திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்றும், பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டும். இந்த எல். பி. பி.யில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு தடவையாவது தண்ணீர் விட வேண்டும். இந்த எல்.பி.பி.யில் மட்டும் தான் குறைந்த தண்ணீரில் நிறைந்த விளைச்சலைப் பெறுகிறார்கள் என்று குறிப்புகள் சொல் கின்றன. மாவட்டங்களைப் பிரிக்கின்ற இதே நேரத்தில் ஊத்துக் குளி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் திங்களூர் பகுதியையும் அதிலே சேர்த்துக் கொள்ள வேண்டும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் பெருந்துறையை நகராட்சியாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் இங்கே வைக்க ஆசைப்படு கிறேன். ஆளுக்கு ஒரு வீடு கட்டவும் தொழில் வளர்ச்சியைப் பெருக்கவும், கூட்டுக் குடிநீர் திட்டத்தை ஏற்படுத்தவும், வறட்சி நிவாரணத்தை மேற் கொள்ளவும் மத்திய அரசிடமிருந்து அதிக நிதி பெற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த குரல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிக நிதி பெற்றும், செலவினங்களை பல வழிகளில் குறைத்தும் கிடைக்கின்ற நிதியிலிருந்து 234 தொகுதிகளுக்கு 468 கோடி ரூபாயாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் என்னுடைய எண்ணமாகச் சொல்லுகிறேன். அதிலே ஆண்டு ஒன்றுக்கு 234 தொகுதிக்கு ஒரு தொகுதிக்கு ஒரு கோடி ரூபாய் வீதம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு போர் வெல் அமைப்பதற்கு, தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு, மருந்தகங்கள் கட்டுவதற்கு; பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு, சத் துணவுக் கூடங்கள் கட்டுவதற்கு, தார் ரோடு போடுவதற்கு

பாலங்கள் அமைப்பதற்கு, சுற்றுப்புறம் முழுவதும் தூய்மையோடு இருக்க மரங்கள் நடுதல் மற்றும் நட்டதற்குப் பின்னால் அவை பட்டுப் போகாமல் இருக்க அவைகளைப் பேணிக் காப்பது இன்னும் மற்ற வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற அந்த ஒரு கோடி ரூபாயைப் பயன்படுத்தலாம் என்பதை என் எண்ணமாகச் சொல்லுகிறேன். அதேபோல் இன்னும் இருக்கிற 234 கோடி ரூபாயில் ஒரு தொகுதிக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வீதம் சிறு தொழில்களுக்கு முதலீடு செய்ய வேண்டும். அப்படி நாம் முதலீடு செய்தால் மற்ற நிதி ஆதாரங்களும் குறிப்பாக உலக வங்கியிடமிருந்தும், எல்.ஐ.சி. போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதி ஆதாரங்களைத், அதாவது 4, 5 கோடி ரூபாயை நாம் கடனாகப் பெற முடியும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவ்வாறு பெறும் 5 பிளஸ் 1 ஆக மொத்தம் 6 கோடி ரூபாயை கடனாகப் பெற்று ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு சிறு தொழிற் பேட்டை அமைத்து மாற்றம் செய்தால் தொழில் புரட்சியை கிராமங்களில் ஏற்படுத்தலாம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பெருந்துறை வட்டத்தைத் தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவித்து இந்தத் திட்டத்தை பெருந்துறை தொகுதியில் முதன் முதலாக தொடங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது பெரும் பெயர் பெற்ற பெருந்துறையில் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக அமைத்து இருக்கின்ற, மருத்துவக் கல்லூரியைத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அப்படி ஏற்படுத்தக்கூடிய அந்த மருத்துவக் கல்லூரிக்கு நமது புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டும் என்று நான் கேட்டு எனக்கு பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு வணக்கத்திற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் பங்கேற்பதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கம் இந்த மன்றத்திலே 62 உறுப்பினர்களை உள்ளடக்கி, ஒரு பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எங்களுடைய கடமையை, பொறுப்பினை நன்றாக உணர்ந்து, நாகரிகமாக அவ்வப்போது குறைகளை எடுத்துக் காட்டி, எங்களுக்கிருக்கின்ற அறிவுக்கு எட்டிய நல்ல யோசனைகளையும், ஆலோசனைகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், விவரம் தெரியாதவர்கள், உணர்ச்சிவசப்படக்கூடிய சிலர், நீங்கள் எதிர்க்கட்சி





யாக இருக்க வேண்டாம், எதிரிக்கட்சியாக மாறி விடுங்கள் என்று சொல்கின்ற அளவிற்கு இந்த மன்றத்திலே அமைச்சராக இருந்தவர்கள், பாராளுமன்றத்திலே தலைவர்களாக இருக்கின்றவர்கள் இன்று அநாகரீக வாசகங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை மிக வேதனையோடு தெரிவித்துக்கொண்டு, அந்த மாதிரி முயற்சியில் ஈடுபடுவது ஜனநாயகத்திற்கும் நல்லதல்ல, நம்முடைய தமிழ்ப் பண்பாட்டிற்கும் நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களை தயவு செய்து எதிரிக் கட்சியாக மாற்றுகின்ற நிலைமையில் தள்ளிவிடாதீர்கள் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மகாத்மா காந்தி அவர்கள் சொல்வார்கள். That form of Government is the best Government which governs the least எந்த ஒரு அரசாங்கம் குறைந்த அளவிற்கு மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் தலையிடாமல் நடக்கின்றதோ, அது தான் மிகச் சிறந்த அரசாங்கம் என்று அவர்கள் சொல்வார்கள். மாற்றுக் கருத்து, நேர் எதிரான கருத்து உள்ள ஜான் ரஸ்கின், டால்ஸ்டாய் போன்றவர்கள் கூட அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், எங்களுடைய தாழ்மையான கருத்தெல்லாம், இந்த அரசாங்கம் புதியதாக ஒரு கொள்கையை உருவாக்கி இருக்கிறதோ என்று தான் நான் கருதுகிறேன். That form of Government is the best Government when there is no Government.

அதாவது, இந்த அரசு நாங்கள் எதிர்பார்க்கின்ற அளவிற்கு வேகமாக செயல்பட வேண்டுமென்ற அந்த அடிப்படையில் தான் இந்தக் குற்றச்சாட்டை, இந்தக் குறையை எடுத்து நாங்கள் கூறுகின்றோம். The Tamil Nadu Government is an inactive and indifferent Government. மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேகமாகச் செயல்படவில்லை, மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற ஆதங்கத்தில்தான் அதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்து 25 அமைச்சர்கள் அமர்ந்திருந்தார்கள். நான்கு மாதங்களில் திடீரென்று 10 அமைச்சர்களை நீக்கிவிட்டார்கள். நாங்கள் எல்லாம் நினைத்தோம், இன்னும் நல்ல இளைஞர்களாகவும், துடிதுடிப்புடன் செயல்படும் புதுமுகங்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்து ஏமாந்தோம். இப்போது 15 அமைச்சர்களை வைத்துக்கொண்டு, முன்பிருந்த அமைச்சர்கள் வகித்து வந்த இலாக்காக்களை நிர்வகித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது அரசு. ஒருவேளை 15 அமைச்சர்களே போதுமென்ற நிலைமைக்கு அரசு வந்திருக்கிறதா ? அல்லது அந்த 10 அமைச்சர்களும் கடந்த ஆண்டுகளாகப் பணியே செய்யவில்லை, செய்யாமல் சும்மா சம்பளம் கொடுத்து வந்தார்களா என்ற ஐயம் ஏற்படுகிறது. இப்போதுள்ள அமைச்சர்கள் செய்யும் செயல்கள், அவர்கள் ஓவர்லோடு, அதிகமாக வேலை செய்கிறார்கள் என்ற நிலையில் கூட முன்னால்

V211,31 'N87
N87-33-2
98795

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1987 மார்ச்

அமைச்சராக இருந்தவர்கள் வகித்து வந்த அந்த இலாக்காக்கள் இன்றைக்கு செயல்படாமல் இருக்கிறதோ என்று தான் வாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அமைச்சர்களைப் போடுவது, எடுப்பது என்பதெல்லாம் முதலமைச்சருடைய உரிமை. அதில் தலையிடுவதற்கு உரிமையில்லை என்பதை நான் உணர்ந்து கொண்டு, வாதத்திற்கு இந்த அரசாங்கம் மேலும் துடிதுடிப்புடன் செயல்பட வேண்டும். மேலும், வேகமாக செயல்பட்டு மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையை இங்கே உட்கார்ந்துகொண்டு 40 நிமிடம் கேட்டபோது, ஒரு புறத்திலே வேதனையாகவும், மறுபுறத்திலே நகைச்சுவையாகவும் இருந்தது. ஆளுநர் உரை என்பது என்னவென்று சொன்னால், அது ஒரு '' Pre-Budget ''. அதாவது நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்னாலே நிகழ்த்தப்படக் கூடிய உரை. — Survey of Economic growth. அதாவது பொருளாதார வளர்ச்சி நம்முடைய தமிழகத்தில் எந்த அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆளுநர் உரை எடுத்துக் காட்டும் என்று எதிர்பார்த்து ஏமாந்துவிட்டோம். தமிழகத்திலே கடந்த ஓராண்டில் விவசாயப் பொருட்கள் எந்த அளவிற்கு உற்பத்தியாகியிருக்கின்றன அல்லது விலைவாசி எந்த அளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது, எத்தனை புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன, அந்தப் புதிய தொழிற்சாலைகளில் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் எதிர்பார்த்தோம்.

[முற்பகல் 11-50]

பப்ளிக் டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டம் என்று சொல்வார்களே. அது எந்த அளவிற்கு வெகு வேகமாகச் செயல்பட்டிருக்கிறது என்றெல்லாம் இவர்கள் ஒரு எக்கனாமிக் சர்வே கொடுப்பார்கள் என்று நினைத்துப் பார்த்து, கடைசியிலே பார்த்தால் அதிலே ஒன்றுமே இல்லாமல் ஏதோ சில திட்டங்களை மாத்திரம் சொல்லி விட்டார்கள் என்று தான் நாங்கள் வருத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறோம். காரணம் ஒரு சிறிய உதாரணம். இங்கே விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது என்பது மத்திய அரசினுடைய பங்காக இருந்தாலும், மாநில அரசுக்கும் அதில் பொறுப்பு இருக்கிறது.

இங்கே ஓரிடத்தில் சொல்லுகிறார்கள். An analysis of index provided by the Central Statistical Organisation during the year 1986 (end of December) shows that the inflation rate was the highest in Madras at 11 per cent followed by Calcutta at 10.2 per cent, Bombay at 8.5 per cent and Delhi at 9.1 per cent. என்று சொல்கிறார்கள். அதாவது விலைவாசியினுடைய பணவீக்கம் அதிகமாக ஏற்பட்டு இருக்கிறது. '' மெட்ராஸ் சிட்டி லீட்ஸ் ''—சென்னை மாநகரம் தான் அதில் முதலிடம் வகிக்கிறது என்று பத்திரிகையிலே ஒரு குறிப்பு வந்திருக்கிறது. அதை படிக்கின்றபோது பார்த்தேன். விலைவாசியை சென்னை மாநகரத்தில் கட்டுப்படுத்துவதற்கு எந்தவிதமான முயற்சியும் நாம் எடுக்கவில்லை என்பதைத்தான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987. மார்ச் 6] [டாக்டர் கே. சௌரிராஜன்]

இன்று நீங்கள் ஒரு பெரிய விளம்பரமாகச் சொல்லியிருக்கிறீர்கள். எனக்கு நகைச்சுவையாக இருந்தது. ஏனென்றால் இந்த ஜனவரி மாதம் 1-ந் தேதியிலிருந்து இங்கே மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னீர்கள். இது தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக—காலாகாலமாக அழுது கொண்டிருக்கின்ற தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த நடவடிக்கை, அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். நான் சொல்லுகின்றேன், 1983ஆம் ஆண்டிலும் நான் இருந்தேன். பலர் இருந்திருக்க மாட்டார்கள். அப்போதும் அதைத்தான் சொன்னீர்கள். தாய்மார்கள் துயரை, கண்ணீரைத் துடைப்பதற்காகத்தான் நாங்கள் மதுவிலக்கை ரத்து செய்கிறோம் என்று சொன்னீர்கள். ஏனென்று கேட்டால் ஆயிரக்கணக்கான பேர்கள் கள்ளச் சாராயம், விஷச் சாராயம் குடித்து செத்துவிட்டு, அந்தத் தாய்மார்கள் எல்லாம் கண்ணீரும் கம்பலையுமாக, பொட்டிழந்து, பூவிழந்து தெருவிலே நிற்கிறார்களே, அவர்களுடைய துயரைப் போக்குவதற்காகத்தான் மதுவிலக்கை ரத்து செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இப்போது மறுபடியும் மதுவிலக்கை அமுல்படுத்தப்போகிறோம் என்று சொன்னபோதும் கூட அதே வாதத்தைத்தான் சொல்கிறீர்கள் என்று நினைக்கின்றபோது கொஞ்சம் எனக்கு நகைச்சுவையாகத்தான் இருக்கிறநு.

புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக தாய்மார்களுடைய கண்ணீரைத் துடைப்பதில் வல்லவர், நல்லவர். ஆனால், இந்த தமிழகத்திலே உள்ள தாய்மார்கள் கண்ணீரை யாராலும் துடைக்க முடியுமா என்பது எனக்கு சந்தேகம். சாராயம் குடிக்காதே என்று சொன்னால், அவர்கள் '' ஐயகோ ! என் புருஷன் கள்ளச்சாராயத்தைச் சாப்பிட்டு விட்டு செத்து விடுகின்றானே '' என்று கேட்கிறார்கள். 'சரி குடி' என்று சொன்னால், '' ஐயகோ ! என்னுடைய வீட்டிலே உள்ள சாமான், பண்டம், பாத்திரம் எல்லாவற்றையும் அடகு வைத்து விட்டு, குடித்துவிட்டு எங்களைத் தொந்தரவு செய்கிறானே, துன்புறுத்துகிறானே '' என்று தாய்மார்கள் கூக்குரலிடுகின்றார்கள். இதிலே எப்படித்தான் தீர்வு காண்பது என்று எனக்கே புரியவில்லை. புரட்சித் தலைவர் அவர்கள்கூட இதற்கு தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை. ஆனாலும் எனக்கு சிறிய யோசனை ஒன்று தோன்றுகிறது. இங்கே நம்மிடையே உள்ளவர்கள் பெரும்பாலானவர்கள் குடிப்பதில்லை. குடிப் பழக்கத்திற்கு

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1987 மார்ச் 6

அடிமையாகவும் இல்லை. இந்தக் குடிப் பழக்கத்திற்கு அடிமையாகாமல் இருப்பதற்குக் காரணம் நம்மிலே உள்ள பலருக்குத் தெரியும். அதாவது குடிப்பது குடியைக் கெடுக்கும். அல்லது பாவம் என்றெல்லாம் சொல்லி நாம் அடிமையாகாமல் இருப்பதில்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்கிறேன். நான் குடிக்காமல் இருப்பதற்குக் காரணமே என்னுடைய மனைவியார் தான். குடித்துவிட்டால் வீட்டிலே உள்ளே விடமாட்டார்கள். இங்கே, நிச்சயமாக ஃபேமலியிலே ஹார்மோனியஸ் சிச்சுவேஷன் நிலவ வேண்டும் என்பதற்காகத்தான், அந்தக் கட்டுப்பாட்டினால்தான் பல பேர்கள் குடிக்காமல் இருக்கிறார்கள் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆகவே, பெண்களாகவே முன்வந்து— யாராவது குடித்தால் அந்த கணவனுடன் நான் வாழ மாட்டேன் என்று சொல்லி ஒரு புரட்சியை அவர்களே உருவாக்கிக் கொண்டு, அப்படி குடிக்கிற கணவன் என்று நினைத்தால் உடனடியாக நம்முடைய குடும்ப நீதி மன்றத்திலே அவர்களுக்கு விவாகரத்தும் கொடுத்து, அவர்களுடைய பிள்ளைகள், குட்டிகள் கஷ்டப்படுவார்களே என்பதற்காக தமிழக அரசே முன்வந்து, கணவன் குடிபோதையில் இருந்தால் என்பதற்காக விவாகரத்து செய்யப்பட்ட மனைவிமார்களுக்கு உடனடியாக வேலையில் முன்னுரிமை தரப்படும் என்று ஃபேமலி திட்டம் ஒன்றை அறிவித்தால் இந்த தமிழகத்தினுடைய தாய்மார்களின் கண்ணீர் துடைக்கப்படும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான யோசனை.

அடுத்தபடியாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். The Government have prohibited the manufacture, sale and consumption of arrack and toddy என்று சொல்லியிருக்கிறார்கள். மேன்யுஃபேக்சரை தடுத்துவிடலாம். அதாவது உற்பத்தியாவதையும் சேல்—விற்பனையையும் தடுத்து விடலாம். கன்சம்ஷன் ஆஃப் டாடி அல்லது அரக் எப்படி தடுக்க முடியும். ஒருவன் குடித்துவிட்டு வந்தானானால் அவன் கள் அல்லது சாராயம் தான் குடித்துவிட்டு வந்தானா அல்லது விஸ்கி, பிராந்தி, ரம் போன்றவற்றை குடித்துவிட்டு வந்திருக்கிறானா என்று எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? ஆகவே, இது ஏதோ சம்பிரதாயத்திற்காக, இருக்கிற சட்டத்தை அப்படியே மாற்றி இருக்கிறீர்களேயொழிய, இது வேடிக்கையாகத் தான் இருந்து கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் சொல்கிறீர்கள், ''30 ஆயிரம் 'டேப்பர்ஸ்' மரம் ஏறிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக, நாங்கள் ஆளுக்கு இரண்டாயிரம் ரூபாய் அனுமதி கொடுத்து இருக்கிறோம். கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய் செலவிடப் போகிறோம்'' என்று சொல்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி. அவர்களுக்கெல்லாம் அதை எதற்காக செலவழிக்கப் போகிறோம் என்றால், "to purchase the tools and equipments for tapping of neera".



1987 மார்ச் 6] [டாக்டர் கே. சௌரிராஜன்]

தென்னை மரம் ஏறுவதில் ஒரு கஷ்டம், பனை மரம் ஏறுவதில் ஒரு கஷ்டமா? எனக்குத் தெரியவில்லை. வேறு ஏதாவது புதிதாக டூல்ஸ், எக்விப்மென்ட்ஸ் வாங்கவேண்டுமா, என்ன? இரண்டும் மரம் ஏறுகிற தொழில்தான். எனக்கு வித்தியாசம் தெரியவில்லை. தெரிந்தால் நம்முடைய நாவலர் அவர்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

தென்னை மரம் ஏறுவதைவிட, பனை மரம் ஏறுவதற்கு டூல்ஸ், இம்பிளிமென்ட்ஸ் வாங்கவேண்டுமா என்று தெரியவில்லை. ஆனால், எங்களுடைய ஆட்சிக் காலத்திலே இருந்ததை சொல்கிறேன். இப்படி மதுவிலக்கு அமல் படுத்தப்பட்டவுடன், 'டேப்பர்ஸ்' வேலை வாய்ப்பு இழந்த காரணத்தினால், நாங்கள் ஒன்று செய்தோம்; காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், 'நீரா அல்லது பனை வெல்லம் தயாரிப்பாளர் கூட்டுறவுச் சங்கம்' என்று உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் அனுமதித்து, பல இலட்சக் கணக்கான ரூபாய்களை அளித்து, மறுவாழ்வு செய்தோம். அதிலே கூட சொல்கிறேன். பல தவறான நபர்கள் புகுந்து கொண்டு, அந்தப் பணத்தைக் கொள்ளையடித்துவிட்டு அல்லது ஏமாற்றிவிட்டுப் போய்விட்டார்கள் அல்லது நஷ்டத்தில் ஓடியது என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த பனை வெல்லம் என்பது ஒரு மிக நல்ல, புதிய இன்டஸ்ட்ரி, தொழிலாகக்கூட உருவாக்கப்படலாம். பனங்கற்கண்டு மூலம் நாம் நிச்சயமாக இப்படி பலவற்றை உருவாக்க முடியும். அதே நேரத்தில், சர்க்கரை என்றால் வெறும் சர்க்கரை அல்ல. அதிலே குளுகோஸ், ஃப்ரக்டோஸ், சுக்ரோஸ், லாக்டோஸ், கா்லக்டோஸ் என்று பலவிதமான சர்க்கரைகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் எப்படி அந்த கருப்பட்டியிலிருந்து, பனை வெல்லத்திலிருந்து தயாரிக்க முடியும் என்பதை ஆராய்ச்சிகள் செய்து பனை வெல்லம் தயாரிப்பதைப் பற்றி விஞ்ஞான பூர்வமான திட்டமாக உருவாக்கி, அதிலே டேப்பர்ஸ்-க்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி யோசிக்கும்படி கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, இந்த ஆளுநர் உரையினைப் படிக்கின்ற நேரத்தில் இங்கே தமிழ்நாடு என்பது ஒரு யூனியன் டெரிட்டரியா என்ற சந்தேகமே எனக்கு வந்துவிட்டது. இந்த உரையைப் பார்த்தால் கிட்டத்தட்ட 13 தலைப்புகளில், 'மத்திய அரசைக் கேட்டு இருக்கிறோம்; மத்திய அரசு செய்திருக்கிறது என்று இருக்கிறது. 13 தலைப்புகளில் மத்திய அரசு செய்கிறார்கள், மத்திய அரசு உதவி அளித்து இருக்கிறார்கள், மத்திய அரசு உறுதியளித்து இருக்கிறார்கள்' என்று எல்லாத் திட்டங்களிலேயும் சொல்லியிருக்கிறீர்களேயொழிய, 'தமிழகமே என்ன செய்திருக்கிறது, தமிழ்நாடு என்ன செய்

திருக்கிறது, தமிழ்நாடு அரசு என்ன திட்டங்கள் மேற்கொண்டிருக்கிறது என்றால், ஒன்றே ஒன்றுதான். காலணியை இலவசமாக குழந்தைகளுக்குக் கொடுக்கின்ற ஒரு திட்டமும், இன்னும் வீடு கொடுக்கின்ற திட்டமும் தவிர, மற்ற திட்டங்கள், குறிப்பாக மின் உற்பத்தி செய்கின்ற திட்டம், அதாவது தெர்மல் பவர்; தூத்துக்குடியிலே, கடலூரிலே, மேட்டூரிலே, இன்னும் சென்னையிலே, இங்கே உற்பத்தி செய்யக்கூடிய......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, அந்த அளவுக்கு நமது மாநிலம், மத்திய அரசுக்கு கட்டுப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் இப்போதாவது உணர்ந்து கொள்வாரா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: நான் இதை ஒரு குறையாகச் சொல்லவில்லை. மத்திய அரசு நம்முடன் இணக்கமாக இருந்து கொண்டு, ஏராளமான உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறது. We should als) be m)re dynamic and try to evolve some m)re pr( jects on our own initiative. நாமாகவே இன்னும் சில முயற்சிகளை எடுக்கலாமே என்ற ஆதங்கத்தில்தான் சொல்கிறேனே ஒழிய, இதை குறையாக எடுத்துச் சொல்லவில்லை.

அடுத்தபடியாக, இங்கே சொல்கிறீர்கள். மதுவிலக்குக் கொள்கை அமல்படுத்தப்பட்ட பிறகு, இங்கே 'இந்து' பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள். It is a poor man's pr hibiti n என்று சொல்லி இருக்கிறார்கள். ஏழைகள் தான் குடிக்க முடியாத நிலைமை உருவாகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக 3½ ரூபாய் விற்ற 100 மில்லி சாராயத்தைக் குடித்துக் கொண்டிருந்தவன் தற்போது 13 ரூபாய் அளவுக்கு குவார்ட்டர் பாட்டில் வாங்கிக் குடிக்கக் கூடிய நிலைமைக்கு தள்ளப் பட்டிருக்கிறான். அதனால் பொருளாதாரச் சீரழிவை அது மேலும் உருவாக்கும் என்ற நிலைமையையும் விவரித்து இருக்கிறார்கள். அடக்க விலை 4 ரூபாய்; ஆனால் விற்கின்ற விலை 13 ரூபாய் என்று சொல்கிறபோது, நிச்சயமாக ஏராளமான பணத்தை சாதாரண ஏழை மக்கள், குடி போதையில் இருப்பவர்களிடமிருந்து வரியாக வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. கொஞ்சம் சிந்திக்க வேண்டிய விஷயம் என்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்தபடியாக, toning up of public sector administration பல பொது நிறுவனங்களை அரசு எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறது. டான்சி, டாமின் போன்றவை லாபகரமாக நடைபெறுகின்றன என்று சொல்லியிருக்கிறீர்கள்; எத்தனை பொது





நிறுவனங்கள் லாபகரமாக ஓடிக் கொண்டிருக்கின்றன? தமிழ்நாடு சால்ட் கார்ப்பரேஷன், தமிழ்நாடு ஷுகர் கார்ப்பரேஷன் இப்படி பல கார்ப்பரேஷன்களும் உருவாகி அவையெல்லாம் நஷ்டத்திலே ஓடிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு நாவலர் அவர்கள் பதிலுரையிலே இத்தனை பொது நிறுவனங்கள் வேகமாக உற்பத்தி செய்து லாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன என்கிற பட்டியலை தருவாரேயானால் அவருக்கு நான் மிக்க நன்றி உடையவனாக இருப்பேன் என்பதை சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லுகின்ற நேரத்தில், ஏற்கெனவே சொன்னேன், பெரிய அளவிலே Aromatic products, Madras Fertilisers, X-ray films எல்லாம் மத்திய அரசு ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறது என்று. ஆனால் சிறு தொழில்களில் தமிழகம் மிக வேகமாக முன்னேறியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். என்னைப் பொறுத்த வரையில் இதில் முன்னேற்றம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இங்கே பத்திரிகை குறிப்பு ஒன்று சொல்கிறது. பார்த்தசாரதி என்ற ஒருவர், இந்த ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீசினுடைய அசோசியேஷனுடைய Chairman, "The State Government should take steps and act immediately to save these small units. Of the 60,000 registered small-scale units in Tamil Nadu, over 18,000, according to the Reserve Bank of India report at the end of Decembor 1985, are very sick and on the verge of perishing." என்று சொல்கிறார்கள். ஆகவே இங்கே நிலைமை எப்படி இருக்கிறதென்று சொன்னால், நீங்கள் ஒன்று சொல்கிறீர்கள். ஆனால் யதார்த்தமான உண்மைகள் என்று சொன்னால், இங்கே ஏறக்குறைய தமிழகத்திலே 75 ஆயிரம் சிறு தொழில்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறீர்களேயொழிய மொத்தம் உற்பத்தி செய்த பொருள்கள் எத்தனை? உருவாக்கப்பட்டிருக்கிற கேப்பிடல் அவுட்லே எவ்வளவு? அதிலே எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்ற குறிப்பு உங்களிடத்திலே இல்லை. ஆனால் தொழிலதிபர்கள், தமிழகத்திலே சிறு தொழில்கள் நசித்துக் கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். இன்னும் வேகமாகப் பேசினார்கள். Madras Exp rt Promotion Zone என்று உருவாக்கி இருக்கிறோம் என்று சொன்னார்கள். மீனம்பாக்கத்துக்கும் தாம்பரத்திற்கும் இடையே ஏராளமாக சிறு தொழில்கள் உற்பத்தியாகும் என்று, நான் கூட நம்முடைய தொழில் அமைச்சர் மாண்புமிகு ராஜாராம் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, கனவு கண்டு கொண்டிருந்தேன். அங்கே என்ன நடக்கிறது என்று கடைசியிலே பார்க்கிறபோது 10 கோடிக்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். 10 கோடிக்கு என்ன ஏற்றுமதி செய்திருக்கிறார்கள் தெரியுமா? எலக்ட்ரானிக் சாதனங்களோ, வீடியோ டேப்புகளோ அல்ல, மிகப் பெரிய கருவிகளோ, விஞ்ஞானப்

பொருள்களோ அல்ல. வெறும் ரெடிமேட் கார்மெண்ட்ஸ் ; இவைகளைத்தான் அவர்கள் எக்ஸ்போர்ட் செய்திருக்கிறார்கள். Sewing மெஷின் மோட்டார் எக்ஸ்போர்ட் செயதிருக்கிறார்கள். அங்கே உள்ள எண்டர்பிரனர்ஸ்களை விசாரிக்கிறபோது அவர்கள் ''The Cnief Secretary himself nad takn intel est in the Zone's development. The infrastructure development was not fast enough.' என்று சொல்கிறார்கள். அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்காமல் அங்கே எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் சோன் என்ற ஒன்றை உருவாக்கிவிட்டு ஒரு ஆண்டு காலமாக எந்த அளவிற்கு நாம் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, வருகின்ற ஆண்டுதான் International Year of Habitat. அதாவது செட்டில்மெண்ட்; ஹ்யூமன் செட்டில்மெண்ட் என்று சொல்வார்கள். டாக்டர் ஏ. இராமச்சந்திரன் என்பவர் அண்டர் செக்ரட்டரி ஜெனரல் ஆக இன்று யுனைடெட் நேஷன்சில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், கிட்டத்தட்ட 140 நாடுகளுக்கு மேல் சம்பந்தப்பட்ட சாதாரண மக்களுடைய ஷெல்ட்டர் ப்ராப்ளத்தை எப்படி,தீர்க்க வேண்டுமென்பதற்காக, நைரோபியிலே கூட இருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இந்த வீடு கட்டும் திட்டம் மிகப் பெரிய திட்டம் என்று. உலகத்திலே கிட்டத்தட்ட 100 கோடி மக்கள் இன்று வானமே கூரையாகவும், பூமியே பாயாகவும் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இதை ஒரு மிகப்பெரிய சாதனையாகச் செய்ய வேண்டிய விஷயம் என்பதை இன்று டாக்டர் இராமச்சந்திரன் எடுத்துச் சொல்லியதற்கு இணங்க தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக இதை செய்தே தீரவேண்டுமென்று சென்ற ஆண்டிலேயே அவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வந்து இன்று அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பது பாராட்டுக்குரிய விஷயம். மத்திய அரசும் இதை உணர்ந்து 100 கோடி ரூபாயை நாம் ஒதுக்க வேண்டுமென்று அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். அதையும் நாம் கருத்திலே கொண்டு இந்தத் திட்டத்தை வேகமாக செயல் படுத்த வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியிலே, சென்னையைப் பொறுத்தவரை கடுமையான வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் தண்ணீர் பஞ்சம். காலையிலே கூட பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள், தண்ணீர் இல்லாமல் மக்கள் படுகின்ற அவதியை. ஓர் ஆண்டுக்கு முன் நான் பார்த்தேன். அடையாறிலே ஏராளமாக வெள்ளம் போய்க் கொண்டு இருந்தது. வெள்ள நிவாரண நிதியை நானே அரசாங்கத்தின் சார்பாக எத்தனையோ பேர்களுக்கு 300 ரூபாயும், வேட்டியும்





சேலையும் கொடுத்தேன். அப்போது ஒரு புறத்திலே சந்தோஷமாக இருந்தாலும் இன்னொரு புறத்திலே வேதனையாக இருந்தது. காரணம் இவ்வளவு தண்ணீரும் வீணாகக் கடலில் போய் விழுந்து விட்டதே. இதையெல்லாம் சேமித்து வைத்திருந்தால் 3 ஆண்டுகளுக்குத் தமிழகத்தில் தண்ணீர் பஞ்சமே இல்லாமல் செய்யலாமே என்று கூட நினைத்தேன்.

அதைப் போலவே இன்றையதினம் ரூ. 50 கோடி. உதவியை உலக வங்கியில் கடனாகப் பெற்று எப்படியாவது கிணறுகளைத் தோண்டும் பணிகளைச் செய்து வருகிறோம். இவ்வாறு ஆண்டு தோறும் வறட்சி என்று சொல்லி ரூ. 50 அல்லது 100 கோடி செலவழிப்பதைவிட சென்னை நகருக்காக 2 அல்லது 3 ஏரிகளை இந்தப் பணத்தைக் கொண்டு வெட்டியிருக்கலாமே என்பதுதான் என்னுடைய யோசனையாகும். மேலும் நிலத்தடி நீர் வரும் காலத்தில் மிகவும் குறைந்து விடும் என்பதையும் நாம் அறிகிறோம். சென்னை நகரில் தற்போது ஜன நெருக்கடி அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எனவே இங்கே மேற்கொள்ளப் படுகிற அபிவிருத்தித் திட்டப் பணிகளையெல்லாம் சென்னையை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளுக்கு, முனிசிபாலிட்டிகளுக்கு அளித்தால் நல்ல முறையில் அமையும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மாநிலத்தில் இந்த அரசு செயல்படாமல் இருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் இங்கே மருத்துவர்கள் ஸ்டிரைக் செய்திருக்கிறார்கள். வக்கீல்கள் ஸ்டிரைக் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இங்கே இருக்கின்றன. இதற்கெல்லாம் நாம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். வக்கீல்களின் ஸ்டிரைக்கைப் பொறுத்த வரையில் அந்த வழக்கு கோர்ட்டில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் கோர்ட்டு வழக்குக்குள் போக விரும்பவில்லை. இன்றையதினம் அரசாங்கம் செய்கிற தவறுகளையெல்லாம் நீதிமன்றத்தில் ரிட் பெட்டிஷன் மூலமாக எதிர்த்து கேள்வி கேட்கப்படுகிறது. வக்கீல்களுக்கு அந்த வழக்குகளாவது இப்போது கிடைக்கின்றன. இனிமேல் அரசாங்கத்தில் இருப்பவர்களே நீதிபதிகளாக மாறிவிட்டால் அந்த ''சான்சஸ்''ம் வக்கீல்களுக்குப் போய்விடப் போகிறதே என்றுதான் வக்கீல்கள் அரசாங்கத்திற்கு எதிராக இன்றைக்குப் புரட்சி செய்கிறார்களோ என்று நான் கருத வேண்டியிருக்கிறது.

டாக்டர்கள் என்ன கேட்கிறார்கள்? ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் பாருங்கள். ஒருவர் சாதாரணமாக எல். ஜி. ஜி. எஸ். ஆகப் பணியில் சேர்ந்தால் பல ஆண்டுகள் பணி புரிந்த பிறகு கடைசியாக சூப்பரின்டென்டாக ஆவது பதவி உயர்வு பெற்று ரிடையர் ஆகிறார். பாங்கில் பியூனாகச் சேருகிறவர் கூட கடைசியில் ஆபிசராகப் போய் ரிடையர் ஆகிறார். ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாகச் சேருகிறவர் சீப் செகரட்டரி வரை பதவி உயர்வு பெற்று ரிடையர் ஆகிறார். ஆனால் டாக்டர்கள் மாத்திரம்

என்ன பாவம் செய்தார்கள்? எம். பி. பி. எஸ். படித்துவிட்டு அசிஸ்டெண்ட் சிவில் சர்ஜனாகப் போய்ச் சேர்ந்தால் 20 ஆண்டுகள் பணியாற்றியும் கூட அசிஸ்டெண்ட் சிவில் சர்ஜனாகவே ரிடையர் ஆக வேண்டிய ஒரு கொடூரமான நிலைமை இருக்கிறது. இது மாற வேண்டாமா? இது அரசாங்கத்திற்குக் கடமை அல்லவா? அவர்கள் என்ன கேட்கிறார்கள்? தங்களுக்கு ஒரு கௌரவமான இடம் தேவை என்கிறார்கள். நான்-பிராக்டீஸிங் அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். காலியாகிற இடங்களுக்கு உடனடியாக டாக்டர்களை நியமிக்க வேண்டும் என்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினைகளையெல்லாம் அரசு உடனடியாக ஆராய்ந்து தீர்வு காண வேண்டும். ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அளவுக்கு பொறுமையோடு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களைக் கூறுவதற்காக நான் இங்கே நிற்கிறேன்.

தமிழகத்தினுடைய இன்றைய அரசியல், பொருளாதார நிலைமைகள் குறித்தோ அல்லது தொழில் வளர்ச்சி மற்றும் மின் உற்பத்தி அல்லது உணவுப் பங்கீடு முதலிய முக்கியமான பிரச்சினைகள் குறித்தோ இந்த ஆளுநர் உரையில் ஆக்க பூர்வமாக எதுவும் சொல்லப்படவில்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆனால் கவர்னர் உரையை ஆழமாகப் படித்துப் பார்த்தபோது, அதாவது ஆழ்ந்த கவலையோடு படித்துப் பார்த்தபோது அதிலே ஒன்றை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார். அதாவது வரலாற்றில் ஒரு திருப்பு முனையை உருவாக்கிய நிகழ்ச்சியாக வர்ணித்துக் கூறப்பட்டுள்ளது என்னவென்றால் தமிழகத்தில் சாராயக் கடைகளின் ஒரு பகுதியை ஒழித்துள்ளதுதான். அதைப்பற்றிய குறிப்பைத்தான் பார்க்க முடிந்தது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒருவேளை வரலாறு நம்மைப் பார்த்து சிரிக்குமோ என்றுகூட நான் அச்சப்படுகிறேன். அடுத்து கொடைக்கானலில் டி. வி. நிலையத்தை அமைத்து அதைப் பொங்கல் பரிசாக வழங்கியதை அதில் இரண்டாவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகளைத்தான் இந்த ஆண்டினுடைய மிகப் பெரிய சாதனைகளாக கவர்னர் உரையின் வாயிலாக தமிழக அரசு இங்கே அறிவித்திருக்கிறது.

என்னைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டின் ஆரம்பத்தைப் புரிந்து கொள்வதற்கு முன்பு சென்ற ஆண்டில் ஏற்பட்ட நிலைமைகளைச் சற்று பரிசீலனை செய்தாக வேண்டும். அப்போதுதான் இந்த ஆண்டு நாம் எத்தகைய முக்கியமான பிரச்சினைகளை எவ்வளவு பெரிய கடுமையான சோதனைகளைச்



சந்திக்க வேண்டும் என்று புரிந்து கொள்ள முடியும். தமிழக அரசும் தமிழக மக்களும் எந்த அளவுக்கு கடுமையான சோதனைகளுக்கு உள்ளாவோம் என்ற நிலைமையை நாம் புரிந்து கொள்ள இயலும்.

வறட்சியைப்பற்றி இங்கே பலரும் எடுத்துக் கூறினார்கள். நான் 4 தினங்களுக்கு முன்னாலே ராஜபாளையம் அருகில் உள்ள சத்திரப்பட்டி என்ற ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே ஒரு குடம் தண்ணீரை 40 பைசாவுக்கு வாங்கித்தான் அங்கேயுள்ள மக்கள் பயன்படுத்துகிறார்கள். இன்னும் பல கிராமங்களில் குடிநீர் கிடைக்காத காரணத்தால் மக்கள் சாரை சாரையாக கிராமங்களை விட்டு வெளியே, அபயம் தேடி சென்று கொண்டிருக்கின்ற நிலைமையைப் பார்த்தேன். ஏரி, குளங்கள் இவைகளையெல்லாம் முறையாக நாம் பராமரிப்பதற்கு கடந்த 10 ஆண்டுகள் மட்டுமல்ல சுமார் 20, 30 ஆண்டுகளாகவே அரசு தவறிவிட்டது என்ற காரணத்தால் இன்றையதினம் வறட்சி ஒரு பெரிய கோர உருவத்தில் தமிழகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-10)

திரு. மக்வானா அவர்களுடைய கருத்தைப் பற்றியோ அல்லது அவை முன்னவர் அவர்கள் சொன்ன பதிலைப் பற்றியோ நான் குறிப்பிட விரும்பவில்லை. தமிழக அரசு உண்மை நிலைமையை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. தமிழகத்திலே எவ்வளவு பெரிய நெருக்கடியை சந்திக்கப் போகிறோம் என்பதைப் பற்றி ஆழமான பரிசீலனையை தமிழக அரசு செய்யவில்லை. பெரிய lethargy அசட்டைத்தனமான போக்கு தமிழக அரசினுடைய அணுகு முறையில் இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

ஏராளமான காடுகள் அழிக்கப்பட்டு மழையின் அளவு குறையக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் காடுகள் அழிக்கப்பட்டதில் பெரிய கனவான்களின் பெயர்கள் பத்திரிகைகளில் அடிபடுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய பெயரையெல்லாம் இங்கே நான் சொல்ல விரும்பவில்லை. நான் குறிப்பிட்டுச் சொல்லுவது, இந்த ஆண்டு வறட்சி என்பது சமீப காலத்திலே நாம் பார்த்திராத அளவிற்கு மிகப் பெரிய நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்பதுதான். நேற்றைய தினம் சென்னை நகரத்திலே 2,500 மாதர்கள் குடிதண்ணீர் கேட்டு குடத்தோடு சாலையை மறித்து மணிக் கணக்கில் உட்கார்ந்திருந்தார்கள். சென்னை நகரத்திலே நேற்றைய தினம் நடந்த ஒரு நிகழ்ச்சியாக மட்டும் அதை நினைக்க வேண்டாம். தமிழகம் பூராவும் இத்தகைய கிளர்ச்சி உருவாகக் கூடிய, விரும்பத்தகாத பல நிகழ்ச்சிகள் ஏற்படும் நிலைமையிலே போய்க் கொண்டிருக்கிறது. தமிழக அரசு உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மிகப் பெரிய ஆபத்துக்கு நாம் உள்ளாவோம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மின்சார உற்பத்தியைப் பற்றி பல சந்தர்ப்பங்களில் இந்த மன்றத்திலே வலியுறுத்திச் சொன்னதுண்டு. எந்தத் தொழில் வளர்ச்சிக்கும், விவசாய முன்னேற்றத்திற்கும் மின்சாரம் தேவை. இதை உணர்ந்துதான் ருஷியப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய லெனின் அவர்கள் "El ctricity plus Soviet is equal to Socialism" என்று சொன்னார்கள். மின்சார வளர்ச்சி இல்லையென்றால் சோஷலிசத்திற்குச் செல்ல முடியாது. நாம் சோஷலிசத்துக்குச் செல்லுகிறோமா என்ற விவாதத்திற்குப் போக விரும்பவில்லை. ஆனால் மின்சாரம் பெருமளவிற்கு கவனிக்கப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது.

ஆளுநர் உரையில்—அவர் உண்மைக்கு மாறாகச் சொல்லியிருக்கிறார் என்று நான் சொன்னால் துணைத் தலைவர் அவர்கள் அதைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவார் என்ற காரணத்தால் நான் அப்படிச் சொல்லவில்லை. ஆளுநர் இந்த அவையை mislead செய்திருக்கிறார் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ஏராளமான திட்டங்களைக் குறிப்பிட்டு வட சென்னையிலே ஏசியன் டெவலப்மெண்ட் பாங்கிலிருந்து 150 மில்லியன் டாலர் பெற்று ஒரு அனல் மின் நிலையத்தை உருவாக்குவதாகச் சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகு கடலூரில் 210 மெகாவாட், மேட்டூர் தெர்மல் நிலையத்தில் இரண்டு யூனிட்டுகளும் சேர்த்து 420 மெகாவாட், தூத்துக்குடியில் மூன்றாவது யூனிட்டைச் செயல்படுத்தி 420 மெகாவாட், ஆக வட சென்னையில் உற்பத்தி செய்யப்படுகிற 420 மெகாவாட்டையும் சேர்த்தால் கவர்னரின் கணக்குப்படி—ஒரு வேளை ஆளுநர் இருந்தால் நான் தேதி குறிப்பிடவில்லை என்று சொல்லக்கூடும்—1,470 மெகாவாட் உற்பத்தி செய்வதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் அனைத்து இந்தியாவிலே போடப்பட்ட மின் வளர்ச்சித் திட்டங்களில் 35 சதவீதம் மட்டும் தான் நம்மாலே நடைமுறையில் உருவாக்க முடிந்தது. இன்றைய தினம் தமிழகத்திலே 3,344 மெகாவாட் உற்பத்தி செய்கின்ற திறன் உள்ள இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் இன்று மார்ச் திங்களில் உற்பத்தி செய்வது 1,700 மெகாவாட் கூட கிடையாது. கவர்னர் உரையைப் படித்துப் பார்த்தால் கிட்டத்தட்ட 1,470 மெகாவாட் தேவை என்பதை ஒத்துக் கொள்கிறேன். தேவையெல்லாம் காகிதத்திலே எழுதிப் படிக்க ஒரு கவர்னர் தேவையில்லை.

1,470 மெகாவாட் மின்சாரத் த உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு என்ன? ஒரு மெகாவாட் உற்பத்தி செய்ய, மின்சார வாரியத் தலைவரின் கணக்குப்படி ஒரு கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட வேண்டும். அப்படியானால் 1,470 மெகாவாட் உற்பத்தி செய்வதற்கு ஏறத்தாழ 2,264 கோடி ரூபாய் தேவைப்படும். தமிழக அரசின் பட்ஜெட்





எவ்வளவு? மத்திய அரசிடமிருந்து நாம் எவ்வளவு பெறப் போகிறோம்? இந்த 2,264 கோடி ரூபாயை இந்த ஆண்டோ, அடுத்த ஆண்டோ அல்லது இந்த ஐந்தாண்டுத் திட்ட முடிவிலோ நம்மாலே ஒதுக்க முடியுமா. நான் இதை விளக்கமாகக் குறிப்பிடுவதற்குக் காரணம், கவர்னர் உரையில் inaccurate statement உண்மைக்கு மாறுபட்ட அறிக்கை, நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன என்பதற்கான ஒரு உதாரணமாகத்தான்.

அடுத்தபடியாக, தமிழகத்தினுடைய பொருளாதார நிலைமைகளிலே ஏற்படுகிற சீர்குலைவையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தொழில்கள் பற்றியும், தொழில் துறை பற்றியும் நாம் பெரிய அளவுக்குப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் தொழில் வளர்ச்சி எப்படி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் முழுமையாக ஆராய்ந்தால் கடந்த 10 ஆண்டுகளாக தொழில் வளர்ச்சியில் தேக்கமும், சில ஆண்டுகளில் வீழ்ச்சியும்தான் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போதும் ஆயிரக்கணக்கான யூனிட்டுகள், தொழிற்சாலைகள் மூடு விழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்திலுள்ள 75,000 சிறு தொழில்களில் 18,000 தொழிற்சாலைகள் மூடு விழா நடத்தி, இன்றைக்கு அந்த இடங்களில் சைன் போர்ட் அல்லது கட்டிடம்தான் இருக்கிறது. 75,000 சிறு நிறுவனங்களிலே, 18,000 தொழிற்சாலைகள் இன்றைய தினம் மூடிக் கிடக்கும் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நான் கேட்க விரும்புகிறேன், எந்தத் தொழில் வளர்ச்சி பற்றி நாம் பேசுகிறோம்? தமிழ் நாட்டில் என்ன தொழில் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

இங்கே மூலதனம் போட வேண்டுமென்று நினைக்கக் கூடியவர்கள்கூட அதிலுள்ள இடையூறுகள் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மூலதனம் போட வேண்டுமென்றால், அதற்கு மாற்றாக பல உதவிகள் கேட்கிறார்கள் என்று வருத்தத்தோடு பல தொழிலதிபர்கள் சொன்னது உண்டு. மீண்டும் சொல்கிறேன், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் கொள்கை இந்த அரசில் அமைய வேண்டுமென்றால், தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக நிற்கும் சக்திகளை எதிர்த்து நிற்கும் பார்வை இருக்க வேண்டும். அரசியல் ரீதியாக மத்திய அரசுடன் இணைந்து நிற்பதால், இந்தக் காரியத்தை அரசு செய்ய முடியாமல் போகிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. பெரிய தொழில்களுடைய நிலைமையையும் இன்றைய தினம் ஆராய்ந்து பார்த்தால், பல பெரிய தொழிற்சாலைகள் மூடும் தருவாயில் இருக்கின்றன. தமிழக அரசைப் பொறுத்த வரையில், எந்த நிறுவனங்களானாலும்—அது தனியார் நிறுவனமானாலும் சரி, வேறு நிறுவனமானாலும் சரி—அதில் கிடைக்கும் இலாபம் எங்கே செலவு செய்யப்படுகிறது

என்பது குறித்த பார்வையோ அல்லது அவைகளைக் கண்காணிக்கும் ஏற்பாடுகளோ இல்லை. அதன் காரணமாக பெரிய தொழிற்சாலைகளிலும், சிறு தொழிற்சாலைகளிலும் மிகப் பெரிய கவலைப் படும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1986 ஆம் ஆண்டு நிலைமையைப் பார்த்தால், இவ்வளவு மோசமான நிலைமை எந்த ஆண்டும் இல்லை என்று சொல்ல முடியும்.

அம்பத்தூர் இண்டஸ்டிரியல் எஸ்டேட், தமிழகத்தில் உள்ள சிறு தொழில்களுக்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கும் இண்டஸ்டிரியல் எஸ்டேட் ஆகும். அங்கே 800 சிறிய தொழிற்சாலைகள் உண்டு. நான் மிக வேதனையோடு மாண்புமிகு நிதி அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். அங்கே 600 தொழில்களைப் பொறுத்த வரையில், ஸ்திரத் தன்மையற்ற நிலைமையில் அவைகள் இருக்கின்றன. நூற்றுக் கணக்கான சிறிய யூனிட்டுகளுக்கு மூடு விழா நடக்கிறது. இது குறித்து உடனடியாகப் பரிசீலனை செய்து, இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மேலும் சிக்கலான நிலைமைகள் இங்கு உருவாகும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, அனைத்து இந்தியாவிலும் இன்றைய தினம் உற்பத்தி செய்யப்படுகிற எலக்ட்ரானிக் பொருள்களிலே 1 சதம் மட்டும் தான் இங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. மத்திய அரசுக் கணக்குப்படி மாநிலக் கணக்குகளைச் சொல்லும்போது, இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த எலக்ட்ரானிக் பொருள்களிலே தமிழகத்தின் பங்கு 1 சதவிகிதம்தான். எனவே, எந்தத் துறையிலே நாம் முன்னேறுகிறோம் என்று புரியவில்லை. நாம் அரசியல் சர்ச்சை நடத்தும்போது, இந்தப் பொருளாதாரப் பின்னணி பற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்யவில்லை. கடந்த 4, 5 நாட்களாக சட்டமன்றத்தில் நடந்த விவாதத்திலே நாம் ஏதேதோ கோணங்களிலே சென்று பேசிக் கொண்டிருக்கிறோம் ஆனால் உண்மையான நிலவரங்கள் பற்றி, எவ்வளவு சீர்கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது பற்றி நாம் பொதுவாகப் பரிசீலனை செய்வதில்லை. தொழில் தகராறுகள் ஏற்படும்போது நம்முடைய லேபர் டிப்பார்ட்மென்ட், தொழிலாளர் இலாக்கா பணியாற்றுகிற முறை பற்றியும் நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆளுநர் அவர்கள் உரையை திருப்பி, திருப்பிப் பார்த்தேன் இண்டஸ்டிரியல் ரிலேஷன்ஸ் பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறார்களா என்று, ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்படியானால் தமிழ்நாட்டில் தொழில் உறவு நல்ல முறையில் இருக்கிறதென்று பொருளா? இதே மன்றத்திலே அமைச்சரவர்களால் ஒன்று அறிவிக்கப்பட்டது. 1,400 பேர் வேலை செய்யும் தொழிற்சாலை கதவடைப்பு சட்ட விரோதமானது, 3 தினங்களுக்குள் அது திறக்கப்பட வேண்டுமென்று இங்கே அமைச்சர் அறிவித்து, நாங்களெல்லாம் மகிழ்ச்சியடைந்து, அமைச்சரவர்களைப் பாராட்டிய பிறகு, இதே இடத்தில் 3 தினங்களுக்குப்



பிறகு அமைச்சரவர்கள் விலக வேண்டிய நிலைமைதான் ஏற்பட்டது. அந்தத் தொழிற்சாலையை இன்றைக்கும் திறக்க தாமதமேற்படுவதால், அதைத் திறக்க ஆக்கபூர்வமான, சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியும், அரசு அதைச் செய்யவில்லை.

(பிற்பகல் 12-20)

நாம் தொழில் தகராறு சட்டம் 10-பி பிரிவை பயன்படுத்தி அந்த லாக் அவுட்-ஐ தடை செய்திருக்கிறோம். ஆனால் அந்த தொழில் அதிபர் டெல்லியிலே உள்ள தன்னுடைய செல்வாக்கை வைத்துக்கொண்டு இங்கே மிரட்டுகிற பாணியிலே நடந்துகொள்கிறார். அந்த அதிபரை கட்டுப்படுத்தி இந்த சட்டத்தை மீறியதற்காக நடவடிக்கை எடுக்கலாமே. அதில் இன்றுவரை எந்த விதமான முன்னேற்றமும் இல்லை. நான் இந்த மன்றத்திற்கு சொல்வதெல்லாம், உயர்நீதி மன்றத்திலே இது குறித்து வழக்குப் போட்டிருக்கின்றார்கள், டெல்லி உயர்நீதி மன்றத்திலே தமிழ்நாடு அரசு வழக்குரைஞர் கொடுத்த ஒரு மனு, பேரவைத் துணைத் தலைவர். அவர்களே நீங்களும் ஒரு சட்டம் அறிந்த வழக்குரைஞர் தான். நீங்களும் அதைப் படிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். அந்த மில்லுக்குச் சாதகமாக அந்த மில் முதலாளி வக்கீல் சொல்லாத அளவுக்கு நம்முடைய தமிழக அரசு வக்கீல் டெல்லி உயர்நீதி மன்றத்தில் வாதாடுகின்றதைப் பார்க்கிறபோது இந்த அரசு ஏழைகள் பக்கம் நிற்கிறதா என்று கேட்கத் தோன்றுகிறது.

இந்தியா போர்ஜ் கம்பெனி மூடி மூன்று வருடங்கள் ஆகின்றன. அதன் அதிபர் சென்னையிலேதான் இருந்து கொண்டிருக்கின்றார். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலைமையில் இருக்கின்றன. ஆலை இதுவரையில் திறக்கப்படவில்லை. பஞ்சாலைகள் திறக்கப்படாமல் மூடிய நிலையில் இருக்கின்றன. மூடிய மில்களைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இதன் விளைவு என்ன? இன்றைக்கு வேலை வாய்ப்பு எவ்வளவு குறைந்து போகின்றது என்ற கணக்குக்குள் நான் போகவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் இன்றைக்கு எந்த அளவுக்கு இருக்கின்றது? புதிய தொழில்கள் பெரிய அளவுக்கு இல்லை. தொழில் வளர்ச்சியில் தமிழக அரசு முயற்சி என்ன என்று பார்த்தால் வேலை வாய்ப்பை அதிகப்படுத்தாமல் இருக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அரசு இன்று செயல்படுகிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

அடுத்து மின் இலாகா. தமிழகத்திலே உள்ள மின் இலாகா ஒரு லட்சத்து ஐந்தாயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்த இலாகா அது. இது பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த நிலை இன்றைய தினம் மின் விஸ்தரிப்பு இருக்கிறது. புதிய பம்பு செட்டுகளும் மின் உற்பத்தி செய்கின்ற திட்டங்களும் இருக்

கின்றன. இருந்தும் வேலை வாய்ப்பு இல்லை. அந்த இலாகாவிலே இன்றைய தினம் 82 ஆயிரம் பேர்கள் மட்டும்தான் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழகத்திலே பொதுத் துறையில் பேருந்துகளைக் கொண்டு வந்தார்கள். தனியார் துறையிலே இருந்ததைக் கொண்டு வந்தார்கள். பொதுத் துறைக்குக் கொண்டு வந்த பிறகு, ஒரு பேருந்துக்கு 14 பேர்கள் என்ற கணக்கில் வேலை செய்துக் கொண்டிருந்த நிலை இருந்தது. ஆனால் இன்று உலக வங்கி கடன் பெறுகின்ற திட்டத்தின் கீழ் உலக வங்கி நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு பஸ்-க்கு 7½ நபர்கள், அதாவது 2 பஸ்களுக்கு 15 பேர்கள் என்று குறைத்துவிட்டோம். 10,000 பேருந்துகளை இன்றைய தினம் தமிழக அரசு சொந்தமாக ஆக்கியுள்ளது. பஸ்ஸுக்கு 10 பேர்கள் என்று வைத்தாலே குறைந்தது 25 ஆயிரம் பேர்களுக்கான வேலை வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது.

மின் இலாகாவில் ஒரு லட்சத்து ஐந்தாயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கக்கூடிய நிலை இருந்தது. ஆனால் இன்றைக்கு 82 ஆயிரம் பேர்கள் தான் வேலையில் இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. இப்படி வேலை வாய்ப்புகளைக் குறைத்தால் என்னவாகும்? வேலை இல்லாதவர்கள் எப்படி வேலை வாய்ப்பைப் பெறமுடியும்? ஹியூமன் ரிசோர்சஸ்-ஐ எப்படியெல்லாம் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்தினால்தான் தொழில் வளர்ச்சி ஏற்படமுடியும். இந்த நல்ல கண்ணோட்டம் தமிழக அரசுக்கு இருக்கவேண்டும். பொறியியல் கல்லூரியில் படித்தவர்கள் ஏராளமானவர்கள் இருக்கின்றார்கள். ஐ.டி.ஐ. அல்லது டிப்ளோமா கோர்ஸ் முடித்தவர்கள், இன்ஜினியர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் பயிற்சி முடித்துவிட்டு வெளியிலே வேலையில்லாமல் இருக்கின்றார்கள். அப்படி எவ்வளவு பேர்கள் படிப்பை முடித்துவிட்டு இருக்கின்றார்கள்? அவர்களில் எத்தனை பேர்களுக்கு அரசு வேலை கொடுக்க திட்டம் வைத்திருக்கிறது? அவர்கள் எல்லோரும் வேலை செய்ய, அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்கின்ற அளவுக்கு திட்டம் உண்டா? எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ஜிலே நடக்கிற முறை கேடுகளுக்குள்ளே நான் இப்போது போக விரும்பவில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி சொல்லும்போது நான் ரொம்பவும் வருத்தத்தோடு சொல்கிறேன். நான்கைந்து ஆண்டுகளாக தமிழகத்தில்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தினுடைய சதவிகிதம் அதிகமாக இருக்கின்றது. தமிழகத்திலே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி மத்திய அரசு வெளியிட்டிருக்கின்ற கணக்குப்படி அகில இந்தியாவில் 12·65 சதவிகிதம். பேர் தமிழ்நாட்டில் உள்ளனர். 12½ சதவிகிதத்திற்கு மேல் இருக்கின்றது. இது அகில இந்திய அளவிலே சொல்லப்படுகின்ற விவரம். வேலை





வாய்ப்பு 12½ சதவிகிதம் தான் இங்கே இருந்துகொண்டிருக்கிறது. இதுவரை நான் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றி சொன்னேன்.

அடுத்து, அரசியல் பிரச்சினைகளிலும் சிலவற்றை நான் இங்கே அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கவர்னர் உரையில் அரசு நிறுவனங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. நீதித் துறையும், நிர்வாகத் துறையும், இந்தச் சட்டமன்றமும்—மூன்றும் இணைந்தது தான் அரசு என்பது. ஆனால் அரசு நிறுவனங்கள் எப்படி நடைபெறுகின்றன என்பது பற்றி கருத்துக்களை விவாதிக்க ஏதாவது வாய்ப்பு உண்டா? தமிழகத்திலே இருந்து, தகுதியில்லாத ஒருவரை நீதிபதியாக நியமிக்க சிபாரிசு செய்தார்கள். கடைசியில் அவரை நியமிக்க மறுப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசுக்கு சொந்தமான லீகல் டிப்பார்ட்மென்டில் அரசுக்கு ஆலோசனை சொல்கிறவரை நீதிபதியாக நியமிக்க சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதுபோல் உண்மையில் உயர் போலீஸ் அதிகாரி ஒருவரைப் பற்றிய சம்பவம் மர்மக் கதைகளில் வருவது போல் இருந்தது.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிட வேண்டுமென்பதற்காக நான் எழவில்லை, ஒரு விளக்கம் சொல்கிறேன். நீதிபதி நியமனத்தைப் பொறுத்தவரையில் யாரை நியமிக்கலாம் என்றால் சட்டத்தோடு தொடர்புடைய தொழிலை யார் செய்தாலும் அவர்களை நீதிபதியாக நியமிக்கலாம் என்று அரசியல் சட்டத்தில் அமென்ட்மென்ட் வந்திருக்கிறது. இந்நிலையில் தகுதியில்லாத ஒருவரை சிபாரிசு செய்து விட்டார்கள் என்று சொல்வதில் பொருள் இல்லை.

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதியாக வர வேண்டுமானால் 10 ஆண்டுகள் அனுபவம் இருந்தால் தான் அவருக்கு தகுதியுண்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதுபற்றி அமைச்சரே சொல்லியிருக்கிறார். 10 வருடம் என்பது ஜூடிசியரியில் இருந்த பீரியடும், ஸ்டேட் கவர்ன்மென்டில் இருந்த பீரியடும் சேர்த்து 10 ஆண்டுகள் இருந்தாலும் போதும். இது பற்றி அமென்ட்மென்ட் வந்திருக்கிறது.

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் உயர் போலீஸ் அதிகாரியின் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மர்மக் கதையைப் படிப்பது போல் சமீபத்தில் சம்பவங்கள் நடைபெற்றன. எதற்காக அவர் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார், எதற்காக வேறு வேலையில் அமர்த்தப்பட்டார் என்பது போன்ற விவரங்கள்

எல்லாம் எங்களுக்கெல்லாம் புரியாமல் இருந்தது நீதித் துறையும், நிர்வாகத் துறையும், சட்டமன்றமும் இணைந்தது தான் அரசு. இம்மாதிரி பிரச்சினைகள் பற்றி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எங்களுக்குத் தெரிய வேண்டாமா? அதேமாதிரி தான் 10 உறுப்பினர்களை இந்த மன்றத்திலிருந்து வெளியேற்றியதும், கவர்னர் உரையில் இதுபற்றி விளக்கம் இருக்கிறதாஎன்று தேடித் தேடிப் பார்த்தேன்.** ஒரு காரியத்தைச் செய்து, பெரும்பான்மையான பலத்தை வைத்துக்கொண்டு....

(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தீர்மானத்தைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.** என்று உறுப்பினர் குறிப்பிட்ட வார்த்தையை நீக்க உத்தரவிடுகிறேன். தீர்மானம் போட்டிருக்கிறார்கள், ஆனால் அதுபற்றி ஆளுநர் உரையில் இல்லையென்று சொல்லுங்கள்.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையிலே அதுபற்றி எதுவுமே இல்லை. அதுபோல்தான் 10 அமைச்சர்களை பதவியை விட்டு நீக்கியதும், இப்போதும் பல அமைச்சர்களை நீக்குவதாக வதந்திகள் எல்லாம் வருவதால்தான் நான் இதைப்பற்றி குறிப்பிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களே வதந்தி என்று சொல்லுகிறீர்கள். பின் ஏன் அதைப்பற்றிப் பேசுகிறீர்கள்? நாட்டு மக்களுக்குத் தேவையான நல்ல விஷயங்களைப் பற்றிச் சொல்லுங்கள். இப்படி எல்லாம் பேசி ஏன் உங்கள் நேரத்தையும் வீண் ஆக்குகிறீர்கள்?

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் செயல்பாடுகளில் உள்ள நடைமுறை குறைபாடுகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினருக்கான நேரத்தை இப்படி எல்லாம் பேசி வீணாக்க வேண்டாம். உறுப்பினர் திரு. சமரசம் உட்காருங்கள்.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் அன்றாட நடைமுறை செயல்பாடுகளில் உள்ள குறைபாடுகளை நான் இங்கே எடுத்துக்கூற முயற்சிக்கிறேனே தவிர, ஒரு (wild allegation) என்கிற முறையிலே நான் சொல்லவில்லை. எங்களைப் போன்றவர்கள் எல்லாம் உண்மையிலேயே புரிந்துகொள்ள முடியாத நிலையில்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





அரசின் செயல்பாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆக்கபூர்வமான ஆலோசனைகள் அரசுக்கு நிச்சயமாகப் தேவை. அப்படியானால் தான் அரசின் செயல்பாடுகள் நன்றாக இருக்கும் என்கிற நல்லெண்ணத்தில் தான் நான் விமர்சனம் செய்கிறேனேயல்லாமல் வேறல்ல. ஆனால் அதே நேரத்தில் அரசின் செயல்பாடு குறித்தும், செயல்படும் முறை குறித்தும், சட்டம் ஒழுங்கு அமல்படுத்தப்படும் முறை குறித்தும் எங்களுக்கு ஆழமான கருத்து வேறுபாடு உண்டு.

இன்றைய தினம் உயர் போலீஸ் அதிகாரிகள் எது வேண்டுமானாலும் செய்யலாம், போலீஸ் நிலையத்திலேயே அடித்துக் கொல்லலாம், எந்த நேரத்திலேயும் லத்தி சார்ஜ் செய்யலாம் என்பது போன்ற நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. நான் 1938 ஆம் ஆண்டிலிருந்தே சென்னையில் குடியிருந்து கொண்டிருக்கிறேன். இந்த சென்னை நகரிலே நான் என்றைக்குமே காணாத ஒரு காட்சியை கூறுகிறேன். முறையாக அனுமதி பெற்றால் தான் பொதுக் கூட்டம் நடத்தலாம். இது எங்குமே நான் பார்த்திராத காட்சி. டெல்லியில் கூட இப்படிப்பட்ட உத்தரவு இல்லை. இப்படிப்பட்ட உத்தரவு சென்னை நகரத்திலே மட்டும் தான் இருந்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட கல்கத்தா நகரத்திலே கூட இப்படிப்பட்ட நடைமுறை இல்லை. அப்படி போலீஸ் அதிகாரிகள் இஷ்டம்போல் செயலாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். மக்களின் உரிமைகளைப் பறிக்கின்ற முறையில் இந்த அமைப்புகள் பூராவும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

(பிற்பகல் 12–30)

ஆகவே, உண்மைகளைப் பிரதிபலிக்கின்ற உரையாக கவர்னர் உரை இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் அவை முன்னவர் பதில் அளிக்கும்போது தக்க விளக்கங்களைக் கூறி, நல்ல திசையை நோக்கித் தமிழக அரசை முன்னேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் அமர்கிறேன்.

***திரு. எம். இராசரத்தினம்:** மாண்புமிகு மரியாதைக்கும் பாராட்டுதலுக்கும் உரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது நன்றி தெரிவிக்கும் நிலையில் தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவரின் திட்டங்களும், சலுகைகளும் தேனினும் இனியவை என்பதைப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏழை எளிய மக்களுக்குப் பயன் தரக்கூடியவை; மக்களின் வேதனைகளைப் போக்கக் கூடிய திட்டங்கள், இவை அனைத்தையும் புரட்சித் தலைவர்தான், தாயுள்ளம் கொண்ட அவர்தான் செய்ய முடியும் என்பதற்குச் சான்றாகத்தான் இப்படிப்பட்ட திட்டங்களை அவர்கள் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதை காழ்ப்புணர்ச்சிகொண்ட

மாற்றுக்கட்சியினர் உணர்வதற்கு வாய்ப்பு இல்லை. சில தலைவர்கள் தாங்கள் ஏழை எளியவர்கள் என்று மேடையிலே பேசிவிட்டு உல்லாசபுரியில் வாழ்பவர்களாக இருக்கிறார்கள். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று அண்ணா கூறியதைக் கூட புரிந்து கொள்ள முடியாத அவர்களின் ஒரே நோக்கம், மக்களுக்குப் பொய்ச் செய்தியைப் பரப்புவதன் மூலம் அரசியல் ஆதாயம் தேட முற்படுவது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. அவர்களுடைய எண்ணங்களில் அதுதான் பிரதிபலிக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அராஜகத்தினால் எவர் மனதையும் கவர முடியாது: அதே நேரத்தில் அடக்கமும் அன்பும் பண்பும் உண்மைத் தொண்டும்தான் நிலையானது என்பதை முதல்வரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த முறையிலேதான் முதல்வராக மூன்றாவது முறை இங்கே இருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த நேரத்தில் இந்திப் பிரச்சினை பற்றி இங்கே சட்டமன்றத்திலே பல பெரிய உறுப்பினர்களும், விவரம் தெரிந்த அறிவாற்றல் மிக்க நண்பர்களும் பேசினார்கள். நான் ஒன்றை மட்டும் குறிப்பாக இங்கே கூற விரும்புகிறேன். இந்தியைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பல நேரங்களிலே இந்தித் திரைப் படங்களைத் திரையிடுவதை நாங்கள் எதிர்க்கவில்லை, நானும் கலையுலகத்தைச் சார்ந்தவன்தான் என்று அவர்கள் பல இடங்களிலே குறிப்பிட்டு அறிக்கைகள் விட்டிருந்தார்கள். ஆனால் அதற்குமாறாக மாவட்டத்திலே இருக்கக்கூடிய சிலயிடங்களிலே எல்லாம் சில தகராறுகளும், மறியல்களும் இந்திப் படம் ஓடுகிற தியேட்டரில் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக வேலூரிலே ஒரு திரையரங்கத்தில் மேரிஜங் என்ற ஒரு திரைப்படத்தைத் திரையிட்டதன் காரணமாக அந்தத் தியேட்டரைத் தாக்கியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன என்பதை நான் நினைக்கின்றபொழுது, இந்திப் படத்தை விலை கொடுத்து வாங்கி அதன் தமிழாக்கமாகத்தான் 'தாய்' என்ற பெயருடன் இருக்கும் ஒரு படத்தை தி.மு.க.வைச் சார்ந்த நடிகர் ஒருவர் எடுக்கிறார். அதற்குப் பிறகுதான் மேரிஜங் என்ற இந்திப் படம் திரையிடப்பட்ட இடங்களிலேயெல்லாம் அதை ஆட்சேபித்து தகராறு செய்து திரையிடாமல் செய்துவிட்டால் அதற்குப்பிறகு தமிழாக்கமான படத்தை வெளியிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். இந்திப் படத்தை மக்கள் பார்த்துவிட்டால் கதை வெளியாகிவிடுமே என்ற காரணத்தினால்தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி இந்திப் படங்களைத் திரையிடு



வதைத் தடை செய்வதன் மூலம் பல இலட்சக்கணக்கான ரூபாய் அளவிற்கு நமக்கு கேளிக்கை வரி இழப்பு ஏற்படுவது மட்டுமல்ல பலயிடங்களிலே தடை போடுவதோடு....

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர்வர்களே......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்).** இருக்கின்ற செய்தியை அவர்கள் சொல்கிறார்கள். குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. எம். இராசரத்தினம்:** அது மட்டுமல்ல, அந்த இந்திப் படத்தினுடைய கதையைத்தான் விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள் என்பதும் எங்களுக்கு ஆதாரபூர்வமாகத் தெரியும். சுரேஷ்பாபு என்பவரால், வாகினி ஸ்டுடியோ என்று இருக்கிறது, அங்கிருந்துதான் அந்தப் படம் வாங்கப்பட்டிருக்கிறது.

நான் இதைக் குறிப்பிடக் காரணம் எவர் மனதையும் புண்படுத்த அல்ல. குற்றச்சாட்டு சொல்வதற்கும் அல்ல. இந்தியை எதிர்க்கிறவர்கள் தமிழ் மொழி, தாய்த் தமிழ் என்றெல்லாம் சொல்கிறவர்கள் தன்மானம் மிக்கவர்கள் என்றால் தமிழ் மொழியில் இருக்கிற கதையைத் தழுவி படம் எடுத்திருக்கலாம். அல்லது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடித்த தமிழ்ப் படங்கள், தாய்பெயரால் வெளிவந்துள்ள படங்கள் எத்தனையோ இருக்கின்றன; அந்தப் படங்களைத் தழுவி எடுத்திருக்கலாம். புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டதைப் போல எங்கள் புரட்சித் தலைவர் நடித்த 'தாயைக் காத்த தனையன், தாய்க்குப்பின் தாரம், தாய்க்குத் தலைமகன், தாய் மகளுக்குக் கட்டிய தாலி, ஒரு தாய் மக்கள், தாயின் மடியில், தெய்வத்தாய், கன்னித்தாய்' போன்ற படங்கள் எல்லாம் தமிழ்க் கதைகள்தான். இவை எல்லாம் முழுக்க முழுக்க தமிழனுடைய பண்பாடுகளை தமிழ் உணர்வை விளக்குகின்ற கதைகள். இவைகளைத் தழுவி திரைப்படம் எடுத்திருக்கலாம். ஆனால், இந்தி எதிர்ப்பு என்று சொல்கிறவர்கள் ஒரு இந்திக் கதையைத் தழுவி ஏன் படம் எடுக்க வேண்டும் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

தி.மு.க. நடிகர்—இந்திப் படத்தின் கதையையும் வாங்கிவிட்டு, அந்த இந்திப் படம் 'மேரிஜங்' திரையிட்ட இடங்களிலெல்லாம் மக்கள் பார்த்து விட்டால் எங்கே அவர்கள் தயாரிக்கும் படம் வெற்றியடையாதோ என்ற எண்ணத்துடன் தியேட்டர்களில் கலாட்டா செய்கிறார்கள். இதுதான் உங்களுடைய இந்தி எதிர்ப்பா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் இந்தி திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களைச் சந்திக்கும்போது நாங்களும் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள்தான்; ஆகவே, இந்திப் படங்களை எதிர்க்கமாட்டோம் என்று சொல்கிறார்கள். நலிந்து கொண்டிருக்கும் திரைப்படத் துறையை, திரைப்பட விநியோகஸ்தர்களை, திரை அரங்குகளை இப்படி வேதனைப்

படுத்த வேண்டுமா என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்தால் வட மாநிலங்களில் தமிழ்ப்படம் ஓடுவதை எதிர்க்கமாட்டார்களா? தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் வாழவேண்டாமா?

அடுத்து, வீடியோ தியேட்டர்களால் அரசுக்கு வருமான இழப்பு ஏற்படுகிறது. 225 ரூபாய் கொடுத்தால் ஒரு திரைப் படத்தின் வீடியோ டேப் வாங்கிவிடலாம். அதே நேரத்தில் தியேட்டர்களில் ஓடும் ஒரு படத்தின் பிரதி எடுக்க வேண்டுமென்றால் ஏறத்தாழ 30,000 ரூபாய் அல்லது 40,000 ரூபாய் ஆகிறது. வீடியோ டேப் என்றால் 225 ரூபாய்தான் ஆகிறது. மேலும் அரசாங்கத்திற்கு எண்டர்டெயின்மென்ட் டாக்ஸ் மூலமாக வருகின்ற வருவாயில் இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பை ஈடுகட்ட வழிவகை காண வேண்டும்.

திரைப்படத் துறையினர் வீடியோ லைப்ரரியை எதிர்க்க வில்லை. காப்பி ரைட்ஸ் வாங்கிய படத்தின்மீது நடவடிக்கை எடுப்பதையோ போலீசார் Harassment செய்வதையோ அவர்கள் விரும்பவில்லை. அதைப் போன்று வீட்டில் காண்பிக்கப்படும் வீடியோக்களுக்கு சென்சார் தேவையில்லை. 'பிலிம் சென்சார்' இருந்தால் போதும் என்றும் பம்பாய் ஹை கோர்ட்டில் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். ஏ.ஐ.ஆர். டிசம்பர் 86-ல் அந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது. அதையும் அவர்கள் எதிர்க்கவில்லை........

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்)** அந்த விவகாரங்கள் எல்லாம் இப்போது வேண்டாம். ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது பேசுங்கள்.

**திரு. எம். இராசரத்தினம் :** அது வேண்டாம் என்று சொல்கிறார்கள். திரைப்படத் துறையினர் ஆட்சேபிக்கவில்லை; ஆதரிக்கிறார்கள். அரசும் சீர்தூக்கிப் பார்த்து, வீடியோ லைப்ரரிக்கு சலுகை காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எனது விழுப்புரம் தொகுதியில் விழுப்புரம் நகரத்தில் இயங்கி வந்த மதராஸ் வனஸ்பதி லிமிடெட் என்ற நிறுவனம் 15—10—85-ல் மூடப்பட்டது. அது பப்ளிக் ஃபண்ட்ஸிலிருந்து நடத்தப்பட்டது. போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் எல்லாம் வைத்து அதனை நடத்தி வந்தார்கள். குடும்பப் பிரச்சினை காரணமாக அது மூடப்பட்டதினால் ஏறத்தாழ 500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டது மட்டுமல்லாமல் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ், ஸ்டேட் சேல்ஸ் டாக்ஸ் என்ற முறையில் சுமார் 12 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. அதோடு பல இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமான பொருள்கள் வீணாகின்றன. இந்தப் பாதிப்புகளை சரி செய்ய நம்முடைய அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அது மட்டுமல்லாமல் மக்களைப் பாதிக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அங்கே Hexene Chemicals என்ற தொழிற்சாலையில் dangerous Chemicals 2.5 டன் முதல் 3.5 டன் வரையில் வைத்திருக்கிறார்கள். அது எளிதில் தீ பிடிக்கக்கூடியது. தீப் பிடித்து விட்டால் 5 கிலோ மீட்டர் அளவுக்கு பரவக் கூடிய பேராபத்து இருக்கிறது என்று அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்த முக்கியமான பிரமுகர்கள் கூறியிருக்கிறார்கள். அண்மையில் வட மாநிலத்தில் போப்பாலில் ஏற்பட்ட ஒரு பெரிய அபாயத்தைச் சந்தித்தோம். அதைப்போன்ற ஒரு பெரிய அபாயம் இங்கும் ஏற்படாமலிருக்க, அங்கே சுற்றுப்புறங்களில் இருக்கக் கூடிய கிராமப்புற மக்களின் நன்மையைக் கருதி, அந்த இரசாயனத்தை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு ஆர்டினன்ஸ் போட்டாவது, அவசரச் சட்டம் பிறப்பித்தாவது உடனடியாக ஏற்பாடு செய்து அந்த வனஸ்பதி தொழிற்சாலையை அரசுடைமையாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுடைமையாக்கப்பட்டால் 500 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள். மேலும், தமிழகத்தின் தென் பகுதியில் இது ஒன்றுதான் ஒரு நாளைக்கு 2,000 டன் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறது. தமிழ்நாட்டிலே வேறு எந்த இடத்திலும் 2,000 டன் உற்பத்தியாகும் சூழ்நிலை இல்லை. இது Essential Commodities என்ற முறையில் உற்பத்தி செய்யப்பட்டால்தான் மக்களுக்கு நியாய விலையில் விநியோகம் செய்ய வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40).

அடுத்து மாவட்டத்தைப் பிரிக்கும் நேரத்தில் விழுப்புரத்தில் இருக்கின்ற பூந்தோட்டம் ஏரி அருகிலே கலெக்டர் அலுவலகத்தை அமைக்க வேண்டும். அப்படி அமைத்தால் அதன் காரணத்தால் அரசுக்கு 3 கோடி ரூபாய் செலவு குறையும். எனவே அதையும் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விழுப்புரத்தில் உள்ள பஸ் ஸ்டாண்டைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய இரண்டாண்டு காலமாக விரிவாக்கம் எதுவும் இல்லாமல் இருக்கிறது. அங்கே ஜாதிக் கலவரங்கள் இருப்பதால் பஸ் ஸ்டாண்டை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முன்பிருந்த கலெக்டர் "Mobile Paddy Procurement Centre" ஏற்படுத்தி இருந்தார்கள். அது போல் இப்போதும் அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விழுப்புரத்தில் உள்ள சித்தேரி என்ற இடம் முனிசிபாலிட்டிக்கு உட்பட்ட வார்டு ஆக இருக்கக்கூடிய இடமாக இருக்கிறது. அது ஒரு தீவுபோல் இருக்கிறது. அங்கே பல வருடங்களாக பாதை போட முடியாமல் இருக்கிறது என்பதை நான் வேதனையோடு இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அங்கேயுள்ள மக்கள் பல கோரிக்கைகளை எடுத்து வைத்து இருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருந்து இருக்கிறார்கள். அவற்றை உடனடியாகச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து காவணிப்பாக்கம் திருப்பாச்சனூரில் ஒரு இணைப்புப் பாலம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டெட் நகரில் நியாயவிலைக் கடை தனியாக அமைத்துத் தரவேண்டும், இல்லை என்றால் தீக்குளிப்பு செய்வதாக அங்கேயுள்ள மக்கள் கூறுகிறார்கள். அந்த நிலைமை ஏற்படாமல் அங்கே ஒரு நியாய விலைக் கடையை கட்டாயம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டெட் நகரில் வாழக்கூடிய கிறிஸ்தவ அரிசன மக்களுக்கு தனியாக பஞ்சாயத்து அமைத்துத் தர வேண்டும் என்ற வேண்டுகோளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது வறட்சி கடுமையாக இருப்பதால் விவசாயிகளுக்கு உதவ வேண்டும். நாங்கள் எல்லாம் விவசாயப் பெருங்குடி மக்களோடு ஒருங்கிணைந்து பழகுபவர்கள். போதிய மின்சாரம் கிடைக்காமல் அந்த மக்கள் அவதிப்படுகிறார்கள். எனவே 12 மணி நேரத்திற்குக் குறைவு இல்லாமல் விவசாயத்திற்கு மின்சாரம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது வறட்சி கடுமையாக இருக்கிறது. இந்த நிலைமையில் அங்கேயுள்ள மக்கள் விவசாயம் செய்ய முடிய மல் கஷ்டப்படுகிறார்கள். எனவே விவசாயத்திற்கு 12 மணி நேரம் என்று முறைப்படுத்தி மின் இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் குடிநீர்ப் பஞ்சம் அதிகமாக இருப்பதால் அதைப் போக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பு தந்ததற்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கின்ற காரணத்தால் அதற்கு விளக்கம் கொடுக்கிற விதமாக இந்தக் கருத்தை உங்கள் மூலம் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





நாம் இந்தி திணிப்பு கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் தமிழகத்தில் உள்ள திரையரங்குகளில் தமிழ்ப் படங்கள் போட வேண்டுமென்று அரசின் உத்தரவு இருக்கிறது. இதற்கிடையில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து போராட்டம் நடைபெற்று பல்வேறு சம்பவங்கள், பல்வேறு தியாகங்கள் நடைபெற்றிருக்கிற சூழ்நிலையில் இந்தித் திணிப்பின் அடையாளமாக இந்திப் படங்களை, குறிப்பாக சென்னையில் போட்டார்கள். அவ்வாறு சென்னை மாநகரிலும், வேலூரிலும் போட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும், எங்களுடைய மாவட்டச் செயலாளர் திரு. பாலு அவர்களும் ஸ்டார் தியேட்டரில் போட்ட படத்தை எடுங்கள் என்று சொன்னோம். அவ்வாறு அவர்களிடத்தில் கேட்ட போது அவர்கள் உடனே தமிழ்ப் படம் போட்டார்கள். தேவி கலா தியேட்டரிலே இந்திப் படம் போட்டிருந்தார்கள். இப்படி பல்வேறு தியேட்டர் ஓனர்களைச் சந்தித்த போது அவர்கள் எங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்கள். வேலூரிலேயும் அந்தச் சம்பவம் நடைபெற்றது. அதற்கு எதிராக டைரக்டர் ராஜேந்தர் என்றெல்லாம் கூறி உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) :** நீங்கள் சொன்னது இந்தி எதிர்ப்பு பற்றிய விஷயம். அது சென்னையில் நடந்தது அல்ல. அது கட்சிப் பிரச்சினை. அவர் சொன்னது ஸ்பெசிஃபிக்காக வேலூரிலே இப்படிச் செய்தார்கள், இந்திப் படத்திற்கு டிஸ்ட்ரிபுஷன் எடுத்திருந்தார்கள், அதனால் வந்த வினை இது என்று சொன்னார்கள். அது ஒரு செய்தி. அந்தச் செய்தி சரியா இல்லையா என்பது வேறு. ஒரு செய்தியைத் தெரிந்து அந்தச் செய்தி பற்றிச் சொல்வது மிகப் பெரிய குற்றம் இல்லை.

***திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நான் கூறும் போது ஆளுநர் உரையில் மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கத்தக்க வகையில் எந்தத் திட்டமும் இல்லை என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு இருந்த மேலவை இப்போது இல்லை. சென்ற ஆண்டு இருந்த அமைச்சர்களில் 10 பேர் இப்போது இல்லை சென்ற ஆண்டு இருந்த சட்டமன்ற உறுப்பினர்களில் 10 பேர் ஜனநாயக விரோதமாக நீக்கப்பட்டு இருக்கிறார்கள். இதைப் பற்றி எல்லாம் ஆளுநர் உரையிலே கண்டுகொள்ளவே இல்லை. இதற்கு ஒரு விளக்கம் அளிப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். எதுவும் இல்லை. அதே போல் வறட்சி பற்றி அறிவிக்கப்பட்டு இருக்கிற ஆளுநர் உரையில் அதற்கு இலக்காகக் கூடிய விவசாயிகளுக்கு எந்தச் சலுகையும் அறிவிக்கவில்லை. அதே போல்

கோ-ஆப்-டெக்ஸ் மூலமாக துணிகளைக் கொள்முதல் செய்ய வில்லை என்ற காரணத்தால் நெசவாளர்கள் பட்டினி கிடக்கிறார் கள், ஊர்வலம் போகிறார்கள்.

இவை எல்லாம் இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்படவே இல்லை. அதைப் போல கிருஷ்ணா நதிநீர் பற்றி இந்த ஆளுநர் உரையிலே ஒன்றும் குறிப்பிடவில்லை. 54 கோடி ரூபாயை கொட்டிக் கொடுத்திருக்கிறது இந்த அரசு. அது பற்றி எந்தவித குறிப்பும் இல்லை. அதே போல நீதிமன்றங்களில் நீதிபதி இல்லை. பள்ளிகளிலே கரும் பலகைகள் இல்லை. ஆசிரியர்கள் போதிய அளவில் இல்லை. பெஞ்சுகள் இல்லை, ஒன்றுமே பள்ளிகளில் இல்லை. அதே போல குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்ப தற்கு நீண்ட கால திட்டம் எதுவும் இல்லை. சுகாதார வசதி இல்லை, சாலை வசதி இல்லை, அவை பற்றி இந்த உரையில் எதுவுமே இல்லை.

சாராயக் கடைகளை ஒழித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர் கள். ஓரளவு ஒழித்திருக்கிறீர்கள். ஆனால் பிராந்திக் கடை களை அதிகமாக்கி இருக்கிறீர்கள். மாநகராட்சித் தேர்தலைப் பற்றி அறிவிப்பு இல்லை. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவது பற்றி அறிவிப்பு இல்லை. ஆனால் பற்றாக்குறை இருப்பதாக மட்டும் சொல்லிவிட்டு ஏழைத் தாய்மார்களுக்கும் பள்ளிச் சிறார்களுக்கும் காலணிகள் வழங்குவதாக அறிவித்திருக்கி றீர்கள். இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் ஏழை தகப்பன்மார்களுக்கு காலணி கிடையாது. வஃடியிழுக்கும் ஏழைத் தொழிலாளிக்கு காலணி கிடையாது. கொத்துவேலை செய்கின்ற சாதாரண ஏழைக்கு காலணி கிடையாது. ஏனென்றால் அவர்கள் ஆண் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். தாய்மார்களுக்குக் கொடுக்கின்ற காலணியை ஏன் தகப்பன்மார்களுக்கும் கொடுக்க வில்லையென்று நான் கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடைகளிலே ரூ. 200, ரூ. 300 சம்பளம் வாங்குகின்ற சாதாரண ஏழை குமாஸ்தாவுக்கு இந்த வசதிகள் இல்லை. ஏன் இதிலே கூட அரசியல்? ஆகவே ஏழைத் தகப்பன்மார் களுக்கும் கொடுக்க வேண்டுமென்பதே என்னுடைய வேண்டு கோள்.

அதே போன்று சட்டமன்ற உறுப்பினர் திரு. சமரசம் அவர்கள் பேசும்போது தேர்தல் வரும் என்பது போல் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஓமலூர் திரு. அன்பழகன் அவர்கள் பேசும்போது பாஸ்கர் ராவ் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். தேர்தல் வரும் என்ற புரளியை தமிழ்நாட்டிலே கிளப்பி இருக்கி றார்கள். மூன்றாண்டு காலத்திற்குள்ளாக ஏன் தேர்தல்? என்ன





சிக்கல் இப்போது? தமிழ்நாட்டில் ஏறக்குறைய அனைத்துப் பகுதிகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் வறட்சியை மேலும் எதிர் நோக்கியிருக்கிறார்கள். ஆகையால் இரண்டாண்டு காலத்திற்கு அதைப் பற்றியே பேச வேண்டாம். மூன்றாண்டுகளுக்குள் ஏன் தேர்தல்? இன்னும் மாநகராட்சிக்கே தேர்தல் நடத்தவில்லை. பாஸ்கர் ராவைப் பற்றிச் சொல்கிறீர் களே, அவர் ஆந்திராவிலே இருக்கிறார். அவர்களுக்கு இங்கே என்ன சம்பந்தம்?

இப்போது தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி முழுவதுமாக ஆக்கிரமித்து இருக்கிறது. தமிழ்நாட்டையே வறட்சிப் பிரதேச மாக அறிவிக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்குக் கொடுத்த கடன் களுக்கு இன்னும் 6 மாதம் தவணை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு 24 சதவீதம் தண்ட வட்டி கட்டுகிறார்கள். அதையும் ரத்து செய்ய வேண்டும். அதற்காக எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சட்டசபை முன்பாக உண்ணா விரதம் இருக்கிறார்கள். ஆகவே இதை அரசு பரிவோடு கவனித்து, இன்னும் 6 மாதத்திற்கு கடன் வசூலை தள்ளிப் போடு வதற்கும், தண்ட வட்டியை ரத்து செய்வதற்கும் முன் வரவேண் மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக குடிதண்ணீர்ப் பிரச்சினை. கேரளாவிலே மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. ஆகவே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். அதன் மூலம் குடி தண்ணீர்ப் பிரச்சி னையை தீர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12–50).

அடுத்து கடன் தள்ளுபடி என்பது முக்கியமான பிரச்சினை யாக வந்திருக்கிறது. 1981 ஆம் ஆண்டிலே வாங்கிய கடன் களுக்கான வட்டியை அசலாக்கியதாக ஒரு புகார். ஆளும் கட்சியைச் சார்ந்த தங்கவேலு என்பவர் செலுத்த வேண்டிய கடன் இது. நான் கட்ட வேண்டிய கடன் ரூ. 1,256; ஆனால் கேட்பதோ பல்லாயிரம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அரசு இதனை சரிபார்த்து 1981 ஆம் ஆண்டில் வட் டியை அசலாக்கியதை நீக்கி, அசலை மட்டும் வசூலிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அதைப்போல 1–1–1987 முதல் கள், சாராயக் கடைகளை நீக்கியிருக்கிறீர்கள். ஆனால் அரசுக்கு சம்பந்தப்பட்ட, அர சுக்கு பாத்தியப்பட்ட ஒரு நகராட்சி பயணியர் விடுதியில் அரசு

முத்திரையுடன் கூடிய சாராயப் பாட்டில்கள் வைக்கப்பட்டிருந்திருக்கின்றன. அது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் ? நான் சொல்வது விருதுநகர் நகராட்சியிலே நடந்திருக்கிறது. விடுதிக் காவலர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அந்த நகராட்சி நிர்வாகத்தின் மீது என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து மத்தியிலே போட்டிருக்கிற பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட். அந்த பட்ஜெட்டை குறை சொல்வதற்கு உங்களுக்கு என்ன தயக்கம் ? இன்னும் கூட சொல்வேன் பாராளுமன்றத்திலே ஏழை மக்களை பாதிக்கக்கூடிய சரக்கு ரயில் கட்டண உயர்வு, தபால் கட்டண உயர்வு என்று வருகிறபோது மாநிலத்தை ஆளுகின்ற கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்ற எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து வெளிநடப்பு செய்வதற்கு என்ன தயக்கம் ? அல்லது ஏழை மக்களை பாதிக்கக்கூடிய பட்ஜெட்டை நீங்கள் வரவேற்கிறீர்களா ? சரக்கு ரயில் கட்டண உயர்வால் ஏழை மக்கள் பாதிக்கப்பட மாட்டார்களா ? தபால் கட்டண உயர்வால் ஏழை மக்கள் பாதிக்கப்பட மாட்டார்களா ? அதையெல்லாம் எதிர்க்க நீங்கள் ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள்?

நேற்று பேசும்போது கூட நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்தி எதிர்ப்பிலே 1978-ம் ஆண்டிலே இந்திரா காங்கிரசைச் சேர்ந்த திரு. குடந்தை இராமலிங்கம் அவர்களும், திரு. கே. இராமமூர்த்தி அவர்களும் நேருவின் வாக்குறுதியை சட்டமாக்க வேண்டுமென்று பேசினார்கள் என்று சொன்னார்கள். 1978 ஆம் ஆண்டிலே அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தார்கள். அப்போது மத்தியிலே ஜனதா கட்சி ஆண்டு கொண்டிருந்தது. அவர்கள் அப்போது எதிர்க்கட்சி என்ற காரணத்தால் சொன்னார்களே தவிர, ஆளுகின்ற கட்சியாக இருக்கிற இப்போது அந்தச் சட்டத்தை நிறைவேற்றலாம் அல்லவா ? அதை என் நிறைவேற்றவில்லை ?

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஜனதா கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இப்போது மொழிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொன்னது போல நாடாளுமன்றத்திலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசினார்கள். அது உண்மை. ஏனென்றால் அப்போது ஜனதா கட்சி ஆட்சியிலே இருந்த காரணத்தால், வாக்குறுதி கொடுத்த தலைவர் காங்கிரஸ் கட்சியாக இருந்த காரணத்தால், அந்த வாக்குறுதியை அமல்படுத்துவார்களோ, மாட்டார்களோ என்ற சந்தேகம் வந்த காரணத்தால் அப்படிப் பேசினார்கள்.





திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, இப்போது அதைச் செய்யலாம் அல்லவா ? இப்போது தமிழ்நாடு சட்டமன்றத்திலே நிறைவேற்றிய தீர்மானம் இருக்கிறது அல்லவா ? இப்போது அதைச் செய்வதற்கு என்ன தங்கு தடை ? அப்படியென்றால் ஆளுகின்ற பொறுப்பு வருகிறபோது அவர்கள் நழுவிக் கொள்கிறார்கள் என்று தானே அர்த்தம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் மீது, எங்களுடைய ஆட்சியின் மீது எங்களுக்கு நிரம்ப நம்பிக்கை இருக்கிறது. ஜனதா கட்சி ஆட்சியிலே இருந்த காரணத்தினால் அதனை நிறைவேற்றுவார்களோ மாட்டார்களோ என்ற ஐயம் வந்த காரணத்தினால் அப்படிப் பேசினார்கள் என்று மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : உங்களுக்கு நம்பிக்கை இருப்பதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. மக்களுக்கு நம்பிக்கை வரவேண்டும் . இப்போது காவிரி நீர்ப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்களேன். மாண்புமிகு ஹெக்டே அவர்கள் கர்நாடகாவில் ஜனதா கட்சி முதல்வர், வேண்டும் போதெல்லாம் தண்ணீர் கொடுக்கிறார். இங்கே நமக்கு வறட்சியென்றால் கேட்கும் போதெல்லாம் தண்ணீர் கொடுக்கிறார். (குறுக்கீடு). இப்படி அடிக்கடி குறுக்கிட்டுப் பேச வேண்டாம். கடைசியில் அவருடைய கேள்வியைக் கேட்கட்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரியும், நான் அடிக்கடி குறுக்கிட மாட்டேன் என்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களின் பேச்சில் இன்னும் கொஞ்சம் சுவை இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் குறுக்கிடுகிறேன், மன்னிக்கவேண்டும். மாண்புமிகு கர்நாடக முதல்வர் இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் கேட்கும்போதெல்லாம் தண்ணீர் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். நான் உங்கள் மூலமாக அவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, டிரிபியூனல் அமைப்பது பற்றி ஜனதாக் கட்சி என்ன கருத்து கொண்டு இருக்கிறது? அதை கர்நாடக முதல்வர் மறுக்கிறாரா அல்லது ஏற்றுக்கொள்கிறாரா ?

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : அதற்குத்தான் நான் வருகிறேன். அதற்குள்ளாக அவர்கள் முந்திக் கொண்டார்கள். நான் ஒன்று கேட்கிறேன். இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்கள். பெரிய தலைவர்கள் முதற்கொண்டு, தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்கிறார்கள். ஆனால் அங்கேயிருக்கிற காங்கிரஸ்காரர்கள், கர்நாடகத்திலே உள்ள பங்காரப்பா, வீரப்ப மொய்லி போன்றவர்கள் எல்லாம் தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். நான் உங்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது இங்கே ஒரு அரசியல், அங்கே ஒரு அரசியல் என்று ஏன் செய்கிறீர்கள் ? அங்கேயிருக்கிற காங்கிரஸ்

காரர்களை தண்ணீர் கொடுக்கச் சொல்லி சொல்லச் சொல்லுங்கள். நான் சொல்ல விரும்புவது , கர்நாடகா முதல்வர் அவர்கள் பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். இதிலே என்ன தப்பு இருக்கிறது ? பேச்சு வார்த்தை மூலமாக இந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோமே. அவர்கள் தண்ணீர் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் கேட்கும்போதெல்லாம். நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் போய்க் கேட்டபோதுகூட கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அங்கேயும் வறட்சி, தட்டுப்பாடு இருக்கிறது. அப்படி இருந்தாலும் அவர்கள் தண்ணீர் கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். பேச்சு வார்த்தை நடத்துவதிலே என்ன சிரமம் இருக்கிறது?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து மின் சக்தி உற்பத்தியைப் பற்றி பல திட்டங்களை ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் கூட இந்தத் திட்டங்களாலே, மின்வெட்டு குறையப்போவதில்லை. வளர்ந்து வருகிற ஒரு மாநிலத்திலே தனியார் தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு இல்லாமல் இருந்தால்தானே அவர்கள் உற்பத்தியைச் செய்ய முடியும். 40 சதவீத மின்வெட்டிருக்கும் போது தனியார்கள் புதிய தொழிற்சாலைகளை எப்படி உருவாக்குவார்கள்? வேலையில்லாத் திண்டாட்டம்தான் அதிகரிக்கிறது. எனவே மின்வெட்டு இல்லாமல் செய்வதற்கு இந்த அரசு முன்வர் வேண்டும்.

அதேபோல் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய வேண்டும். நேற்று சென்னை எழும்பூர்த் தொகுதியிலே 66, 67, 68 மற்றும் 69-வது வட்டங்களிலும், பெரம்பூர் தொகுதியில் 43-வது வட்டத்திலும் உள்ள ஆயிரக்கணக்கான பெண்கள் தண்ணீர் கிடைக்காமல் ஸ்டிரான்ஸ் ரோட்டிலே உட்கார்ந்து சாலையை மறித்தார்கள். காலையிலிருந்து மாலை வரை ஒரு பட்டாளம் போலீஸ் அங்கே காத்துக் கொண்டு இருந்தது. குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகள் ஒருவர் கூட வந்து பார்க்கவில்லை. எந்த வாக்குறுதியையும் கொடுக்கவில்லை. எனவே இந்த நிலையைப் போக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புதிய சர்க்கரைக் கொள்கையினால், சர்க்கரை ஆலைகளை ஆரம்பிக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி அமைக்க இருக்கின்ற ஆலைகளிலே ஒரு ஆலையை விருதுநகர் தொகுதியிலே அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அமைக்க உத்தேசித்துள்ள 15 உரத் தொழிற்சாலைகளில் ஒன்றை தமிழ்நாட்டில் அமைக்கும்படி நாங்கள் கேட்டு இருக்





கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். எனவே இந்த மன்றத்திலே அதுபற்றி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி, தமிழ்நாட்டில் ஒரு உரத் தொழிற்சாலையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே ஒரு ரயில்வே லெவல் கிராசிங் வேண்டுமென்று பல ஆண்டு காலமாக கேட்டுக் கொண்டு இருக்கிறேன். (குறுக்கீடு). காங்கிரஸ் கட்சி நண்பர்கள் நான் பேசும் போது தேவையில்லாமல் குறுக்கிடுகிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரயில்வே லெவல் கிராசிங் பாலம் வேண்டும் என்றால் பாராளுமன்றத்தில்தான் கேட்க வேண்டும். இங்கே அதைப்பற்றிக் கேட்டால் யார் பதில் சொல்வது ?

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : முதல்வர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். முதல்வர் அவர்களிடம் மனு கொடுக்கப்பட்டு, போன வருடம் டிசம்பர் மாதம், அது பரிசீலனையில் இருப்பதாக போக்குவரத்துத் துறை அமைச்சரிடமிருந்து பதில் வந்திருக்கிறது.

அதேபோல் என்னுடைய தொகுதியில் உள்ள அர்ஜுனா நதியின் குறுக்கே, எம். புதுப்பட்டி என்ற கிராமத்தின் அருகே ஒரு மேம்பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதியிலே பின்தங்கிய மக்கள், தேவர் இன மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் தலைநகருக்கு வரவேண்டும் என்றால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே அவர்கள் வந்து போவதற்கு இந்த மேம்பாலத்தைக் கட்டித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விருதுநகருக்கு மாவட்டத் தலைமை நீதிமன்றம் இதுவரையில் வரவில்லை. எனவே காமராஜ் மாவட்டம் விருதுநகருக்கு ஒரு நீதிமன்றத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது மூடப்பட்ட ஆலைகள். மதுரையில் மகாலட்சுமி ஆலை, அதேபோல் புதுக்கோட்டையில் காவிரி மில் மூடப்பட்டு இருக்கிறது. மதுரையில் உள்ள ஆலையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மகாலட்சுமி ஆலை சிக் ஆலை என்று சொல்லி அங்குள்ள தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய பல சலுகைகளைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதேபோல் புதுக்கோட்டையில் உள்ள காவிரி ஆலையில் கதவடைப்பு

செய்திருக்கிறார்கள். இதனால் 800 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இரண்டு பேர்கள் இறந்து போனதாகக் கூட செய்தி வந்திருக்கிறது.

(பிற்பகல் 1—00)

இதை எல்லாம் இந்த அரசு கவனித்து நல்லமுறையில் அவைகளுக்கு வழி வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டம் சம்பந்தமாக அரசு வருடம் 10 லட்சம் வீடுகள் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் அது இப்போது திசை திருப்பி விடப்பட்டிருக்கிறது. ஏதோ செங்கல், ஓடுகள், நீர்த்த சுண்ணாம்பு போன்ற கட்டுமானப் பொருள்கள் உற்பத்தி செய்யும் பணியை மேற்கொள்ளச் செய்யவும்; தேவைப்படும் இரும்புப் பொருள்களைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மற்றும் கட்டுமானப் பொருள்கள் தயாரிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் பல ஏற்படுத்தப்படும் என்றும் இக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனமாகப் பயன்படுத்தப்படும் என்றும் இதனால் இச்சங்கங்கள் நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும் வணிக வங்கிகளிடமிருந்தும் 3:1 என்ற கடன்-மூலதன விதாச்சார அடிப்படையில் கடன் வாங்கி கட்ட வேண்டும் என்றும் சொன்னால் இவைகளை எல்லாம் எப்போது கட்டுவது; எப்போது இவைகளை நம் கண்ணால் பார்ப்பது? ஆகவே இவை எல்லாம் திசை திருப்பும் வழியாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அதே போல பட்டுக்கோட்டையிலே அங்கே இருக்கின்ற சாக்கடைத் திட்டத்திலே 62 லட்ச ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள். அதில் பல பேர் ஊழல் செய்து இருக்கிறார்கள் என்ற புகார் ஜனதா கட்சி மாவட்டச் செயலாளர் திரு. ஆதிகேசவனால் மாவட்டத் ஆட்சித் தலைவருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அது விசாரணையில் இருக்கிறது. அதை தீர விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் முட்டாஞ்சட்டி ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக இருக்கும் பாஸ்கரன் என்பவர் தன்னை எந்த ஒரு வேலையும் செய்ய விடாமல் உறுப்பினர்கள் தடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் நிர்வாகத்தை சீர்திருத்தம் செய்யும் போது இவைகளுக்கு எல்லாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மாவட்டங்களை பிரித்தல். நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றுக்கு நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் என்று வைத்து இருக்கிறீர்கள். கட்டபொம்மன் என்பவர் வெள்ளைக்காரனை எதிர்த்து போராடிய பெரிய தியாகி





ஒரு பெரிய வீரன். அந்த கட்டபொம்மனுக்கு தனியாக அவன் பெயரிலேயே கட்டபொம்மன் மாவட்டம் என்று அமைக்க வேண்டுமே தவிர, நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் என்று அமைப்பது தேவையில்லாத ஒன்று. ஆகவே அவ்வாறு தனியாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், மதுரையில், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் என்று பெயர் வைத்து இருக்கிறார்கள். ஏன் அதற்கு பெருந்தலைவர் காமராஜர் பல்கலைக் கழகம் என்று பெயர் வைக்கக்கூடாதா? அதில் என்ன தவறு இருக்கிறது? பேரறிஞர் அண்ணா பெயரில் பல்கலைக்கழகம் இருக்கிறது. தந்தைப் பெரியார் பெயரில் போக்குவரத்துக் கழகம் இருக்கிறது. இதற்கு மட்டும் என்ன பாகுபாடு? ஆகவே பெருந்தலைவர் காமராஜர் பல்கலைக் கழகம் என்று வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வறட்சி நிவாரண உதவியைப் பற்றி இந்த ஆளுநர் உரையில் சொல்லும்போது, வறட்சி நிவாரண உதவியாக ரூ. 310 கோடி வழங்கக் கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது என்றும், 1986-87 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசு ரூ. 31.77 கோடி செலவு உச்சவரம்புக்கு ஏற்பளித்து இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறீர்கள். வறட்சியை பற்றி நீங்கள் சரியாக எடுத்து சொல்லவில்லையா? அல்லது மத்திய அரசு பாரபட்சமாக பார்க்கிறதா? என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் அழுத்தமாக இந்த அவையில் ஒரு தீர்மானத்தைப் போட்டு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரூ. 310 கோடி கேட்டதற்கு 31 கோடி ரூபாய் தான் கொடுத்து இருக்கிறார்கள். அதாவது 10-ல் ஒரு பங்கு தான் கொடுத்து இருக்கிறார்கள். நீங்கள் மத்திய அரசோடு ஒற்றுமையாக அட்ஜெஸ்டு செய்கின்ற கட்சி, உங்களுடைய கூட்டணி கட்சியே இப்படி செய்தால் நீங்கள் கேட்பதற்கு என்ன? சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கரூர்-திண்டுக்கல் அகல ரயில் பாதைத் திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது சர்வே செய்வதற்கு தான் சரியாக இருக்கும். சரியான முறையில் பாதை கூட போடாமல் இருக்கிறது. இதை எல்லாம் நீங்கள் கேட்கவேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு அனுப்பவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே சேதுசமுத்திரத் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறீர்கள். சேது சமுத்திரத் திட்டம் எப்போது ஒப்புக்கொள்ளப்பட்டது என்று கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) கடைசியாக

இந்தியாவினுடைய முடிசூடா மன்னன், ஆசிய ஜோதி, 17 ஆண்டு காலம் பிரதமராக இருந்த நேருஜி அவர்களுடைய உருவப் படத்தை இந்த மன்றத்திலே திறந்து வைக்கவேண்டும் என்று ஜனதா கட்சியின் சார்பாக கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. கே. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன், மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் அவர்கள் பேசும் போது கர்நாடக அரசு தமிழகத்திற்கு காவேரி நீரை ஏதோ தயவு தாட்சண்யத்தின் பெயரில் தருவதாக சொன்னார்கள். தமிழக அரசு உரிமையின் அடிப்படையில் தான் காவேரி நீரை கேட்கின்றது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்களா? இல்லையா? என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் அவர் ஒப்புக் கொள்வதற்கு என்ன இருக்கிறது? கொடுத்துத் தான் ஆக வேண்டும். இயற்கை எல்லோருக்கும் சொந்தம்.

**திரு. அ. மலர்மன்னன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் மேதகு ஆளுநர் உரையின் மீது நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் இன்று எரியூட்டும் பிரச்சினையாக இருப்பது வறுமையும், வேலையில்லா திண்டாட்டமும் ஆகும். இந்த உரையில் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க எந்த விதமான திட்டங்களும் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரிலே வேலைவாய்ப்பு பயிற்சித் துறை சம்பந்தமாக ஒரு குறிப்பிலே 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதியன்று தமிழகத்திலே வேலைவாய்ப்புகள் வேண்டி வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே தங்களை பதிவு செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 17,07,940 ஆக இருந்தது. அந்த எண்ணிக்கை 1985 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று 20,81,257 ஆக உயர்ந்திருக்கிறது. அதாவது ஒரேயாண்டில் 3 3/4 இலட்சம் பேர் கூடுதலாக வேலைவாய்ப்பு வேண்டி, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தங்கள் பெயர்களை பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் அந்த எண்ணிக்கை மேலும் பல இலட்சங்களில் உயர்ந்திருக்கும். இது தவிர, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அவர்களுடைய பெயர்களை பதிவு செய்து கொள்ளாத பல இலட்சக்கணக்கான பேர்கள் இன்றைக்கு வெளியிலே இருக்கிறார்கள்.





ஆனால் இதே புள்ளிவிவரத்திலே வேலை வாய்ப்பு கொடுத்திருப்பதைச் சொல்லியபோது, 1984 ஆம் ஆண்டு தமிழகத்தில் 60,298 பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விவரங்கள் கூறியுள்ளது. 1985 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு பெற்றவர்களுடைய எண்ணிக்கை 52,390 ஆக குறைந்துள்ளது. இதிலே அரசுத் துறையிலே வேலை வாய்ப்பு பெற்றவர்கள் எவ்வளவு பேர்கள், தனியார் துறையிலே வேலைவாய்ப்பு பெற்றவர்கள் எவ்வளவு பேர்கள் என்பது குறிப்பிடப்படவில்லை. ஆனால் உங்களுடைய புள்ளி விவரக் கணக்கில் 1985 ஆம் ஆண்டில் புதியதாக வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டவர்கள் 3¾ இலட்சம் பேர் கூடுதலாக இன்றைக்கு உயர்ந்திருக்கிறது என்று கூறியிருக்கிறீர்கள். ஆகவே இந்தத் திட்டத்தின் பயனாக என்ன காரியங்களைச் செய்திருக்கின்றீர்கள் என்பதனையும், புதிய தொழிற்சாலைகள் துவங்கும் பட்டியலிலே இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதற்குக் கொண்டு போகும் நிலை நாட்டு மக்களை தமிழகம் இருண்டுவிடும் என்று எண்ணுகின்ற நிலைமைக்குக் கொண்டுபோய் விட்டது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தில் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில் வங்கிகளின் மூலமாக 18,100 படித்த பட்டதாரிகளுக்கு கடன் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறீர்கள். ஆனால் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி வரையிலும், 6,316 பேர்களுக்குத் தான் கடன்கள் கொடுக்கப்பட்டிருப்பதாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இன்றைக்கு தெரிவித்திருக்கிறார்கள். மீதமுள்ள 12,000 பேருக்கு இந்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள்ளாக கடன்களை வழங்கமுடியுமா என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்தத் திட்டத்தின்கீழ் மூன்றில் ஒரு பங்கு இளைஞர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பழங்குடியினருக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய தினம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சரியான பரிகாரம் கிடைக்கவில்லை என்பதனையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆங்கிலத்திலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள் "The search of a blindman in a dark room for a black cat which is no there" அதாவது பார்வையற்ற ஒருவன் ஒரு இருட்டறையில் இல்லாத கருப்புப் பூனையைத் தேடியது போல என்ற அந்தப் பழமொழியைச் சொல்வார்கள்.

[திரு. அ. மலர்மன்னன்] [1987 மார்ச் 6

சென்ற ஆண்டு கவர்னர் உரையிலே அறிவிக்கும்போது ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கும் கட்டப் போவதாக நீங்கள் கூறியிருந்தீர்கள். ஆனால் இந்தத் திட்டத்தின்கீழ் 1986-87 ஆம் நிதியாண்டிற்குள் 10 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருகின்றதா என்றால் இல்லை. ஆகையால் இந்த கவர்னர் உரையிலே ஏமாற்றம் தான் காத்திருந்தது. ஒரு வீடு கட்ட ரூ. 10,000 செலவாகும். 10 இலட்சம் வீடுகள் கட்ட ரூபாய் ஆயிரம் கோடியாகும். மூன்று ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் கட்ட ரூ. 3,000 கோடி தேவை. இந்தத் திட்டத்தினை நீங்கள் அறிவித்த நேரத்திலே, எங்களுடைய தலைவர் அவர்கள் சட்டமன்ற மேலவையிலே காரண காரிய விளக்கங்களை எடுத்துக் கேட்ட நேரத்திலே, பாம்பின் கால் பாம்பறியும் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட முடியாத திட்டம் என்று அன்றைக்கே கலைஞர் அவர்கள் சொன்னார்கள்.

இன்றையதினம் நாட்டு மக்களை ஏமாற்றுவதாகவும், மிகவும் குறைந்த அளவிற்கு மக்களை ஏமாற்றும் வகையில் வாக்குகளை சேகரிக்கவேண்டுமென்று, இதுபோன்ற திட்டங்களை நீங்கள் கொண்டு வந்திருக்கின்றீர்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். 'நாட்டு மக்கள் வாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதாது' என்று.

சென்ற ஆண்டு மத்திய அரசு ரூ. 900 கோடி துண்டுவிழும் பட்ஜெட்டை சமர்ப்பித்தது. இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 1,000 கோடி துண்டுவிழும் என்று மத்திய அரசு பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறது. பகிரங்கமாகவும், பயங்கரமாகவும் விலைவாசி ஏறி, ஏழை எளிய மக்கள் இன்று அவதிப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இது ஏழைகளின் பட்ஜெட் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இதே நேரத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற குழந்தைவேலு அவர்கள் ஏழைகளுக்கு ஒன்றுமே இல்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆந்திர முதல்வர் என்.டி. ராமாராவ் அவர்கள் இது ஏழைகளுக்கு எதிரான பட்ஜெட் என்று கூறியிருக்கிறார்கள். ஆனாலும் இன்றையதினம் மத்திய அரசை எப்படியேனும் திருப்திபடுத்தவேண்டுமென்று நீங்கள் ஆண்டு கொண்டிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை தெரிவிக்க விரும்புகிறேன்.



1987 மார்ச் 6] [திரு. அ. மலர்மன்னன்]

(பிற்பகல் 1–10)

இன்றைக்கு இருக்கின்ற அரசைப்பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். நீதி, நிர்வாகம், சட்டமன்றம் இம் மூன்றும் கூடினால் தான் ஜனநாயகம் தழைத்து நிற்க முடியும். இதைத்தான் அண்ணா அவர்கள் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இவற்றோடு ஒப்பிட்டு இந்த மூன்றும் சமமாக சரியாக இருக்குமானால் வாய் சிவக்கும், மணக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நீதித்துறை எப்படியெல்லாம் இருக்கிறது என்பதை நான் எடுத்துச்சொல்லவில்லை. உண்மையில் தமிழ்நாட்டில் வழக்கறிஞர்கள் எல்லாம் கோர்ட்டுக்கு செல்லாமல் இருந்த கதை நாம் அறிவோம். இன்று நிர்வாகத்துறையை எடுத்துக்கொண்டால் 9-க்கு மேற்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வேலையிலிருந்து தானாக வெளியேறியிருக்கிறார்கள். நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் நிர்வாகத்திலே ஆளும் கட்சி எந்த அளவுக்கு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உங்கள் அனுமதியோடு இந்தக் கடிதத்தை நான் வாசிக்க விரும்புகிறேன். பார் கைன்ட் கன்சிடரேஷன் என்ற தலைப்பிலே, நரசிம்மன், அசிஸ்டெண்ட் என்ஜினியர், பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்ட், சிவகங்கை என்று இந்த லேட்டரில் இருக்கிறது. அதிலே பொசிஷன் என்று எழுதி He has been selected by the Tamil Nadu Public Service Commission for the post of Assistant Engineer in the year 1983 and tentatively assigned No. 214 என்று குறிப்பிட்டு, அதிலே nature of request என்று இருக்கிறது. " He must be placed top most in the panel in the category of Assistant Engineer for promotion as Executive Engineer in the Office of the Chief Engineer, Public Works Depatment Chepauk, Madras-5 என்று இருக்கிறது. நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அன்றையதினம் அமைச்சராக இருந்து இன்றைக்கில்லாதிருக்கின்ற மதிப்பிற்குரிய டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் இந்தக் கடிதத்தை 26-ந்தேதி மாண்புமிகு திரு. யூசுப், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அலுவலகத்திற்கு அனுப்பி 28ந்தேதி இந்தக் கடிதம், அந்தத் துறைக்கு வந்து சேர்ந்து அங்கே சீல் இடப்பட்டிருக்கிறது. நான் இதை ஏன் கூறுகிறேன் என்றால், பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் 1983-ல் அந்த பேனலில் 214 ஆக இருந்த அவருக்கு டாப் பிரியார்ட்டி கொடுத்து அவரை முதன்மைக்கு கொண்டு வந்து அவருக்கு பதவி உயர்வுதர வேண்டுமென்று ஒரு துறையினுடைய அமைச்சர், மற்றொரு துறை அமைச்சருக்கு எவ்வளவு பகிரங்கமாக கடிதம் எழுதி அதிகார துஷ்பிரயோகம் செய்துகொண்டிருந்தார் என்பதற்கு இதைவிட ஒரு சான்று இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள். ஒருத்தர் தனக்கு பரிந்துரை வேண்டி கேட்கின்ற போது, அதற்கு பரிந்துரை செய்திருக்கிறாரே தவிர இந்த 214 லிருந்து முதலுக்கு கொண்டு வந்து, அவரை முன்னணியில் நிறுத்த வேண்டும் என்று ஒன்றுமில்லை. தன்னிடத்தில் ஒருத்தர் குறையைச் சொல்லுகின்றபோது, தேவையைக் கேட்கின்றபோது இதை பரிசீலனை செய்யுங்கள் என்று சம்பந்தப்பட்டவருக்காக கொடுத்து இருக்கின்ற கன்சிடரேஷன். ஆகவே இதிலே குற்றம் ஒன்றுமில்லை. அதை நீக்க வேண்டும்.........(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை பார்த்து விட்டேன். பேசி முடித்ததும் அந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்துவிடுங்கள்.

திரு. அ. மலர்மன்னன்: தலைவர் அவர்களே, அதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இது நடைபெற்றதா, நடைபெறவில்லையா என்பது வேறு விஷயம். ஆனால் சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள்—மாண்புமிகு அமைச்சர் பூசுப் அவர்களுடையத்துறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் துறையினுடைய சீல் இதிலே இருக்கிறது. இதிலே கூறுகின்றார். 214 ஆவதாக இருக்கின்ற பேனலிலிருந்து அவருக்கு டாப் பிரியாரிட்டி கொடுக்க வேண்டுமென்ற வாசகம் இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே உங்களிடம் நான் காட்டியிருக்கிறேன். இதை உங்களுக்கு அனுப்பிவைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாராவது உறுப்பினர்கள் சொல்வார்கள் என்று நினைத்தேன். சர்வீஸ் கமிஷன் செலக்ஷனில் சர்வீஸ் கமிஷன் தான் சீனியாரிட்டி பிக்ஸ் பண்ணமுடியும். எந்த அமைச்சரும் நினைத்தால் பண்ண முடியாது....................(குறுக்கீடு) யாரும் செய்ய முடியாது. (The Service Commission alone can fix seniority on selection) ஒரு லிஸ்ட் பப்ளிஷ் பண்ணும்போது 1, 2, 3 என்று போடக்கூடிய அதிகாரம் சர்வீஸ் கமிஷனுக்குத்தானே ஒழிய அமைச்சருக்கு கிடையாது. ...................... (குறுக்கீடு) நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஜஸ்ட் டு என்லைட்டன் தி அவுஸ். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு சொல்கிறேன்; சர்வீஸ் கமிஷனிலே செலக்‌ஷன், The power is vested with the Service Commission Members including the Chairman அதிலே எந்த மாற்றமும் கிடையாது. அந்தச் சட்டத்தைத் தெரிந்தும் கூட, அந்தச் சட்டத்தினை மீறுகின்ற விதத்திலே, இன்ப்ளுயன்ஸ் பண்ணுகின்ற விதத்திலே ஒரு அமைச்சர்.......................





மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த லெட்டரை வாங்கிக் கொண்டு பிறகு நான் விசாரிக்கிறேன். (குறுக்கீடு) அந்த புதில் வேண்டாம்.

திரு. அ. மலர்மன்னன்: ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற எண்ணிலடங்காத குறைபாடுகள், லஞ்ச லாவண்யங்கள் இந்த அரசிலே இருக்கிறது என்பதற்காகத்தான் இந்த எடுத்துக்காட்டை இன்றையதினம் நான் எடுத்து வைத்திருக்கிறேன்.

ஆளுநர் தன் உரையிலே, சென்ற ஆண்டு நடந்துமுடிந்த நகரசபை, பஞ்சாயத்துத் தேர்தலைப்பற்றி குறிப்பிட்டுள்ளதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மக்கள் ஆட்சியில் வேரூன்றி இருக்கும் இந்த உள்ளாட்சி அமைப்புகளை பலப்படுத்த அரசு உறுதி கொண்டுள்ளதாக ஆளுநர் உரையிலே இன்றைக்கு கூறி இருக்கிறார்கள். ஆனால் நடப்பது என்ன? தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சியினுடைய உரிமைகள் நாளுக்கு நாள் பறிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இன்றைய தினம் திருச்சி நகரத்திலே ஐ.யு.டி.பி. ஃபண்ட்சிலிருந்து 25 இலட்சம் ரூபாய் நகர பஸ் நிலையத்திற்கு, அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட தொகை நெல்லைக்கு மாற்றப் பட்டிருக்கிறது.

அதேபோல். சென்ற ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரிலே அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்பு மிகு திரு. ப.உ.ச. அவர்கள், நலிவுற்ற நகராட்சிகளுக்கு நிதி அளிக்க, ' அர்பன் டெவலெப்மெண்ட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் ' அமைக்கப்படும் என்றும், அந்த அர்பன் டெவலெப்மெண்ட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் கேரள மாநிலத்தைப் போன்று அமைக்கப்படும் என்றும் உறுதியளித்தார். ஆனால் ஓராண்டு ஆகியும் அந்தத் திட்டம்—அதாவது அந்த அர்பன் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்னவாகியது என்பதை இன்றைய தினம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள நகராட்சி அலுவலகங்களிலே, தலைவர்களுடைய வீடுகளிலே இன்றைக்கு எஸ்.டி.டி. வசதிகளைத் துண்டிக்கச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் மத்திய அரசு மாநிலத்திலே இருக்கின்ற அமைச்சர்களுடைய இல்லங்களிலேயும், அலுவலகங்களிலேயும் இத்தகைய ஒரு முறையைக் கடைப்பிடித்தால் அது நியாயமான ஜனநாயகமாக இருக்குமா என்பதை இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

ஆளுநர் தனது உரையில், ' வரும் ஆண்டில் நிதி ஆதாரங்களில் ரூபாய் 86 கோடி அளவிலே குறைகிறது ' என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த அரசிற்கு வரும் வருவாயில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி மானியமாக இன்றைக்கு சென்றுவிடுகிறது. இந்தியாவிலேயே அதிக நஷ்டத்திலே நடக்கின்ற மின்சார வாரியம், தமிழக மின்சார வாரியம் என்று பாராளுமன்றத்திலே சில நாட்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1981-ஆம் ஆண்டு ரூபாய் 227.26 கோடி தமிழக மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று பாராளுமன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1977ஆம் ஆண்டு இந்த மாநில அரசு முதல், முதலாக பதவிக்கு வந்தபோது, மின்சாரத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பண்ருட்டியார் அவர்கள் கூறினார்கள் '' தமிழ் நாடு மின்சார வாரியம் ஒரு நோயுற்ற யானையாக இருக்கிறது. ஆகவே, அந்த யானையினுடைய நோயை நான் குணப்படுத்துவேன். என்று கூறினார்கள் ஆனால், அந்த நோய் முற்றி இன்றைக்கு வெள்ளை யானையாக இந்தத் துறை இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, மருத்துவர்களுக்கு மற்றவர்களுக்கு நியாயமான கோரிக்கைகளை, இந்த அரசு இன்றைக்கு புறக்கணித்துக் கொண்டு இருக்கிறது. இந்தியாவிலே இருக்கின்ற பெரும்பான்மையான மாநிலங்களிலே தங்களது ஊழியர்களுக்கு ஒரு மாதச் சம்பளத்தை போனசாக வழங்குகிறார்கள். ஆனால் இந்த கொடை வள்ளல் ஆட்சியிலே அவர்களின் நியாயமான கோரிக்கைகள் எல்லாம் மறுக்கப்படுகின்றன என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேச ஆரம்பித்து 25 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. மலர்மன்னன் : இன்றைய தினம் சட்டம் எப்படி எல்லாம் வளைந்து கொடுக்கப்படுகிறது என்பதையும், இந்த நேரத்தில் காவல்துறை எப்படி எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் அருள் கூர்ந்து தெரிவிக்க விரும்புகிறேன்.

திருச்சியிலே இன்றைய தினம் சி.பி., சி.ஐ.டி., அலுவலகம் இருக்கிறது. அந்த அலுவலகத்திலே விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்படுகின்ற தொண்டர்கள், பொதுமக்கள் எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே அருள் கூர்ந்து தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் தெரிவிக்க விரும்புகிறேன். அங்கே





அழைத்துச் செல்லப்படுகிற, விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகிறவர்களை—அங்கேயிருக்கின்ற ஒரு வேப்ப மரத்திலே 10 அடி நீளத்திற்கு, உயரத்திலே ஒரு கயிறு கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கயிறிலே ஒரு சைக்கிள் ட்யூப் கட்டப்பட்டிருக்கிறது. அந்த சைக்கிள் ட்யூபிலே விசாரணைக்குக் கொண்டு செல்லப்படுகிறவர்கள் தூக்கிப் போடப்படுகிறார்கள். சர்க்கஸிலே தொங்குவதுபோல், காலை வைத்துக்கொண்டு தொங்கிக் கொண்டு இருக்கிறவர்களை உள்ளங்காலில் இரும்புத் தடி கொண்டு இன்றைக்கு தாக்கி இருக்கிறார்கள் ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏன் தாக்குகிறார்கள்? எதற்காக? அதைச் சொல்லிவிட்டுச் சொல்லுங்கள். சும்மா இருக்கிறவர்களைப் பிடித்து தக்கமுடியுமா ? நாட்டு மக்களுக்காக (குறுக்கீடு) Third Degree methods will be resorted to only in extreme cases

(பிற்பகல் 1–20)

திரு. அ. மலர்மன்னன் : இப்படியெல்லாம் தாக்கி, இதைவிட இன்னும் கொடுமையைச் சொல்கிறேன். அங்கே முட்டிபோட்டு உட்கார வைத்துக் கொண்டு இரண்டு கைகளை நீட்ட வைத்து இரும்புத் தடியால் அடித்து அப்பளம் உப்புவதுபோல்இன்றைக்கு கைகளெல்லாம் உப்பி இருக்கிறது. ஆனால் அதைப் போலவே இன்றைக்கு,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னவென்று சொல்லுங்கள்.

திரு. அ. மலர்மன்னன் : : ஆகவே, இன்றைய தினம் தாய்மார்கள் மன்னித்துவிட வேண்டும் (குறுக்கீடு).

திரு. கே. சுப்பராயன் : என்ன தப்பு என்பது பாயின்ட் அல்ல (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைக் கேட்கவில்லை. எதற்காக நடந்தது என்பதை அவை தெரிந்து கொள்ளவேண்டும் அல்லவா ? நடந்தது உண்மையா, இல்லையா என்பது தெரியாது. எதற்காக என்பதைச் சொல்லட்டும். சொல்வது வேறு. (குறுக்கீடு) என்ன காரணத்திற்காக என்பதைச் சொல்லட்டும். அப்படி நடைபெற்று இருக்கிறதா என்பதை நீங்கள் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும். அவர் சொல்ல வந்தார். யாரும் குறுக்கே எழுந்து சொல்லவில்லை. இருந்தாலும், அதிகாரிகளைப் பற்றி வருகின்ற நேரத்திலே நான்தான் அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அதில் உண்மையைக் கண்டறிய வேண்டும். எதற்காகச் செய்தார்கள் என்பதையும் கண்டறியவேண்டும். செய்திருக்கிறார்களா என்பதையும் பார்க்க வேண்டும். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) Criminals are also resorting to uncivilised methods. Please take note of it. (குறுக்கீடு) அதனால் பாதிக்கப்பட்ட மக்களைப்பற்றி பேசுங்கள்

(பேரவைத் தலைவர்) [1987 மார்ச் 6

நான் defend பண்ணி சொல்லவில்லை. எந்த கிரிமினல் என்று தெரியுமா? Criminals are resorting to uncivilised methods. Do not encourage Criminals. If you encourage criminals, naturally. I have to encourage police. Police alone has to protect the society. (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு வழக்கறிஞர், அதிலும் ஒரு கிரிமினல் வழக்கறிஞர். உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் பல வழக்குகளை நடத்தியிருக்கிறீர்கள். நானும் உங்களோடு இருந்திருக்கிறேன். நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, நமக்கு வழக்குகளை பார்க்கிறபோது இன்னார் அக்யூஸ்ட், இன்னார் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறார்கள், நாம் குற்றம் சுமத்தப்பட்டு இருக்கிற நிலமையை நீதி மன்றத்திலே வழக்காடுகிறோம். அவர்களை குற்றவாளிகள் என்று சொல்வதற்குக்கூட யாரும் அனுமதிப்பது இல்லை. குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்கள் நீதிமன்றத்திலே சாட்சியங்களை வைத்து முடிவுக்கு வருகிறோம். அதற்குப் பிறகுதான் ரிலீசோ, கன்விக்‌ஷனோ. அதற்கிடையில் அவர்களை கிரிமினல்ஸ் என்று சொல்லி எப்படி போலீஸ்...........(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எப்படி செய்யலாம் என்று சொல்லவில்லை. You must see the other side of the picture. We shall not en courage criminals. சப்போஸ், யாராவது ஒரு 10 பேரை அன்- சிவிலைஸ்டு மெத்தடில் கொலை செய்தார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த 10 பேர்களுக்காக யார் பேசுகிறார்கள்? If they are dealt with, if they are murdered, if they are killed, who wills peak on their behalf? (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) அதையும் ஒரு பக்கம் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதைச் சொல்லும்போது இதையும் பார்க்க வேண்டும். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) நியாயம் வழங்க வேண்டுமென்றால் எல்லோரும் வழங்கலாம். நீங்கள்கூட நீதி வழங்கலாம் கலெக்டர் கூட நீதி வழங்கலாம். நீதி வழங்குவது என்பது நீதிமன்றத்திற்கு மட்டுமல்ல....எல்லோரும் நீதி வழங்கலாம். ஒரு சாதாரண வி.ஏ.ஓ. கூட நீதி வழங்கலாம். (குறுக்கீடு).

திரு. கே. சுப்பராயன்: விசாரித்ததற்குப் பிறகு நீதி வழங்க வேண்டும். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

திரு. இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்பொழுது ஒரு கொலைகாரன் என்னுடன் வந்தால் எனக்குப் பெருமை. அப்போது வழக்கு. இன்றைக்கு ஒரு கொலைகாரனுடன் பேசினால் அது தவறு. அன்று உள்ள நிலைமை வேறு. இன்று இருக்கக்கூடிய நிலைமை வேறு (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).



1987 மார்ச் 6)]

திரு. அ. ரகுமான்கான்: அதை கோர்ட்டினுடைய முடிவுக்கு விட்டு விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பிளாக் கோட் போட்டுக் கொண்டு செய்யும் தொழில் (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

திரு. அ. ரகுமான்கான்: Police excess-ஐ encourage செய்யாதீர்கள்.

திரு. இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. மலர்மன்னன் அவர்கள் எந்த அளவுக்கு சிறை பிடிக்கப்பட்ட தோழர்களை போலீஸ்காரர்கள் அல்லது காவல் துறையைச் சார்ந்தவர்கள் அல்லது சிறையின் உள்ளே இருப்பவர்கள் சித்திரவதை செய்கிறார்கள் என்று சொன்ன நேரத்தில், அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களைப்பற்றி அவர் சொன்னாரே தவிர, கிரிமினல்ஸ்களைப் பற்றி அவர் பேசவில்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்வதோடு இரண்டாவதாக தாங்கள் பயன்படுத்திய வார்த்தைகள் ''அன்-சிவிலைஸ்டு மெதட்'' மூலமாக நீதியைக் கொண்டு வர வேண்டும் என்ற வாசகங்கள் ஆங்லோ சாக்ஸன் காலத்தில் சொல்ல வேண்டிய நீதியே தவிர,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : If they are resorting to uncivilised methods, அந்த பிக்சரையும் பாருங்கள் என்றுதான் சொன்னேன். அதைக் கூட பார்க்க மாட்டோம் என்றால் ''You have no responsibility towards Society '' என்று தான் அர்த்தம். (குறுக்கீடு) போலீசே வேண்டாம் என்று தீர்மானம் போட்டு விட்டால் நாடு எப்படி இருக்கும் என்று பாருங்கள் (குறுக்கீடு) நீங்கள் இறந்துபோனவர்களின் குடும்பத்தைப்பற்றி சிந்தியுங்கள். அவ்வளவுதான். வேண்டாம் என்றால் விட்டுவிடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் சொல்லுவது தாங்கள் போலீஸ் எக்சசுக்கு ஆதரவாக இருக்காதீர்கள். (குறுக்கீடு).

திரு. இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பயன்படுத்திய அந்த வார்த்தைகள்— ''அன்-சிவிலைஸ்டு மெதட் மூலமாக உண்மைகளைக்கொண்டு வர வேண்டும் என்பதற்காகப் பயன்படுத்தலாம்'' என்று பயன்படுத்திய அந்த வார்த்தைகள் மூலம் காவல் துறையினருக்கு காட்டுமிராண்டித் தனமாக நீங்கள் நடந்துக் கொள்ளலாம் என்று நீங்கள் லைசென்ஸ் கொடுக்கிறீர்கள் என்றுதான் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காட்டுமிராண்டித்தனமாக நாடு முழுவதும்—தமிழ்நாடு முழுவதும் வெடி குண்டுகளை வெடித்தால் எப்படிக் கட்டுப்படுத்துவது. தமிழ்நாடு முழுவதும் வெடிகுண்டு வைத்து தமிழர்களைச் சாகடிக்கும்போது யார் அவர்களைக் காப்பாற்றுவது? எப்படி அவர்களைக் கட்டுப்படுத்துவது என்று சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : அதற்குக் கோர்ட் இருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு முழுவதும் வெடி குண்டு வைத்து தகர்க்கக் கூடியவர்கள்.....

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, கோர்ட் தானே அந்தத் தீர்ப்பை வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Why you hold brief for criminals please don't hold brief for criminals எல்லோரும் பேப்பரில் பார்த்தோம். இப்படி இரண்டு இடத்தில் ''டிலிங்ஸ்'' நடந்த பிறகுதான்—இது என்னுடைய சொந்தபிப்பிராயம்—எம்.எல்.ஏ., என்ற முறையில் சொல்கிறேன்—not as a Speaker—அதற்குப் பிறகுதான் வெடி குண்டு சம்பவங்கள் நிற்கின்றன. அதற்குப் பிறகு தொடரவில்லையே (குறுக்கீடு) வெடிகுண்டு வைப்பது ஏன் நின்றது? தமிழ்நாடு முழுவதும் வெடி குண்டு வைத்து மக்களைக் கொன்றுவிட்டு, அதற்குப் பிறகு காவல்துறை நடவடிக்கை எடுத்த பிறகுதானே அது நிறுத்தப்படுகிறது? யார் அதைச் செய்திருக்கிறார்கள்? மக்களை எப்படிக் காப்பாற்றுவது?

திரு. கே. சுப்பராயன்: தலைவர் அவர்களே, அதற்காக போலீஸ் ஸ்டேஷனில் ஸ்ட்ரெங்க்தன் பண்ணுங்கள். அதை விட்டு விட்டு போலீஸ் எக்சசுக்கு இடம் கொடுக்காதீர்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாக்கவே சொல்கிறேன். தினசரி பத்திரிகையை எடுத்துப் படித்தால் குண்டு வைத்ததால் இறந்தவர்களின் எண்ணிக்கையை எண்ணிப் பாருங்கள். அவர்களையெல்லாம் யார் காப்பாற்றுவது? யார் பாதுகாப்பது? போலீசார் சில நடவடிக்கைகளை எடுத்தால்தானே இதைத் தடுக்க முடியும்? எல்லாவற்றையும் கோர்ட்டுக்கு அனுப்புவது என்றால் தினமும் நாட்டில் வெடிகுண்டுகள் வெடித்துக் கொண்டுதான் இருக்கும். (குறுக்கீடு). இது தண்டனையே அல்ல. தண்டனையா கொடுத்திருக்கிறார்கள்? (குறுக்கீடு). குண்டு வைப்பதற்கு தூக்குத் தண்டனையே கொடுக்க வேண்டும். (குறுக்கீடு). தமிழ்நாட்டு



மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தை நாம் அனைவரும் வைத்துக் கொள்ள வேண்டும். அதைச் சிந்தித்துப் பாருங்கள். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, போலீஸ் எக்சசை என்கரேஜ் செய்யாதீர்கள் என்று தான் சொல்கிறேன், போலீஸ் செய்வது கரெக்ட் என்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : will make it clear உட்காருங்கள். தமிழ்நாட்டில் ஒரு இடத்தில் ஒரு வெடி குண்டு வைத்து பல்வேறு நபர்கள் இறந்தால், சாகடிக்கப்பட்டால் கொலை செய்யப்பட்டால் அந்தக் குடும்பங்களை யார் காப்பாற்றுவது? (குறுக்கீடு) இறந்தவர்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். நான் பொதுப்படையாக போலீசுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டாம் என்று தான் சொல்கிறேன். அதிக அதிகாரம் அவர்களுக்குத் தேவையில்லை. ஆனால் வெடிகுண்டு வைத்து பல்வேறு இடங்களில் பல்வேறு உயிர்களைப் பறித்தவர்களைப் பொறுத்தவரையில்—நான் இன்னும் சொல்லப் போனால் இதைவிட கொஞ்சம் வேகமாகவே நடந்திருக்க வேண்டும் காவல் துறை. நான் அதை இங்கேயிருந்து கேட்டுக்

(பிற்பகல் 1-30)

கொள்கிறேன். இதைவிட வேகமாக நடவடிக்கை எடுங்கள். இறந்து போன வங்கி அதிகாரியின் மனைவிக்கு யார் பதில் சொல்லுவது? இறந்து போனவரின் குடும்பம் தமிழ்நாட்டின் குடும்பம்தான்.

திரு. பொ. உத்திராபதி : அவர்களைக் கண்டுபிடித்து தூக்கில் போடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாட்டு மக்களுக்காக, உங்களுக்கும், எங்களுக்கும் சேர்த்துத்தான் பாதுகாப்பு.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள். நான் ஒரு ஹார்ட் பேஷன்ட். எனக்கு டென்ஷன் ஏற்படுத்தாதீர்கள். நானே சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை வேண்டாம். அதற்கு மேல் விளக்கம் வேண்டாம்.

திரு. வி. பி. சிந்தன் : போலீஸ் எக்செஸ்ஸை என்கரேஜ் பண்ணுகிறீர்களா? அது கூடாது என்று சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், சொல்லுகிறேன். (குறுக்கீடு) அதெல்லாம் இங்கே வேண்டாம். நாட்டு மக்கள் மேல் அக்கறை வேண்டுமென்றால் அப்படித்தான். ஜட்ஜ்மெண்ட் இருக்கிறது. இறந்து போன பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்கு எப்படி சென்று பார்ப்பது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாமல் இந்தப் பிரச்சினை வளர்ந்து கொண்டு போகிறது. வெடி குண்டு போட்டிருந்தாலும், அல்லது வேறு குற்றங்கள் செய்திருந்தாலும் சட்டப்படி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். சட்டத்தின் அடிப்படையில் கடுமையாகத் தண்டிக்கப்பட உரிமை பெற்றவர்கள். காவல் துறையினர் இதில் எப்படியெப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று விதிமுறைகள் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் அத்து மீறி நடந்துக் கொள்ளக் கூடாது என்பது இந்த அரசின் கொள்கை.

**திரு. அ. மலர்மன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தாங்கள் அமர்ந்து அவ்வளவு பெரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்காக நன்றி கூறுகிறேன். காலம் இப்படியே போகாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் ன்னைப் பார்த்துச் சொல்கிறீர்கள்? இதனுடைய அர்த்தம் என்ன? எனக்கு ஏன் Challenge ? காலம் எப்போதும் போகும். என்றாலும், காலம் குண்டு வைத்தவர்களுக்கு இப்படியே போகாது.

**திரு. அ. ரகுமான்கான்:** சபாநாயகர் அவர்களைப் பார்த்துத் தானே பேச வேண்டும். Don't take it seriously.

**மாண்மிபுகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, காலத்தை நிர்ணயிப்பது தனிப்பட்டவர்களோ அல்லது தனிப்பட்ட கட்சியோ அல்ல, மக்கள் மன்றம் தான் முடிவு செய்ய வேண்டும். அதைப் பற்றி யாரும் கவலைப் பட வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர்மன்னர் விரைவிலே பேசி முடித்து எல்லோரையும் சாப்பிட அனுப்பினால் மிக நன்றாக இருக்கும்.

**திரு. அ. மலர்மன்னன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லுகிறேன். இந்த குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடில்லை.
** **

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காகத்தான் நான் முதலிலேயே சொன்னேன். இதை முழுமையாகப் பேச வேண்டிய நிலை வரும் என்பதால்தான் வேண்டாம் என்றேன். In your own interest do not talk about this. எனக்கு ஆட்சேபனை இல்லை. Let it be recorded நீங்கள் வேண்டுமென்றால் சொல்லலாம். பாதகம் உங்களுக்குத்தான்.

**திரு அ. ரகுமான்கான்:** என்ன பாதகம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I advised him,

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு மூன்று நாட்களாக நம்முடைய மன்றத்தினுடைய நேரம் பல்வேறு நிலைகளிலே இழுக்கடிப்படுகிறது. நான் உங்கள் மூலமாக ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த விவாதத்தை எப்போது முடித்து வைத்து, எங்களுக்கு வாய்ப்பு கொடுக்கப் போகிறீர்கள்? எங்களுடைய நேரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன். எங்களுடைய நேரம் மூன்றாம் நாளாக பாதிக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மலர்மன்னன், நீங்கள், கடைசியாக உங்களைப் பற்றிச் சொன்னதை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். வேண்டுமென்றால் வைத்துக் கொள்ளலாம். அது உங்களுடைய விருப்பம். எனக்காக அல்ல. அதை நீக்கி விடுகிறேன். இத்தோடு நிறுத்திக் கொள்ளலாம்.

**திரு. அ. மலர்மன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் காவல் துறையில் நடந்த கொடுமையைத்தான் சொன்னேன். தங்கள் மேலான கவனத்திற்கும், இந்த மாமன்றத்தின் கவனத்திற்கும் தெரிய வேண்டுமென்றுதான் சொன்னேன்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்கான டிரிப்யூனல் இது வரையில் அமைக்கப்படவில்லை. 1983 ஆம் ஆண்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள குடும்பங்களில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படுமென்று கூறினீர்கள். தமிழகத்திலே இருக்கின்ற 120 இலட்சம் குடும்பக் கார்டு பெற்ற குடும்பங்களில் ஒருவருக்கு எப்போது வேலைவாய்ப்பு தரப்போகிறீர்கள்? இன்றைக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே 50 சதவிகிதம் மக்கள் தமிழ் நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆக 60 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள், கடந்த 4, 5 ஆண்டுகளில் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை திட்டத்தின் கீழ் 60 லட்சம் பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டதா என்பதைத் தான் இந்த நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, உங்கள் புள்ளி விவரப்படி 50,000லிருந்து 60,000 பேருக்குத்தான் தமிழகத்திலே அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்த நிலை நீடிக்குமானால், இந்தியாவிலே இருக்கின்ற 24 மாநிலங்களிலே நம்முறைய மாநிலத்தில்தான் வேலை வாய்ப்பற்றோர் அதிகமாக உள்ளனர் என்றும் நாளைய தினம் சொல்லும் நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

*திரு. கே. எஸ்.எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத மின் சக்தித் துறைக்கு 1987–88 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளுக்காக முதலீடு என்ற வகையில் வட சென்னையில் அனல் மின் நிலையம் அமைக்க மாநில அரசுக்கு 150 மில்லியன் டாலர் நிதி உதவி வழங்க ஆசிய வளர்ச்சி வங்கியுடன் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அடுத்து மேட்டூர் அனல் மின் நிலையம் முதல் மற்றும் இரண்டாம் கட்டப் பிரிவுகளினால் 420 மெகாவாட் மின் சக்தி கிடைக்கும் என்றும், தூத்துக்குடி அனல் மின் நிலைய 3 ஆம் விரிவாக்கத் திட்டப் பணி தொடங்கி 420 மெகாவாட் மின் சக்தி கிடைக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நீண்ட கண்ணோட்டத்தில் வகுக்கப்பட்ட இந்தத் திட்டங்களை நான் வரவேற்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆளுநர் அவர்கள் உரையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தொடங்கவும், 1987–88 ஆம் ஆண்டிலிருந்து பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும், கிராமங்களில் உள்ள தாய்மார்களுக்கும் இலவசமாகக் காலணிகள் வழங்கும் திட்டத்தையும் வரவேற்கிறேன்.

கரூர்—திண்டுக்கல்—தூத்துக்குடிக்கு அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம், நெய்வேலியில் மூன்றாம் சுரங்கம் வெட்டும் திட்டம், சேது சமுத்திரத் திட்டம், கடலூர் துறைமுக மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு, மத்திய அரசிடமிருந்து நிதியை விரைந்து பெற, இந்த அரசுடன் காங்கிரஸ் கட்சி இணைந்த குரலாக ஒலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





4 கோடி ரூபாய் செலவில் பாசன ஏரிகளை நவீனப்படுத்துவோம் என்று கூறப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஏரிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும், மண் மேடிட்டும் இருக்கின்றன. அந்த ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், மண் மேடிட்ட ஏரிகளை ஆழப்படுத்தவும், ஏரிக் கரைகளை வலுப்படுத்தவும் ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு வரும் வாய்க்கால்களைச் சீரமைக்கவும், அணைகளைச் செப்பனிடவும் இந்த வறட்சிக் காலத்தில் மாஸ்டர் பிளான் போட்டு, இந்தப் பணிகளை எல்லாம் நிறைவு செய்ய, வரும் மழைக் காலங்களில் இந்த ஏரிகளில் தண்ணீரைத் தேக்கிட, அரசு உரிய வேலைகளைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–40)

சமூக நலக் காடுகளுக்காக பல கோடி ரூபாய்கள் நிதி ஒதுக்கீடு செய்து செலவிடப்பட்டுள்ளது. ஆனால் மரங்கள் வளர்க்கப்படுகிறதா என்று சொன்னால் 20 சதவிகிதம் கூட இல்லை என்றுதான் சொல்வேன். இதைவிட, அண்மையில் மதுரைக்கு வந்தபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இயற்கையிலே மலைகளில் வளரக்கூடிய மரங்களை வெட்டுவதன் காரணமாக மழை அளவு குறைகிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். இப்போது கூட மரங்கள் வெட்டுவது நின்றுவிடவில்லை. மரங்களை வெட்டுவது மனிதனை வெட்டுவதற்கு சமம் என்று எடுத்துக் கொண்டு மரம் வெட்டுவதற்கு துணை போகும் சமுதாய விரோதிகள் மீது தயவு தாட்சண்யம் இன்றி இன்று கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையிலே மாநிலத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசு கணிசமான நிவாரணம் அளித்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். 1986 ஆம் ஆண்டு, உழவர்கள் பெற்றிருந்த கடன்களுக்கு வட்டி, அபராத வட்டி, காலங்கடந்த வட்டி ரூ. 125 கோடிக்கு தள்ளுபடி செய்து இருந்தாலும், தமிழகத்திலுள்ள வறட்சி காரணமாக ஒரு பகுதியினர் நேரத்திற்குள்ளாக கட்டியிருக்கின்றார்கள. அதே நேரத்தில் ஒரு பகுதியினர் பணம் கட்ட முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களுக்குக் கால நீட்டிப்பு செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

கால் நூற்றாண்டுக்கும் மேலாக கள், சாராயம் பார்த்திரா தமிழகத்தில் மதுக் கடைகளை திறந்து தமிழகத்தைப் பாழ்படுத்தியதே அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து கள், சாராயக் கடைகளை அரசு தடை செய்துள்ளதை நாங்கள் வரவேற்கிறோம். கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும், மூடியிருப்பது ஏழை மக்களின் துயர் துடைப்பதற்காகவே என்றால், இன்னும் ஒயின்

பிராந்தி கடைகளை திறந்து வைத்திருப்பதும் புதிய கடைகள் திறப்பதும் யாருடைய நன்மைக்காக? ஆகவேதான் சமுதாயத்தின் அடித் தளத்தில் உள்ள மக்களுக்காக திட்டங்களைப் போடுவதாகச் சொல்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்த வழியிலே செல்ல வேண்டாம் என்ற நல்ல நோக்கத்தோடுதான் பூரண மது விலக்கை அமுல் படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கூறுகிறது.

டாக்டர் சமரசம் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் பேசும் போது, சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் பெயர் குறிப்பிடாமல் காங்கிரஸ் கட்சியைப் பற்றி இல்லாததைச் சொல்லியும், மாசு கற்பித்தும் தன் உரையிலே பல்வேறு கட்டங்களிலே பேசியிருக்கிறார். அந்த அடிப்படையில் தான் கவர்னர் அவர்கள் உரையின் மீது பேசும்போது தேசிய சக்திகளில் சில தீய சக்திகள் மாவட்ட கலெக்டரிடம் போய் மனு கொடுக்கின்றன. கொடுக்கும்பொழுது உண்மை இல்லாத விவரங்களைத் தெரிவிக்கின்றனர். கட்சிப் பெரியவர் வந்திருக்கிறார். அவருக்கும் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினருக்குமிடையே 60-ம், 40-ம் வேண்டுமென்று கேட்டு அவர்கள் ஒத்துக் கொள்ளாததால் ஐம்பது ஐம்பது என முடிவாகி விட்டது அடுத்த மாதம் தேர்தல் வந்துவிடும். நாங்கள்தான் ஆளுங்கட்சி என்று அவர்கள் விஷமப் பிரச்சாரங்களையும், வதந்திகளையும் பரப்பி வருகின்றனர் என்றும், ஆளுநர் அவர்கள் உரை வந்த பின்பு அவர்கள் ஏமாந்து போனார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார். இது எப்படி சரியாகும்? இப்படி இல்லாததைக் கூறலாமா? இவர் இப்படிப் பேசியிருக்கிறார் என்று எங்கள் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் உண்மையைக் கூறினால் நீங்கள் எரிச்சல் அடைகிறீர்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது கூட ஒரு சில கருத்துக்களைச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியிலே இருக்கக்கூடிய நண்பர்கள் இப்படியெல்லாம் பேசலாமா என்று ஆதங்கப்பட்டார்கள். டாக்டர் சமரசம் அவர்கள் பேசிய பேச்சு காங்கிரஸ் கட்சியை பொதுமக்கள் மத்தியில் களங்கப்படுத்த வேண்டும் என்பதற்காகவே பேசிய பேச்சாகவே கருதுகிறேன். உண்மைக்கு மாறாக இப்படிப் பேசலாமா? நாங்கள் உள்ள சுத்தியோடு இருக்கிறோம். யாரையும் முதுகில் குத்தி எங்களுக்குப் பழக்கமில்லை. வாரப் பத்திரிகைகளிலும், தினப் பத்திரிகைகளிலும் இந்தச் செய்திகள் எல்லாம் வந்ததே, யார் தகவல் தந்தது? திடீர்த் தேர்தல் என்பது திராவிடப் பாரம்பரியம் இணைய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருட்டிலே சதித் திட்டம் தீட்டி ஆட்சி மாற்றத்தை உருவாக்க முயன்று தோற்றுப் போன தீய சக்திகளுக்கு வேண்டுமானால் ஏமாற்றமாய் இருக்கலாம். அது எங்களுக்கு இல்லை என்பதை இந்த நேரத்திலே மரியாதைக்குரிய உறுப்பினர் டாக்டர் சமரசம் போன்றவர்களுக்குத் தெரி





வித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, எங்களது அன்புக்குரிய தலைவரும், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளருமான மூப்பனார் அவர்கள் பத்திரிகை நிருபர்களிடையே பேசும்பொழுது தமிழகத்திலே அ.தி.மு.க. விற்கு பெரும்பான்மை பலம் உள்ளது, எனவே, இடைத் தேர்தலுக்கு அவசியம் இல்லை எனக் கூறியிருக்கிறார். ஆகவே, இனி வருங்காலத்திலாவது அம்மாதிரியான பொய் வாதங்களைச் சொல்ல வேண்டாமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவு கணவன் மனைவி உறவுபோல நேர்த்தியாக அமைந்துள்ளது என மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் குறிப்பிட்டார்கள். உதாரணத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள கணவன், மனைவி உறவை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் கணவன் மனைவி உறவு அறைக்குள் நடைபெற வேண்டியது. அம்பலத்திற்கு வந்து விட்டதால் தான் பேசுகிறோம் என கொச்சைப்படுத்திப் பேசினார். அதை வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும் கணவன், மனைவியிடையே கருத்து வேறுபாடு ஏற்படுவது இயற்கை, அதை அவர்களே பேசித் தீர்த்துக் கொள்வார்கள். அதற்காக குடும்பத் தலைவன் கோபித்துக் கொண்டு தன்னிடம் வர மாட்டானா என ஏங்கும் விலை மாதினரைப் போல ஏங்க வேண்டாம் என தி.மு.க. வினரை கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கணவன் மனைவி பற்றியே 10, 15 நிமிடங்களாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். சீக்கிரம் முடியுங்கள். உறுப்பினர் டாக்டர் சமரசம் உட்காருங்கள்.

திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஓரிரு வார்த்தைகள் சொல்லி என் உரையை முடித்து விடுகிறேன். வறட்சி நிலைமையை பொறுத்த வரையில், மதுரை மாவட்டம் வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி முழுவதும் கடுமையான வறட்சியின் கோரப் பிடியில் சிக்கி இருக்கிறது. மதுரை மாவட்டத்திற்கு வறட்சி நிவாரண ஆணையாளர் அவர்கள் பார்வையிட வந்திருந்தபொழுது நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க போடி சட்டமன்றத் தொகுதியையும் பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள். வறட்சிப் பகுதி என்று சொல்ல மாட்டேன், பஞ்சப் பகுதியாக உடனடியாக அறிவித்து போர்க் கால அடிப்படையில், குடிநீர் கிடைக்கவும், வறண்டு கிடக்கும் ஏரிகளை மராமத்துச் செய்யவும், வரி வஜா செய்யவும், கடன் தவணைகளை நீட்டிப்புச் செய்யவும், கிணற்றில் தண்ணீர் இன்றி இயங்காத மின் மோட்டார்களுக்கு மின் கட்டணத்தை ரத்து செய்யவும்,

கால்நடைகளுக்கு அரசே பொறுப்பேற்று தீவனங்கள் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, போடி சட்டமன்றத் தொகுதியின் விவசாய பெருமக்கள் நீண்ட காலமாக எதிர் பார்த்துக் கொண்டிருக்கிற 18 ஆம் கால்வாய்த் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 130 அடிக்கு கீழே பாசன கிணற்றை ஆழப்படுத்தியும், தண்ணீர் இல்லாத காரணத்தால் விவசாயம் முழுவதும் பாழ்பட்டுக் கிடக்கிறது. இந்தப் பகுதியில் உற்பத்தியாகக் கூடிய கொட்டக்குடி ஆறு, பெரியாறு போன்ற ஆறுகள் மற்ற மாவட்டங்களுக்கு பயன் அளிக்கிறதே ஒழிய, உற்பத்தியாகக் கூடிய இடத்தில் இருக்கக் கூடிய போடித் தொகுதி மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை. ஆகவே இந்த 18 ஆம் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்தினால்தான் விவசாயம் செழிப்பாக இருக்கும். இல்லாவிடில், மற்ற வெளி மாநிலங்களுக்கு விவசாயிகள் குடி பெயரக் கூடிய நிலை இங்கு ஏற்படும் என்பதை மெத்த கவலையோடு உரிய நடவடிக்கைக்கு அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 1-50.)

அடுத்து, போடித் தொகுதியில் பூதிப்புரத்திற்குத் தெற்கே கொட்ட குடி ஆற்றில் ஒரு பாலமும், போடி நகருக்கு வடக்கே சின்னாற்றில் ஒரு பாலமும், பாலார்பட்டி கிராமத்திற்குத் தெற்கே சின்னமனூர் ரோட்டில் ஒரு பாலமும், போடி உளக்குருட்டி வரை ரோடு வசதியும், கேரளாவோடு இணைக்கின்ற சாக்கனூத்து மலைப் பாதையும், சில்லாமரத்துப்பட்டிக்கு மேற்கேயும், ராசிகாபுரம் கிராமத்திற்கு மேற்கேயும், கருமத்துப்பட்டி கிராமத்திற்கு மேற்கேயும் மூன்று ஏரிகளை அமைத்துக் கொடுக்கவும், போடிநாயக்கனூர் சட்டமன்றப் பகுதியை தொழிற்துறையில் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவித்து தொழில் தொடங்கவும், மதுரை-கொச்சின் வழியாக போடி இரயில் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவும் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏன் இவைகளை முதலிலேயே பேசினேன் என்று சொன்னால், பிறகு பேசுவதற்கு எங்கே மறுத்து விடுவீர்களோ என்ற காரணத்தினால்தான் ஒருசில வார்த்தைகளைப் பேசியிருக்கிறேன்.





மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ரமணி அவர்கள் மத்திய அரசின் பட்ஜெட்டைக் குறைகூறி பேசினார்கள். மேற்கு வங்காளத்திலே ஏதோ பாலும் தேனும் பெருகி ஓடுவதைப்போல நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள். மேற்கு வங்காளம் பஞ்சம் பட்டினியின் மொத்த உருவமாகத் திகழ்கிறது. மனிதனை மனிதனே வைத்து வயிற்றுச் சோற்றுக்காக ரிக்ஷாவிலே இழுக்கக்கூடிய கேவலமான நிலைமையும் அங்கே தான் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மேற்கு வங்கத்தைப் பொறுத்த வரையில் மத்திய அரசு மாற்றான் தாய் மனப்பான்மையில் இருக்கிறது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. உத்திராபதி அவர்கள் தலைவரைப் பார்த்து பேச வேண்டும். பேசுவதற்கு மாத்திரம் முன் வரிசையில் இருக்கின்ற தலைவர்களுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்று கேட்கிறீர்கள். ஆனால், கட்சித் தலைவருக்கு எப்படிப் பேச வேண்டுமென்று தெரியவில்லை என்றால் என்ன நியாயம்? பேசும்பொழுது, சட்ட சபையிலே எப்படிப் பேச வேண்டுமென்று தெரியவில்லை என்றால் என்ன நியாயம்? அங்கே திரும்பி நின்று உறுப்பினரோடு நேருக்கு நேர் பேசுகிறீர்களே?

திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன் : ஒரேயொரு முக்கியமான விஷயத்தைக் கூறிவிட்டு முடித்துவிடுகிறேன். நான் அண்மையிலே கல்கத்தாவுக்குச் சென்றிருந்த பொழுது நான் கண்ணாலே பார்த்ததைத்தான் சொல்கிறேன். இந்தியாவிலே எங்கேயும் இல்லை; அங்கேதான் மனிதனை மனிதன் ரிக்ஷாவிலே வைத்து இழுக்கக்கூடிய அந்தக் காட்சியை நான் பார்த்தேன். வறுமை அந்த அளவிற்கு இருக்கிறது. ஆகவேதான் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

அதுமட்டுமல்ல, மின் உற்பத்தி நிலையங்களெல்லாம் பழுதடைந்து மிக மோசமான நிலையில்—இந்தியாவிலேயே மேற்கு வங்காளம்தான் மோசம் என்று சொல்லக்கூடிய நிலைமை மின்சாரத்திலே அங்கே மோசமாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது.)

திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்திலே நிகழ்த்திய உரைக்காக நன்றி தெரிவித்து முன்மொழியப்பட்டிருக்கின்ற தீர்மானத்தின்மீது, இந்திய குடியரசுக் கட்சியின் சார்பாக நான் அதை வழிமொழிந்து ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே உள்ள ஒன்றரை கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை நான் இங்கே முன் வைக்க நேருமேயானால் மணிக்கணக்கிலே நேரம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் பான்மையாகப் பல விஷயங்களிலே வாய்ப்பை இழந்து போய் விடுகிறார்கள் என்பதைப் போலவே இங்கேகூட நான் வாய்ப் பிழந்த நிலையிலே நின்று கொண்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவரவர்கள், இலவச காலணி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் சார்ந் திருக்கின்ற இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே இதை மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே பெரும்பான்மை தாழ்த்தப்பட்ட மக்களும், செருப்புத் தொழி லிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களும் நல்ல பலன் அடை வார்கள். எனவே, தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக இதை நெஞ்ச நிறைவோடு வரவேற்கிறேன்.

வெயிலின் கொடுமை எந்த அளவிற்கு இருக்கும் என்பதை ஒரு சங்க இலக்கியப் பாடலிலே சொல்வார்கள். ஒரு தாய் தன் குழந்தையை எடுத்துக்கொண்டு பாலையிலே நடந்து போய்க் கொண்டிருந்தாளாம். பாலையின் கொடுமையைத் தாங்க முடியாத அந்தத் தாய், தான் பெற்ற குழந்தை என்றும் கூடப் பார்க்காமல், குழந்தையைப் போட்டு மிதித்ததாக ஒரு பழைய பாடல் சொல்லும். தாய்மையேகூட வெயிலைத் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்குத் தடுமாறிப் போய்விடும் என்று சங்க இலக்கியப் பாடல்களிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கொடுமை இன்றைய தாய்மார்களுக்கு வந்து விடக் கூடாது ; இன்றைய தாய்மார்கள் அனுபவிக்கக்கூடாது என்கிற தாய் உள்ளத்தோடு புரட்சித் தலைவரவர்கள் இந்தத் திட் டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அவரை தாழ்த்தப் பட்ட மக்கள் சார்பாக நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மேலும், இந்த ஆளுநர் உரையிலே நகர்ப் புறங்களுக்கு மட்டுமல்லாமல் கிராமப்புறங்களிலும் வீடு கட்டித்தரும் பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு, ஐ.நா. மன்றத்தின் சார்பாக சர்வதேச வீட்டுவசதி அளிக்கும் ஆண் டாக கொண்டாடப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிற வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்க வீட்டுமனை வழங்கும் திட்டத்தை மேற்கொண்டி ருக்கிறார்கள். அப்படி வீடு கட்ட வழங்கப்பட்ட மனைப்

1987 மார்ச் 6] [திரு. கு. தமிழரசன்]

பட்டாக்களில் பெரும்பகுதி கோர்ட்டுக்குப் போய், வழக்கு முடியாமல் நீதிமன்றங்களிலே தேங்கிக்கிடக்கின்றன. ஆயிரக்கணக்கான வழக்குகள் தீர்க்கப்படாமலிருக்கின்றன. அதன் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்கள் வீடு இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 1.5 கோடி தாழ்த்தப்பட்ட மக்களில் 60 இலட்சம் பேர் வீடு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்றால் நீதிமன்றங்களிலே தேங்கிக்கிடக்கின்ற வழக்குகளை முடிக்கப்பெற வேண்டியது அவசியம். ஆகவே, மேதகு ஆளுநர் அவர்கள் மூலமாக ஒரு ஸ்பெஷல் ஆர்டினன்ஸ் பிறப்பித்து, தனிச் சட்டத்தை இயற்றி வீட்டுமனை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தனி நீதிமன்றங்களை ஏற்படுத்தி, இந்த வழக்குகளை விசாரித்து, உடனடியாக தீர்வு காண வேண்டும். வழக்குகளை முடித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மேதகு ஆளுநர் உரையில் கள், சாராயக் கடைகள் மூடப்பட்டு, மேல் நாட்டு மதுவகைகள் மட்டும், அந்தக் கடைகள் மட்டும் திறந்திருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது, இதன் காரணமாகப் பெருமளவுப் பாதிக்கப்படுகிறவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்தான். தாழ்த்தப்பட்ட மக்களும், குப்பத்து மக்களும், சேரிவாழ் மக்களும் தெரிந்தோ தெரியாமலோ எப்படியோ குடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள், பிராந்திக் கடைகள் மட்டும் திறந்திருக்கும் என்றால் அதை வாங்கிக் குடிக்கிற அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு வசதி இல்லை. பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்தில் கள், சாராயம் இருக்கிறது. கர்நாடகத்தில் கள், சாராயம் இருக்கிறது. புதுவையில் கள், சாராயம் இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக கள், சாராயக் கடைகளை மூடிவிட்டால் குடிப் பழக்கத்திற்கு ஆளாகி விட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இப்போதே போலீசாரால் கைது செய்யப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. குப்பத்திலே வாழ்கின்ற மக்கள், சேரியிலே வாழ்கின்ற மக்கள் தங்கள் மீது எந்த நேரத்தில் வழக்குப் போடுவார்களோ என்று அஞ்சி அஞ்சி சாகிறார்கள்.

இன்றைக்கு கள்ளச்சாராயம் பெருக்கெடுத்து ஓடுகிறது. திருவொற்றியூர் பகுதியில் கள்ளச் சாராயம் குடித்து இறந்துவிட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்தான். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களை இந்தக் கொடுமையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்றால், நான் அன்போடு கேட்டு

[திரு. கு. தமிழரசன்] [1987 மார்ச் 1

கொள்கிறேன், யார் சொன்னாலும், யார் எதிர்த்தாலும் யாருக்கும் அஞ்சாமல் தமிழ்நாட்டில் கள், சாராயக் கடைகளைத் திறக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

அது மட்டுமல்ல. இந்த ஆண்டு வடாற்காடு மாவட்டத்தைப் பிரித்து, புதிதாக சம்புராயர் மாவட்டம் அமைக்கப்படும் என்றும் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு அது செயல்படும் என்றும் தெரிய வருகிறது. நாங்கள் நீண்டகாலமாக பேரறிஞர் அம்பேத்கார் பெயரில் ஒரு மாவட்டத்தை அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எங்கள் கோரிக்கைக்கு செவி சாய்த்து, சென்னையில் ஒரு மருத்துவமனைக்கு டாக்டர் அம்பேத்கார் பெயரை வைத்தார்கள். இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியில், இந்த மன்றத்திலே டாக்டர் அம்பேத்கார் படத்தை வைக்க வேண்டுமென்று கேட்டு, போராடி, சிறைக்குக் கூட சென்றோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தான் டாக்டர் அம்பேத்கார் படம் வைக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதைப் போன்று வடாற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு பேரறிஞர் அம்பேத்காரின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வருகின்ற ஏப்ரல் 14-ந் தேதி டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள் வருகிறது. அவருடைய இந்தப் பிறந்த நாளில் டாக்டர் அம்பேத்கார் பெயரால் ஒரு மாவட்டம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வந்தால் தமிழ் நாட்டிலே இருக்கிற 1.5 கோடி தாழ்த்தப்பட்ட மக்களும் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களால் உவந்தளிக்கப் பெற்ற உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த நாட்டு மக்களுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் தன்னுடைய கருத்துக்களை மேதகு ஆளுநர் உரையின் மூலமாக அறிவித்திருப்பதை வரவேற்று அதிலே ஒன்றிரண்டு கருத்துக்களை எடுத்து வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். 4, 5 தினங்களாக இங்கே நடை பெற்றுக் கொண்டிருக்கிற விவாதங்களை நான் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். இந்த விவாதங்களிலே கலந்துகொண்ட உறுப்பினர்கள், எந்தக் கட்சியாக இருந்தாலும், முப்பது இலட்சம் வீடுகள் கட்டப்படுவதைப் பற்றிச் சொல்லத் தவறவில்லை. மத்திய சர்க்காரிலே கூட 6000 கோடி ரூபாய் துண்டு விழுகிற



1987 மார்ச் 6] [திரு. கே. பாலாஜி]

பட்ஜெட்டைப் போட்டிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம் ; அவர்களுடைய நல்ல எண்ணத்தை வரவேற்கிறோம். அது எப்படி சாத்தியமாகும், எப்படி பிரதிபலிக்கும் என்று நாங்கள் கேட்கவில்லை. அதைப் போன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 30 இலட்சம் வீடுகளை ஏழை எளிய மக்களுக்கு கட்ட வேண்டும் என்று இன்றைக்கு முயன்று கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 2-00)

இன்னும் இரண்டாண்டுக் காலம் இருக்கிறது. ஆனால் அதற்குள்ளாகவே திருமணம் ஆன மூன்று மாதத்திலேயே பிள்ளை வேண்டுமென்று சொன்னால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் இன்னும் சிறிது நேரத்திற்கு நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. கே. பாலாஜி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களாலும் கூட ஆணித்தரமாகப் பதில் சொல்ல முடியும். என்றாலும் எங்களை ஆட்சியில் மக்கள் அமர்த்தி இருக்கிற காரணத்தால் தான் அமைதியாகப் பேசுகிறோம். ஆனால் இங்கே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 12 பேர் இருந்தாலும் ஒதுக்கப்படுகின்ற நேரத்தில் பாதி நேரத்தை அவர்களுக்கு நீங்கள் ஒதுக்கி விடுகிறீர்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை தயவு செய்து நீங்கள் மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ போலீஸ் எல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தான் புதிதாக நியமனம் செய்யப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் தவறே செய்யாமல் இருந்தால் கூட அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்ற வகையில் செயல்படுவதைப் போன்ற உணர்வைத் தமிழகத்தில் திட்டமிட்டு உருவாக்கி வருகிறார்கள்.

நான் கூட 1973–74-ல் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டினேன் செங்கற்பட்டிலே. 7 மணிக்கு என்னைக் கைது செய்தார்கள். ஆனால் 11 மணிக்கு நான் கலைஞரைக் கொலை செய்ய முயற்சித்ததாகச் சொல்கிறார்கள். நான் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இருந்தேன். அதையெல்லாம் கூட எங்களால் ஆணித்தரமாகச் சொல்ல முடியும்.

நான் தொகுதிக்கு வருகிறேன். காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா பிறந்த நகரம். செங்கை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும். காரணம் கிழக்குப் பகுதி வளர்ந்த பகுதி. நாங்கள் இருக்கிற மேற்குப் பகுதி வளராத பகுதி. ஆனால் இன்றைக்கு முற்போக்கான மாவட்டம் என்ற காரணத்தால் ஏராளமான நெசவாளர்கள் வாழ்கிற எங்கள் பகுதி முன்னேற முடியாமல், எந்தத் தொழிற்சாலையும் உருவாக முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அண்ணன் டாக்டர் நாவலர் அவர்கள் அம்மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து எங்கள் மாவட்டத்தினை பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டும். இல்லை என்றால் காஞ்சிபுரம் தாலுக்காவையாவது பின்தங்கிய தாலுக்கா என்று அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் ஏராளமான நெசவாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு சரிகை விலை கூடிவிட்ட காரணத்தால் அவர்களுடைய தொழில் பாதிக்கப்பட்டு இருக்கிறது. எனவே மத்திய சர்க்காரிடத்திலே சொல்லி குஜராத்திலே உற்பத்தியாகிற அந்த சரிகையை தமிழகத்திலே கட்டுப்பாட்டு விலையில் கொடுத்து, சரிகை விலையைக் குறைத்து நெசவாளர்களுக்குத் தொய்வு இல்லாமல் சரிகை வழங்கி அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும் பல்வேறு பிரச்சினைகளை மானியங்களிலே பேசுகிறேன் என்று சொல்லி வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கும், மற்றும் உள்ளவர்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். வாழ்க அண்ணா நாமம்.

*திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டின் முன்னோடியாக மாண்புமிகு கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற நான் ஆசைப்படுகிறேன்.

கவர்னர் உரையில் 12 மாவட்டங்களை வறட்சிக்குட்பட்ட மாவட்டங்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். அத்துடன் பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டத்தையும் சேர்க்க வேண்டும் என்று அருள்கூர்ந்து நான் கேட்டுக் கொள்கிறேன். பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் இருக்கின்ற கண்மாய்களில் மற்றும் வாய்க்கால்களில் ஒரு நாள் கூட தண்ணீர் பாயாத நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு மழை பெய்யாத நிலைமை அங்கே இருக்கிறது. இருப்பினும் அப்பகுதி வறட்சிக்கு இலக்கான பகுதி என்று இன்னும் அறிவிக்கப்படாமல் இருக்கிறது. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலிருந்தும், இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்தும் அதாவது அம்மாவட்டங்களில் வறட்சியின் கொடுமை உச்சிக்குச் சென்றுவிட்ட காரணத்தால் அங்கிருந்து இரண்டு, மூன்று இலட்சத்திற்கும் மேலான மக்கள்



வெளியேறிக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. இவற்றை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும். உடனடியாக எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் முன்பணமாக குறைந்தது 20 இலட்சம் ரூபாய் நிதியாவது ஒதுக்கி அவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி அவர்கள் வெளியேறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கடுமையான தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. கிராமங்களில் எல்லாம் தண்ணீர் கிடைப்பதற்கு வழியில்லாத நிலைமையில் மக்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எல்லா கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர் திட்டத்தைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கூட்டுக் குடிநீர் திட்டம் கொடுக்க முடியாத கிராமங்களில் ஆழ்குழாய் கிணறுகளை அமைத்து மற்ற கிராமங்களில் கிணறுகளை வெட்டி தண்ணீர் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய திருவாடானைத் தொகுதியைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டத்திலும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலும் இரண்டாகப் பிரிந்து இருக்கிறது. ஆகவே நான் இரண்டு மாவட்டங்களுக்கும் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் பசும்பொன் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்தான் கலந்துகொள்ள எனக்குவாய்ப்பு இருக்கிறது. மற்றொரு மாவட்டமான இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு நான் செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. எனவே இங்கே இருக்கிற நிதியமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை செய்துதர வேண்டும் என்று சொல்லி திருவாடானை ஒன்றியத்தை பசும்பொன் மாவட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவாடானை தொகுதியில் உள்ள கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து 17 பஞ்சாயத்துக்கள் திருவாடானை ஊராட்சி ஒன்றியத்திலும், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திலே இருந்து 15 ஊராட்சி மன்றங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆர். எஸ். மங்கலம் ஒன்றியத்திலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் குடிதண்ணீர் வசதி செய்வதற்கும்; விவசாய ஆழ் குழாய் துளை கிணறுகள் போடுவதற்குமான நிலைமை இல்லாமல் இருக்கிறது. ஏனென்றால் அவைகள் இராமநாதபுரம் மாவட்டத்தோடு சேர்ந்திருப்பதால், அந்த மாவட்டத்திற்கு ஆழ் குழாய் கிணறுகள் அமைக்க வேண்டிய வாய்ப்பு இல்லை என்ற காரணத்தைக் காட்டி விவசாய ஆழ்குழாய் கிணறு அமைக்க மறுக்கப்படுகிறது. ஆர். எஸ். மங்கலம் ஒன்றியத்தைச சேர்ந்த 15 ஊராட்சி மன்ற தலைவர்களும், கண்ணங்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த 17 ஊராட்சி மன்ற தலைவர்களும் பசும்பொன்

[திரு. கா. சொர்ணலிங்கம்] [1987 மார்ச் 6

மாவட்டத்தில் சேர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தை போட்டு அனுப்பி இருக்கிறார்கள். அதை அரசு கவனத்தில் கொண்டு வருகின்ற காலத்திலாவது திருவாடானை ஊராட்சி ஒன்றியத்தை பசும்பொன் மாவட்டத்தோடு சேர்த்து அம்மக்களுடைய குறைகளை நீக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்.

விதி 32—ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 10—3—1987 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை அன்று தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, செவ்வாய்க் கிழமை (10—3—1987) அன்று காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.]

பின்னர் பேரவை பிற்பகல் 2.06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்,

24. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு முத்திரைத் தாள் (கருவிகளை குறைத்து மதிப்பிடுவதை தடுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 21—11—1986 ஆம் நாளிட்ட 1192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 2/1899) 75-ஏ (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.



1987 மார்ச் 6]

25. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 10—9—1986 ஆம் நாளிட்ட 928 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

26. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 1984 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

9. 1983—84 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வணிகம்) உள் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத் தொன்றாவது அறிக்கை.

10. 1971—72 முதல் 1975—76 வரையிலான ஆண்டுகளுக் கான தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1983—84) அளித்த முப்பத்தி ஒன்பதாம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கை.

98795
D
V211,31 N87
N87.33.2